விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 27 சனிக்கிழமை (10.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 173

## முன்னாள் போராளிகள் மீது
# பயங்கரவாத தடையை
# அமுல் படுத்தாதது ஏன்?
## மகிந்த அணி கொதிப்பு



(கொழும்பு)

தெற்கில் சில குற்றச் செயல்களுக்காக அமுல்படுத்தப்படுகின்ற பயங்கரவாதத் தடைச்சட்டம் வடக்கில் முன்னாள் போராளிகள் மீது அமுல்படுத்தப்படாதது ஏன் என கேள்வி எழுப்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி, எந்தவித சாட்சியும் இன்றி முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க, ஒருவருட காலமாக சிறை வைக்கப்பட்ட போதிலும் முகமாலையில் பொலிஸார் மீது துப்பாக்கி சூடு நடத்திய முன்னாள் போராளிக்கு ஒரே வாரத்தில் பிணை வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது. (23-ம் பக்.)

## பிளாஸ்ரிக் அரிசி; உடன் அறிவியுங்கள்

(கொழும்பு)

நாட்டின் வர்த்தக சந்தையில் அல்லது மக்களின் பாவனைக்கு எந்த வகையிலாவது பிளாஸ்டிக் அரிசி அல்லது பிளாஸ்டிக் முட்டை கிடைக்கப்பெற்றால் அது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு அறிவிக்குமாறு சுகா 24☛

## உடனடி நிவாரணம் தேவை - சம்பந்தன்

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக தெற்கில் வெள்ளத்தினாலும் வடக்கில் வரட்சியினாலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க 23☛

## ஆசிய அபி. வங்கி நிவாரண உதவி

(கொழும்பு)

நாட்டின் தென்பகுதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது. 23☛

## மிதிவெடிகள் இரண்டு மீட்பு

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி பகுதியில் இருந்து நேற்றைய தினம் இரண்டு மிதிவெடிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மயிலிட்டி வடக்கு ஜே/251 கிராம சேவகர் பிரிவில் 23☛

## காற்றின் வேகம் அதிகரிக்கக்கூடும்

(கொழும்பு)

புத்தளம் தொடக்கம் மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரை மற்றும் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிரதேசங்க 23☛

## சட்டவிரோத விகாரை, தாதுகோபுரம்
## நிர்மாணிப்பை நிறுத்துமாறு கோரி சாவ. பிரதேச சபை மனு தாக்கல்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் சட்டவிரோதமான முறையில் கட்டப்படும் தாதுகோபுர நிர்மாணப்பணிகளை நிறுத்துமாறு கோரி சாவகச்சேரி பிரதேச சபையால் சாவகச்சேரி நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்து நாவற்குழி விகாராதிபதியை எதிர்வரும் இருபதாம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு சாவகச்சேரி நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

மேற்படி விகாரையின் தாதுகோபுர நிர்மாணப் பணிகளை நிறுத்துமாறு கோரி நேற்றைய தினம் சாவகச்சேரி பிரதேச சபை செயலரினால் மனுதாக்கல் செய்யபட்ட நிலையிலேயே.

சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் 24☛

## அனர்த்தம்; விரைவில் தீர்வு

(கொழும்பு)

அனர்த்த நிலைமைகளால் பாதிக்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களின் 23☛

## ரூ.5 கோடி பெறுமதியான ஹெரோயின் கடலில் மீட்பு






(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை கடற்பரப்பில் சுமார் 5கோடி ரூபாய் மதிப்புள்ள ஹெரோயின் போதைப் பொருள் மிதந்து வந்த நிலையில் அதனை 24☛

## "பிரமிட்" ஒருவர் கைது

(கரணவாய்)

சட்டவிரோத நிதி நடவடிக்கையில் (பிரமிட்) ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை நெல்லியடி பொலிஸார் கைது 23☛

## 94-வது நாளாகவும் தொடரும் தவிப்பு!

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட நிலையிலும் மற்றும் ஏனைய வழிகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை 94 ஆவது நாளாகவும் தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த சுழற்சி முறையிலான 23☛

## உழவு இயந்திரத்தின்
## இழுவை பெட்டி தடம்புரழ்வு; குடும்பஸ்தர் பரிதாப மரணம்



(மல்லாவி)

மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட அம்பகாமம் காட்டுப் பகுதியில் உள்ள ஆற்றில் இருந்து ஆற்று மணலை ஏற்றி பயணித்த உழவு இயந்திரத்தின் இழுவைப் பெட்டி தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் சம்பவ இடத்திலேயே குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 24☛

## திடீரென வீழ்ந்த வெடி பொருட்கள்!

(கட்டைப்பறிச்சான்)

திருகோணமலை ஆரம்ப பாடசாலை ஒன்றின் வளாகத்தில் திடீரென வந்து விழுந்த அடையாளம் காணப்படாத வெடிபொருட்களினால் அந்த பாடசாலையிலுள்ள 23☛

## ஜெனிவாவில் இலங்கை விவகாரம்

(ஜெனிவா)

ஜெனிவாவில் நடந்து வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கை குறித்த அறிக்கை ஒன்று தொடர்பாக நாளை மறுதினம் திங்கட்கிழமை விவாதிக்கப்படவுள்ளது. நீதிபதிகள் மற்றும் 23☛

## சட்டவிரோத மணல் அகழ்வு; 8 உழவு இயந்திரங்கள் சிக்கின

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி வந்த 8 உழவு இயந்திரங்களும் அவற்றின் உரிமையாளர்களும் நேற்றைய தினம் மணியந்தோட்டம் பகுதியில் வைத்து விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அரியாலை பூம்புகார் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து நேற்றைய தினம் பகல் கொழும்புத்துறை மணியந்தோட்டம் பகுதியால் மணல் கடத்தலில் ஈடுபட்ட கொள்ளையர்கள் தொடர்பில் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

இதில் மணல் அகழ்ந்தவர்களும் சாரதிகளும் தப்பியோடிய நிலையில் உழவு இயந் 23☛

## தேநீருக்கான விலை அதிகரிப்பு

(கொழும்பு)

தேநீர் மற்றும் பால் தேநீருக்கான விலை நேற்று முன்தினம் தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் ஐந்து ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார். 23☛

## வெடி பொருட்கள் மீட்பு



(கரணவாய்)

தொண்டைமானாறு பகுதியில் காணி ஒன்றினைச் சுத்தம் செய்த போது வெடி பொருட்கள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பகுதியில் காணி உரிமையாளர் காணியினைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையில் நேற்று ஈடுபட்டிருந்த 23☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவது தவறல்ல

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கடிதம்

விடுதலைப் புலிகளின் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதில் தவறேதும் இல்லை என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

கடந்த மே மாதம் முள்ளிவாய்க்கால் நினைவுதினமொன்றை ஏற்பாடு செய்திருந்தமை குறித்து அருட்தந்தை எழில் ராஜேந்திரன் பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார்.

அத்துடன் இன்றளவும் தமக்கு பாதுகாப்புத் தரப்பினரால் தொல்லை கொடுக்கப்படுவதாக அவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனை தீவிரமாக அலசி ஆராய்ந்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு, விடுதலைப் புலிகளின் உறுப்பினராக இருந்து உயிரிழந்தவர் என்ற ஒரே காரணத்திற்காக ஒருவருக்கு அஞ்சலி செலுத்துவதிலிருந்து அவரது உறவினர்களைத் தடுக்க முடியாது என்று வலியுறுத்தியுள்ளது.

மரணித்த ஒருவருக்கு அஞ்சலி செலுத்துவது பொதுவான நிகழ்வாகும் . அவ்வாறான நிகழ்வொன்றைத் தடுக்காது அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமாக மட்டுமே இலங்கைப் பிரஜைகள் அனைவரும் தாம் சமமாக நடத்தப்படுவதாக உணர முடியும்.

எனவே விடுதலைப் புலிகளின் மாவீரர்கள் தொடர்பான அஞ்சலி நிகழ்வுகளைத் தடுப்பதற்குப் பதில் அதனை நடத்துவதற்கான வசதிகளையும் அதற்கான ஏற்பாட்டாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் தேசிய நல்லிணக்க அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியின் பொறுப்பாகும் என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்ந்தும் வலியுறுத்தியுள்ளது. (செ-11)

## கண்ணகி அம்மன் ஆலயத்தில் வடக்கு முதல்வர் வழிபாடு



வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று பிற்பகல் 12.15 மணியளவில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்துக்கும் சென்று அங்கு நடைபெற்ற பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

இவரோடு வட மாகாண சபை உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டு வழிபாட்டில் ஈடுபட்டனர். (செ-281)


### பெறுகை அறிவித்தல்
### வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை - 2017

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
02. பெறுகையானது பொதுநிதிச்சுற்றறிக்கை 04/2016 (1) இற்கமைவாக வட மாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
03. தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
04. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் ஆங்கில மொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.எஸ்.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 12.06.2017 தொடக்கம் 30.06.2017ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
05. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து 30.06.2017ஆம் திகதி 2.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
06. பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 21.06.2017ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.
07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | தோப்பு வீதி புனரமைத்தல் ஏழாலை | 1.51 | 1 1/2 மாதம் | C9 | 16000.00 |
| 2 | ஞானவைரவர் வீதி புனரமைத்தல் மயிலங்காடு | 1.43 | 1 1/2 மாதம் | C9 | 15000.00 |
| 3 | தன்னை வீதி புனரமைத்தல். உடுவில் | 3.75 | 02 மாதம் | C8 | 38000.00 |
| 4 | மல்வம் 2ம் குறுக்கு வீதி புனரமைத்தல் | 1.76 | 1 1/2 மாதம் | C9 | 18000.00 |
| 5 | விளாங்கனை வீதி புனரமைத்தல் கந்தரோடை | 3.88 | 02 மாதம் | C8 | 39000.00 |
| 6 | சந்தை வீதி காப்பெற்றிடல், சுன்னாகம் | 3.22 | 02 மாதம் | C8 | 33000.00 |

தி. சுதர்சன்
தவிசாளர்
பிரதேச சபை பெறுகைக்குழு
வலிகாமம் தெற்கு பிரதேச சபை
சுன்னாகம். (C-8770)


# கோத்தா, மகிந்தவுக்கு எதிராக எந்த விசாரணைகளும் இல்லை

## கஜேந்திரகுமார் விசனம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கூறிய கருத்து, இனப்படுகொலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கும் மிகப் பெரிய துரோகம் என குறிப்பிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

யுத்தமொன்றை இனவழிப்பின் ஊடாக வெற்றிகொள்ளும் அளவிற்கு, இராணுவம் செயற்படக்கூடியதாக இருந்தால், எந்தளவு தூரத்திற்கு அரசினுடைய கட்டுப்பாட்டிற்குக் கீழ் செயற்பட்டிருக்கின்றது என்பதே உண்மை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைப் படையினர் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களை ஒட்டுமொத்தமாக மீறியதாக தான் குற்றஞ்சாட்டவில்லை என்றும் ஒரு சிலரே அந்த சட்டங்களை மீறியுள்ளதாகவும் எதிர்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் அண்மையில் நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இதுதொடர்பில் சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் இன அழிப்பை மேற்கொண்ட தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் எனக் குறிப்பிட்ட அவர்,

இதுவரைக்கும் இனப்படுகொலைக்கு எதிரான குற்றம் தொடர்பில் கோத்தபாய ராஜபக்சவோ, மகிந்த ராஜபக்ஷவோ, எவருக்கும் எதிராக எந்தவிதமான விசாரணைகளும் நடத்தப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், ஊழல் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதென்றால் தற்போதைய அரசாங்கமும் சேர்ந்தே ஒட்டுமொத்த இனப்படுகொலைக்கும் துணை போயுள்ளார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கங்கள் சார்ந்தோ, தனிநபர்கள் சார்ந்த குற்றம் அல்ல என்றும் இது ஒட்டுமொத்த இலங்கை அரசு சார்ந்த குற்றம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனைக் குறைத்து மதிப்பிடுவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்யும் துரோகமாகவே எதிர்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் இவ்வாறு கூறியுள்ளதாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பல் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## சஞ்சீவ இடமாற்றம்

யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபராக கடமையாற்றியிருந்த சஞ்சீவ தர்மரட்ண இடமாற்றலாகி பயிற்றுவித்தல் மற்றும் ஆட்சேர்ப்பு பிரிவு அதிகாரியாக சேவையின் நிமித்தம் கொழும்புக்கு இடமாற்றம் பெற்று இன்று சனிக்கிழமை செல்லவுள்ளார்.

கடந்த வருடம் யூலை மாதம் தொடக்கம் தற்போது வரையான காலப் பகுதி வரை யாழ். மாவட்டத்தில் உள்ள 17 பொலிஸ் நிலையங்களின் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபராக சஞ்சீவ தர்மரட்ண கடமையாற்றியிருந்தார்.

அதேவேளை போக்குவரத்து பிரிவிற்கு பொறுப்பாக இருந்த பிரதி பொலிஸ்மா அதிபர் கே.பி பிரணாந்து யாழ் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த இடமாற்றம் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு இணங்கியும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடனும் பொலிஸ் திணைக்களத்தின் தேவைக்கு அமைவாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தவிர வட பகுதிக்கு வெற்றிடமாக இருந்த சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பதவிக்கு கே.ஈ.ஆர்.எல் பெர்ணான்டோ நியமிக்கப்பட்ட நிலையில் அவர் தனது கடமையை பொறுப்பேற்றுள்ளார். இவர் ஏற்கெனவே விசேட பாதுகாப்பு பிரிவின் அதிகாரியாக செயற்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## முதலீட்டாளர் பயிற்சிப் பட்டறை

"நீங்களும் சிறந்த முத லீட்டாளராகலாம்" எனும் கருப்பொருளில் பங்குச் சந்தைகள் முதலீட்டு உத்திகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை இன்று காலை 9.30 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரை யாழ்-பங்குப்பரிவர்த்தனை கேட்போர்கூடத்தில் நடைபெறும். (சத்திரச்சந்திக்கு அருகாமை)

பதிவுக் கட்டணம் ரூபாய் ஆயிரம். 021 222 1455 அல்லது 077 782 2014க்கு தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். (செ)

## மணல் அகழ்வு; சாரதி கைது

சட்டவிரோதமான முறையில் மணலினை அகழ்ந்து அதனை எடுத்துச் சென்ற ஹப் ரக வாகனத்தைக் கைப்பற்றியதுடன் அதன் சாரதியையும் கைது செய்துள்ளதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் சாவகச்சேரிப் பொலிஸார் ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த போது நுணாவில் பகுதியில் வைத்து மேற்படி வாகனத்தை சோதனையிட்ட போதே சட்டவிரோதமான முறையில் தனங்கிளப்பில் அகழப்பட்ட மண் மட்டுவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டமை தெரிய வந்துள்ளது.

இதையடுத்து வாகன சாரதியை கைது செய்த பொலிஸார் வாகனத்தையும் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனில் தொங்கு பாராளுமன்றம்

# எந்த கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை

(லண்டன்)

**பிரிட்டன் பாராளுமன்றத் தேர்தலில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி உள்ளிட்ட எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் அந்நாட்டில் தொங்கு பாராளுமன்றம் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது.**

பிரிட்டன் பாராளுமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு நேற்று முன்தினம் முடிவடைந்த நிலையில், நேற்று வாக்குகள் எண்ணும் பணிகள் நடைபெற்று வந்தன.

இதில், பிரதமர் தெரசா மே தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சிக்கும், ஜெர்மி கார்பின் தலைமையிலான தொழிலாளர் கட்சிக்கும் இடையில் போட்டி நிலவியது.

தொடக்கத்தில் முதல் சுற்று வாக்கு எண்ணிக்கை முடிவில் தொழிலாளர் கட்சி முன்னிலை பெற்றது. ஆனால் இறுதியில் கன்சர்வேட்டிவ் கட்சி தொழிலாளர் கட்சியை விட சுமார் 50 இடங்களை அதிகம் வெற்றி பெற்றுள்ளது.

மொத்தமுள்ள 650 இடங்களில் 645 இடங்களுக்கும் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி 314 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. தொழிலாளர் கட்சி 260 இடங்களை பிடித்துள்ளது. இன்னும் 5 இடங்களின் முடிவுகள் தான் மீதமுள்ளது.

இதனால், கன்சர்வேட்டிவ் கட்சி பெரும்பான்மையை இழந்துள்ளது. பெரும்பானன்மை பெறுவதற்கு 326 தொகுதிகளில் வெற்றி பெற்றாக வேண்டும்.

இதனால், ஆட்சி அமைப்பதற்கு பிரதமர் தெரசா மே இதர கட்சிகளின் ஆதரவை எதிர்பார்க்கும் நிலை உருவாகியுள்ளது. இதனால் பிரிட்டனில் தொங்கு பாராளுமன்றம் ஏற்படுவது உறுதியாகியுள்ளது.

ஸ்கொட்லாந்து தேசியவாத கட்சி 35, லிபரல் ஜனநாயக கட்சி 12, ஜனநாயக ஒற்றுமைவாத கட்சி 10 இடங்களை கைப்பற்றியுள்ளது. இதனால் மற்ற கட்சிகளை தெரசா மே அணுகி கூட்டணி ஆட்சி அமைக்க வாய்ப்புள்ளது. (இ-3)



645 தொகுதிகளின் வெற்றி நிலவரம்

**பிரிட்டன் தேர்தல் முடிவுகள்**

| | |
|---|---|
| கன்சர்வேட்டிவ் கட்சி | 314 |
| தொழிலாளர் கட்சி | 261 |
| ஸ்காட்லாந்து தேசியவாத கட்சி | 35 |
| லிபரல் ஜனநாயக கட்சி | 12 |
| ஜனநாயக ஒற்றுமைவாத கட்சி | 10 |
| மற்றவை | 13 |

# பசு வதைக்கு முன் மனித வதையை நிறுத்துவோம்

## அமைச்சர் மனோகணேசன் தெரிவிப்பு



இலங்கையில் பசுவதையை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை பரிசீலனை செய்வோம். இது மிகவும் நல்லது. மனிதனும் ஒரு மிருகம்தான். மிருக பட்டியலில், முதலாவது மிருகம் மனிதர்தான். ஆகவே பசுவதையை போல, மனித வதையையும் முற்று முழுதாக இந்நாட்டில் நிறுத்துவோம்.

மனித வதையை கண்டும் காணாதது போல் இருந்துவிட்டு, பசு வதையை நிறுத்துவோம் என்று மாத்திரம் சொல்வது முறையானது அல்ல என ஜனநாயக மக்கள் முன்னணி - தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

பசுவதையை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்த நிகழ்வை, சுவாமி மகா கர்ததாஸ் ஏற்பாட்டில் கொழும்பு புதுசெட்டித்தெரு, சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம், கொழும்பு ஹவ்லக் வீதி பௌத்த சுவர்ண ஜயந்தி மண்டபத்தில் நேற்று நடத்தியது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் மனோ கணேசன், சிறப்பு விருந்தினர்களாக பக்தவேதாந்தா சுவாமி பிரபு பாத, அதுரலியே ரத்ன தேரர் எம்பி, வெள்ளவத்தை விகாராதிபதி சுகதானந்தா தேரர் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பசுவதையை நிறுத்துவதன் மூலமாக கிடைக்கப் பெறும் நன்மைகளை பற்றி இங்கு பேசப்பட்டது. அவற்றை நான் கவனமாக கேட்டேன். அவற்றில் பல உண்மைகள் பொதிந்துள்ளன. இது தொடர்பான தேசிய கருத்தொருமைப்பாடு ஏற்பட வேண்டும். அதற்கு சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம் எடுக்கும், முயற்சிகளுக்கு எனது ஒத்துழைப்பு கிடைக்கும். முடியாது, இல்லை என்று என்னால் நிராகரிக்க முடியாத ஒரு அமைப்புதான், கொழும்பு சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம் ஆகும். உண்மை யில் இந்த நிறுவனத்தின் சுவீகார புத்திரன் என என்னை நான் நினைக்கிறேன்.

இங்கு அதுரலியே ரத்ன தேரர் எம்பி உரையாடினார். எனக்கு மிகவும் நெருங்கிய வெள்ளவத்தை விகராதிபதி சுகதானந்தா தேரரும் இங்கே உரை நிகழ்த்தினார். பசுவதை பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அவர்களுடன் நான் உடன்படுகிறேன். விகாராதிபதி சுகதானந்தா தேரர், என்னை பாராளுமன்றத்தில் அச்சமின்றி பேசும்படி அறிவுரை வழங்கினார்.

அவரது அறிவுரைக்கு நன்றி. நான் எப்போதும் அச்சமின்றியே பாராளுமன்றத்திலும், இங்கே வெளியிலும் உரையாற்றி செயற்படுகிறேன் என்பதை அவருக்கு நான் அறியத்தருகிறேன். அவருக்கு என்னைப்பற்றி தெரியாமல் இல்லை. உள்ளதை உள்ளபடியே நான் பேசுகிறேன். நீதிக்கும், என் மனச்சாட்சிக்கும் தவிர எவருக்கும் நான் அஞ்சேன்.

மிருக பட்டியலில் இருக்கின்ற முதலாவது மிருகம் மனிதர்தான். ஆகவே பசுவதையை போல, மனித வதையையும் முற்றுமுழுதாக இந்நாட்டில் நிறுத்துவோம். மனித வதையை கண்டும் காணாதது போல் இருந்துவிட்டு பசு வதையை நிறுத்துவோம் என்று மாத்திரம் சொல்வது முறையானது அல்ல. மனித வதையை அடையாளம் கண்டு நிறுத்துவோம். பசு வதையையும் நிறுத்துவோம். அனைத்து மிருக வதைகளையும் நிறுத்துவோம். அதற்கு நான் தயார்.

உண்மையில் இந்துத்துவம்தான், பௌத்தத்துக்கும் மூலம் ஆகும். அனைத்தும் இந்தியாவில் இருந்து இங்கே வந்ததாக இப்போது பேசிய சுகதானந்தா தேரர் அவர்களே சொன்னார். ஆம், புத்தர் இங்கே வந்து போனதாக ஒரு கருத்து உள்ளது. அவரும் இந்தியாவில் இருந்து [illegible] [illegible] த்தை பிக்குனி, மகிந்த தேரர், அரச மரக்கிளை, புனித தந்தம், கலை, கலாசாரம், மொழி, பண்பாடு, மக்கள் இனங்கள் எல்லாமே இந்தியாவில் இருந்துதான் இங்கே வந்தன. வெவ்வேறு காலகட்டங்களில் இங்கே வந்தன. இதை புரிந்துகொண்டால், இந்நாடு தனி ஒரு பிரிவினருக்கு மாத்திரமே சொந்தம் என்ற சிந்தனை எவ்வளவு பிழையானது என்பது புரியும்.

அதுபோல் இந்நாட்டில் இந்துக்களும், பௌத்தர்களும் ஒன்று சேருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. அதற்கு நான் முழுமையாக எனது ஆதரவை பதிவு செய்கிறேன். ஆனால், அது இந்நாட்டில் வாழும் ஏனைய இன, மதங்களுக்கு எதிரான கூட்டாக இருக்க முடியாது. அத்தகைய குரோத சிந்தனையை இந்துத்துவமும், பௌத்தமும் போதிக்கவில்லை. எல்லோரையும் அரவணைக்கவே எமது மதங்கள் போதிக்கின்றன. இதை நாம் மனதில் கொள்ள வேண்டும். இதுவே நமது அரசாங்கத்தின் கொள்கை [illegible] அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# இனவாத செயற்பாடுகளுடன் எனக்கு எந்தத் தொடர்புமில்லை

## கோத்தபாய கூறுகிறார்

அண்மைக்காலமாக முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இனவாத செயற்பாடுகளுடன் தனக்கு எந்தவொரு தொடர்பும் இல்லையென்று கோத்தபாய ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

இது தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றையும் இட்டுள்ளார்.

அண்மைக்காலமாக முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனவாத செயற்பாடுகளின் பின்னணியில் எனது தொடர்பு இருப்பதாக வதந்திகள் பரவிக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான இனவாத செயற்பாடுகளின் பின்னணியிலோ அல்லது பொதுபல சேனாவுடனோ எனக்கு எந்தவொரு தொடர்பும் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன்.

நாங்கள் அனைவரும் ஒரே நாடு என்ற ரீதியில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அண்மைக்கால இனவாத செயற்பாடுகளுடன் கோத்தபாயவின் பெயரை சம்பந்தப்படுத்தி யாரும் எதுவித செய்திகளையும் பிரசுரிக்காத நிலையில் கோத்தபாய இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் தனது பேஸ்புக் பதிவின் எந்தவொரு இடத்திலும் அவர் பொதுபல சேனாவுக்கு எதிராகவோ, முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத் தாக்குதல்களைக் கண்டித்தோ எந்தவொரு வார்த்தையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 14,655 பேர் முகாம்களில்


இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டோரில், 4,012 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 655 பேர் இன்னும் 159 முகாம்களில் உள்ளனர் என்று, அனர்த்த முகாமைத்து மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணிக்கு வெளியிட்டுள்ள, புள்ளிவிபர அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இயற்கை அனர்த்தங்களினால், 12 மாவட்டங்களைச் சேர்ந்தோர் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்த மாவட்டங்களில், 155,474 குடும்பங்களைச் சேர்ந்த 603,105 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இயற்கை அனர்த்தங்களினால், இதுவரை 212 பேர் மரணமடைந்திருந்தனர். 152 பேர் காயமடைந்தும் 78 பேர் காணாமல் போயும் இருந்தனார். இந்த அசாதாரண நிலைமை காரணமாக, 3,059 வீடுகள் முழுமையாகவும் 20,285 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஹிப் அல் ஹசன், மகமதுல்லாவின் சிறப்பாட்டத்தால் நியூசிலாந்தை 5 விக்கெட்டுக்களால் வென்றது வங்கப்புலி



பங்களாதேஷ் அணிக்கு எதிரான சம்பியன்ஸ் டிராபி லீக் போட்டியில் அணித் தலைவர் வில்லியம்சன் அரைச் சதம் அடிக்க நியூசிலாந்து அணி 50 ஓவரில் 265 ஓட்டங்கள் எடுத்தது.

இங்கிலாந்து மற்றும் வேல்சில் சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் நடக்கிறது. அணிகள் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, லீக் முறையில் போட்டிகள் நடக்கின்றன. நேற்று வேல்ஸ் தலைநகர் கார்டிப்பில் நடக்கும் 'ஏ' பிரிவு லீக் போட்டியில் நியூசிலாந்து, பங்களாதேஷ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித் தலைவர் வில்லியம்சன் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

நியூசிலாந்து அணிக்கு ரோஞ்சி (16) ஏமாற்றினார். கப்டில் 33 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின், இணைந்த அணித் தலைவர் வில்லியம்சன், ரோஸ் ரெய்லர் ஜோடி சிறப்பாக செயல்பட்டது. இருவரும் அரைச் சதம் கடந தனர். வில்லியம்சன் 57 ஓட்டங்களில் ஆட்ட மிழந்தார். டஸ்கின் பந்தில் டெய்லர் (63) சிக்கினார். மொசாடக் 'சுழலில்' நெயில் புளும் (36), நீஷம் (23), கோரி ஆண்டர்சன் (0) ஆட்டமிழந்தனர்.

முடிவில், நியூசிலாந்து அணி 50 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 265 ஓட்டங்கள் எடுத்தது.

சான்ட்னர் (14), சவுத்தீ (10) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்து வீச்சில் மொசாடெக் உசைன் 3 விக்கெட்டுக்களையும் ரஸ்கின் அகமட் 2 விக்கெட்டுக்களையும் ருவல் உசைன், முஸ்ரபிசுர் ரஹ்மான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ சார்பில் தமிம் இக்பால் மற்றும் சௌமியா சர்க்கர் ஆகியோர் களமிறங்கினர். இதில் முன்னைய இரு போட்டிகளிலும் சிறப்பாக ஆடிய தமிம் இக்பால் பெரிதும் எதிர்பார்க்கப் பட்ட போதும் ஏமாற்றமளித்த அவர் ஓட்டம் எதனையும் எடுக்காது வெளியேறினார். சௌத்தியின் வேகத்தை தாக்குப்பிடிக்க முடியாது சௌமியா சர்க்கர் 3 ஓட்டங்களுடனும் சபீர் ரஹ்மான் 8 ஓட்டங்களுடனும் வெளியேறினர். முஸ்டபிகுர் ரஹீம் 14 ஓட்டங்களுடன் மில்னேயின் பந்து வீச்சிலும் பவிலியன் திரும்பினர்.



அதன் பின் சகிப் அல் ஹூசைன்னுடன் ஜோடிசேர்ந்த மஹமதுல்லா சிறப்பாக துடுப்பெடுத்தாடினார்கள். இணைப்பாட்டமாக 224 ஓட்டங்களை பெற்றிருந்த போது வெற்றிக்கு 9 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் சகிப் அல் ஹூசைன் 114 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஆடிய மஹமதுல்லா 102 ஓட்டங்களுடனும் மொஸ்டக் உசைன் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

47.2 ஓவரில் 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றியிலக்கை அடைந்து 5 விக்கெட்டுக்கலால் வெற்றி பெற்றது.



பந்து வீச்சில் சௌத்தி 3 விக்கெட்டுக்களும வோல்ட், மில்னே தலா ஒரு விக்கெட்டும் கைப் பற்றினர்

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சகிப் அல் ஹூசைன் தெரிவு செய்யப்பட்டார்.

# மாபெரும் கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கார்த்திகேசு குணரத்தினம் அவர்களின் ஆதரவில் நடத்தப்படும் கரபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமையும் மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.00 மணி முதல் நிலைய மைதானத்தில் நடைபெறும்.

கலாநிதி சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் யாழ்.மாவட்ட கிரிக்கெட் பயிற்றுனர் வி.கே.சண்முகலிங்கமும் சிறப்பு விருந்தினராக கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரனும் கலந்து கொள்கின்றனர்.

இச்சுற்றுப் போட்டியில் சிங்க றெஜிமென்ட் இராணுவ அணி, கொடிகாமம் இராணுவ அணி, மன்னார் மாவட்ட அணி, கிளிநொச்சி மாவட்ட அணி, ஆவரங்கால் இந்து இளைஞர் அணி, புத்தூர் கலைமதி அணி மற்றும் இளவாலை மத்திய அணி ஆகிய அணிகள் பங்கு பற்றுகின்றன.

இறுதிப்போட்டியானது ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 மணி முதல் மின்னொளியில் நடைபெறும்.

# முரளிதரனுக்கு ஐ.சி.சியின் அதி உச்ச கௌரவம்




ஐ.சி.சி.யின் ஹோல் ஒவ் பேம் விருது இலங்கை அணியின் சுழல் ஜாம்பவான் முத்தையா முரளிதரனுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

ஐ.சி.சி.யின் அதியுச்ச கௌர்வமான வாழ நாள் சாதனையாளர் விருதான ஹோல் ஒவ் பேம் விருது இம்முறை நான்கு பேருக்கு வழங்கப்படுகின்றது.

அந்தவகையில் இந்த விருதை பெறும் முதல் இலங்கையர் முத்தையா முரளிதரன் என்பது விசேட அம்சமாகும்.

லண்டனில் தற்போது நடைபெற்றுவரும் ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான போட்டியின இடைவேளையின் போது இந்த விருது முரளிக்கு வழங்கப்பட்டது.

இந்தியாவை வீழ்த்தி வெற்றிக்களிப்பில் உள்ள இலங்கையர்களுக்கு ஐ.சி.சி. அதியுச்ச கௌரவம் இலங்கை வீரருக்கு கிடைத்திருப்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சியே.

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் இறுதிப்போட்டியில் சிமோனா ஹாலெப் - ஜெலீனா ஆஸ்டாபென்





பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் இறுதிப்போட்டியில் சிமோனா ஹாலெப் லாத்வியா வீராங்கனை ஜெலீனா ஆஸ்டாபென்கோவுடன் இன்று பலப்பரீட்சை நடத்துகிறார்.

கிராண்ட்சிலாம் போட்டியான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில் நடந்து வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு அரை இறுதியில் 4-ம் நிலை வீராங்கனை சிமோனா ஹாலெப் (ரூமேனியா)- 2-ம் நிலை வீராங்கனை பிளிஸ்கோவா (செக்குடியரசு) மோதினர்.

இதில் ஹாலெப் 6-4, 3-6, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று இந்தப் போட்டிக்கு முன்னேறினார். அவர் இறுதிப் போட்டியில் லாத்வியா வீராங்கனை ஜெலீனா ஆஸ்டாபென் கோவுடன் இன்று பலப்பரீட்சை நடத்துகிறார்.

சிமோனா ஹாலெப் கோப்பையை வென்றால் தரவரிசை பட்டியலில் ஜெர்மனி வீராங்கனை கெர்பரை பின்னுக்கு தள்ளிவிட்டு முதலிடத்தை பிடிப்பார்.

# எதிரணியை எளிதாக கருதக்கூடாது சக வீரர்களுக்கு ஹோலி அறிவுரை




இலங்கையிடம் தோல்வியடைந்ததை தொடர்ந்து எதிரணியை எளிதாக கருதக் கூடாது என வீரர்களுக்கு விராட்ஹோலி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

8-வது சம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் 'பி' பிரிவில் உள்ள இந்தியா-இலங்கை மோதின.

முதலில் விளையாடிய இந்தியா 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 321 ஓட்டங்கள் குவிதததது. ஷிகர் தவான் (123 ஓட்டங்கள்) சதம் அடித்தார்.

ரோகித் சர்மா 78 ஓட்டங்களும், தோனி 63 ஓட்டங்களும் எடுத்தனர். கடினமான இலக்குடன் விளையாடிய இலங்கைக்கு குணதிலக (76 ஓட்டங்கள்), குசல் மெண்டிஸ் (89 ஓட்டங்கள்) குவித்தனர்.

கடைசி கட்டத்தில் அணித் தலைவர் மத்தியூஸ், குணரத்ன அணியை வெற்றி பாதைக்கு அழைத்து சென்றனர்.

அந்த அணி 48.4 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 322 ஓட்டங்களும் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் ஆட்டத்தில் இந்தியா 3 விக்கெட் மட்டுமே கைப்பற்றியது. புவனேஸ்வர் குமார் ஒரு விக்கெட் வீழ்த்தினார். மீதி 2 விக்கெட்டும் ரன் அவுட்டாகும்.

பிரதான பந்து வீச்சாளர்கள் யாரும் விக்கெட் கைப்பற்றாமல் ஏமாற்றம் அளித்தனர். 300 ஓட்டங்களுக்கு மேல் குவித்தும் தோற்றதற்கு பந்து வீச்சில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாததே காரணம்.

தோல்வி குறித்து இந்திய அணித் தலைவர ஹோலி கூறியதாவது.

நாங்கள் போதுமான ஓட்டங்களை குவித்தோம். எங்களது பந்து வீச்சாளர்களை நம்பினோம். ஆனால் இலங்கை சிறப்பாக துடுப்பெடுத்தாடி விட்டது. அவர்கள் உத்வேகத்தை இழக்காமல் நல்ல ஷொட்டுகளை அடித்தனர்.

நாங்கள் ஒன்றும் வெல்ல முடியாத அணி அல்ல. எங்களது பந்து வீச்சாளர்கள் நன்றாகத்தான் வீசினார்கள். ஆனால் அதை சரியாக செயல்படுத்தவில்லை.

எந்த ஒரு அணியையும் எளிதாக எடுத்து கொள்ளக்கூடாது. அது போன்று நினைத்து விளையாடினால் எதையும் எதிர்பார்க்க முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்தியா தனது கடைசி ஆட்டத்தில் தென்னாபிரிக்காவுடன் 11ஆம் திகதி மோதுகிறது. இதில் வெற்றி பெறும் அணி அரை இறுதிக்கு முன்னேறும்.

ஒரு வேளை போட்டி மழையால் ரத்து செய்யப்பட்டால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப்படும். அப்படி நடந்தால் இந்தியா, தென்னாபிரிக்கா தலா 3 புள்ளிகளுடன் இருக்கும்.

இந்தியாவுக்கு ஓட்டச் சராசரி (+1.272) நல்ல நிலையில் இருப்பதால் அரை இறுதிக்கு முன்னேறும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு பிரஜைக்கு 5லட்சம் டொலர்களுடன் இலங்கையில் கணக்கு

(கொழும்பு)

வெளிநாட்டுப் பிரஜைகள் 5இலட்சம் டொலர்களுடன் இலங்கையில் கணக்கு ஆரம்பிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. வெளிநாட்டுப் பிரஜைகள் இலங்கையில் கணக்கு ஆரம்பிப்பதற்கான சட்டங்களில் திருத்தம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விசேட வைப்புக் கணக்குகள் என்ற பெயரில் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட உள்ளது. அமெரிக்க டொலர்களுக்கு மேலதிகமாக ஸ்ரேலிங் பவுண்ட்கள், சுவிஸ் பிராங்குகள், அவுஸ்திரேலிய டொலர்கள், சிங்கப்பூர் டொலர்கள், கனேடிய டொலர்கள், ஜப்பானிய யென் மற்றும் யூரோ போன்றனவும் இவ்வாறு வைப்புச் செய்ய முடியும் என்ற வகையில் சட்டத் திருத்தங்கள் செய்யப்பட உள்ளன. இதற்கு மேலதிகமாக துறைசார் அமைச்சர் வேறு நாடுகளின் நாணயப் பெறுமதிகளை வைப்புச் செய்ய அனுமதிக்க முடியும் என்ற வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளது. (இ-7)

# கணவன் - மனைவி மோதல்; ஏழுமாதக் குழந்தை கொலை

(கொழும்பு)

மாத்தறை, ஹக்மன, தெனகம பிரதேசத்தில் 07 மாத குழந்தை ஒன்றின் கழுத்தை நெரித்து கொலை செய்த அந்த குழந்தையின் தாயையும் தந்தையையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கணவன்- மனைவிக்கு இடையில் ஏற்பட்ட மோதலால் இந்தக் குழந்தை கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தையின் தாய் துணி ஒன்றினால் குழந்தையின் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹக்மன பொலிஸார் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு - 11.12.1943 உதிர்வு - 13.05.2017

## அமரர் வேலுப்பிள்ளை சபாரத்தினம் ஜே.பி

அவர்களின் சிவபதம் குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (11.06.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் புற்றளைச் சித்தி விநாயகராலய அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் (இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.)

மேலும் எம்மையெல்லாம் மீளாத் துயரில் மூழ்கவிட்டு மீளாத் துயில் கொண்ட செய்தி கேட்டு ஓடோடி வந்து உதவிகள் புரிந்தவர்கள், நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபங்கள் தெரிவித்தோர், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

என்ற வள்ளுவரின் குறளுக்கமைய துன்பத்தில் மூழ்கியிருக்கும் எங்கள் மனங்களை ஆறுதல்படுத்திக் கொள்கின்றோம். எங்கள் நல்வாழ்விற்கு வழிகாட்டி எமக்காகவே வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே இனியும் எங்களுக்கு வழிகாட்டியாய் இறைவருள் ஒருவராக இருப்பீர்கள். உங்கள் ஆத்மா இறைவனிடம் அமைதி கொள்ளப் பிரார்த்திக்கின்றோம். சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பெரியவளவு, புற்றளை, புலோலி. (C-8759)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# விற்பனையாகிறது

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு
தோற்றும் மாணவர்களுக்கு நாடளாவியரீதியில்
15 ஆரம்பக் கல்வி வளவாளர்களின் ஆக்கத்தில்

## பூமாலை
Model Papers

15 எதிர் பார்க்கை மாதிரி வினாத்தாள்கள்
(Part 1 & 2) விடைகளோடு 52 பக்க

விலை. 525/- விசேட கையேடு அடங்கியது.

2016ம் ஆண்டு முதன் முதலாக பூமாலை வெளிவந்து
அதிக மாணவர்கள், ஆசிரியர்களின் பெரும் வரவேற்பைபெற்று
மீண்டும் 2017ம் ஆண்டு தனித்துவத்துடன் பூமாலை வெளிவந்துள்ளது.

பூமாலை வாங்கும் மாணவர்களுக்கு விஷேட பரிசு!

20.08.2017 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும்
அரச புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் மொழி மூலம்
தேசிய ரீதியில் முதல் நிலை பெறும் மாணவருக்கும்,
மாணவர் கல்வி கற்கும் பாடசாலைக்கும்
விஷேட பரிசு 100,000.00
விபரங்களும், விண்ணப்ப படிவம் பூமாலை பொதியில்
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

விற்பனையாளர்களும் பாடசாலைகளும் மொத்தமாக பெற்றுக்கொள்ள தொடர்புக்கு

வெளியீடு
யுனிலங்காஸ் பப்ளிகேஷன்
இல.10-1/5, (No.342, Trust Complex Sea Street)
முதலாம் மாடி, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு 13.
தொ.பேசி : 077-6258778

மாணவர்களின் வெற்றி ! பெற்றோர், ஆசிரியருக்கு புகழ் ! இதுவே எமது நோக்கம் !


# இராசி பலன்

10.06.2017
(வைகாசி 27, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
பிரதமை முன்னிரவு 8.59 மணிவரை
மூலம் முழுவதும்
சுபநேரம் 2.52-4.22 மணிவரை
இராகுகாலம் 8.52-10.22 மணிவரை
திருஞானசம்பந்தர் குருபூசை

வளவன்

**கிரகநிலை** – சந்திராஷ்டமம் ரோகினி

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி புத | செவ் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் ரோகினி | | |
| | | | ராகு |
| சந் | சனி | | குரு |

**மேடம்:** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**இடபம்:** அல்லல்கள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** நண்பர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**சிம்மம்:** பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**கன்னி:** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், வாகன பழுதுச் செலவுகள் குறையும், சுப செலவுகள் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்:** நீண்டநாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, இளைய சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம், தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, [illegible] தொழிலில் வளர்ச்சி கூடும்.

**தனுசு:** சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்:** எடுத்த காரியங்களில் திருப்பங்கள் ஏற்படலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**கும்பம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தனவரவை பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**மீனம்:** மற்றவர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விருதுக்காகப் பயனாளிகளிடம் பணம் கறக்கும் சமுர்த்திக் குழு

(யாழ்ப்பாணம்)

போதை ஒழிப்பு வாரத்தில், சமுர்த்தி குழுவினர் தாம் விருதினை பெறுவதற்காக சமுர்த்தி பயனாளிகளிடம் இருந்து அதிகளவு பணத்தை வலுக்கட்டாயமாக அறவிடுவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

போதை ஒழிப்பு வாரம் அனைத்து பிரதேச செயலகங்களிலும் நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது. அதில் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இம்மாதம் 30 ஆம் திகதி வரை அச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இச் செயற்றிட்டங்களில் ஒன்றாக போதை பொருட்கள் வாங்கும் பணத்தை, வறுமைக்கோட்டுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு தேவையான உதவி வழங்குவதனை நோக்கமாக கொண்டு சேமிக்கப்பட்டு வருகிறது. விரும்பியவர்கள் எவ்வளவு தொகையையும் வழங்க முடியும், அதிகமான தொகை வழங்குவதாயின் சமுர்த்தி உத்தியோகத்தர் ஊடாக காசோலையாக வழங்கப்பட வேண்டும் எனவும் அல்லது கள சேமிப்பு பற்றுச்சீட்டை வழங்கி பணத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போதை ஒழிப்பு வாரத்தில் அதிகூடிய பணத்தை சேமிக்கும் சமுர்த்தி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசினால் விருது வழங்கப்படுவது வழமை. அந்த விருதினை பெறுவதற்காக சில பிரதேச செயலர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் சமூகமட்ட குழுக்கள் இணைந்து சமுர்த்தி பயனாளிகளை கட்டாயப்படுத்தி அவர்களிடம் இருந்து அதிகளவு பணத்தை பறிக்கிறார்கள் என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில்உள்ள சில பிரதேச செயலர்கள் சமுர்த்தி முகாமையாளர்களிடம் இரண்டு இலட்சம் ரூபாய் வரையில் சேமிக்க வேண்டும் எனவும் கட்டாயப்படுத்தியுள்ளனர்.

இதனால் உத்தியோகத்தர்கள் சமூகமட்ட அமைப்புக்களுடன் இணைந்து பொதுமக்களை வாட்டிவதைக்கின்றனர். அவர்களிடம் இருந்து வலுக்கட்டாயமாக 200 ரூபாய் தொடக்கம் 1000 ரூபாய் வரையில் அறவிடுகின்றனர். கட்டாயமாகச் செலுத்தப்பட வேண்டிய பணம் எனவும் இதை வழங்காவிட்டால் முத்திரை நிறுத்தப்படும் எனவும் மிரட்டப்படுகின்றனர்.

அன்றாடம் கூலித் தொழில் செய்யும் மக்கள் 500 ரூபாய் உழைத்து முழுவதையும் போதை ஒழிப்புக்கென கொடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இது வறுமைக் கோட்டுக்குட்பட்ட பயனாளிகளிடத்திலேயே அறவிடப் படுகிறது. இது தொடர்பில் உரிய அதிகாரிகள் அக்கறையுடன் செயற்படுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள முகாமையாளர் கே.மகேஸ்வரனை தொடர்பு கொண்டு கேட்ட போது போதை ஒழிப்பு வாரத்தில் கட்டாயமாக எவருக்கும் பணம்வழங்கதேவையில்லை. அவ்வாறு பொதுமக்களிடத்தில் கட்டாயமாக பணம் அறவிடப்பட்டால் எமது அலுவலகத்தில் அறி விக்க முடியும். இது சட்டத்துக்கு முரணான செயல் எனவும் அவர் தெரிவித்தார். (இ-9)



நாகர் கோவில் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

முதல் நாள் இரவு பண்டமெடுப்புடன் ஆரம்பமான பொங்கல் உற்சவத்தில் காவடி, கரகம் என்பன இடம்பெற்றன. அபிஷேகம், பூசை வழிபாடுகள் இடம்பெற்று வழிவெட்டலுடன் பொங்கல் உற்சவம் நிறைவுற்றது. (படம்:-மகாலிங்கம்)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-3)

## மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும் நவோக்தர சத (1008) சங்காபிஷேகமும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம் பெறும். (இ-3)

## வடமாகாண ஆணழகன் போட்டி

யாழ். மாவட்ட உடற்கட்டமைப்பு மற்றும் விருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாண ஆணழகன் போட்டி யுத்த காலத்திற்குப் பின்னர் முதன் முறையாக சட்டபூர்வமாக யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று 10 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ

## நீலங்களின் சமர் யூனியன் கல்லூரி மைதானத்தில்







தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான நீலங்களின் சமர் இன்றும் நாளையும் யூனியன் கல்லூரி மைதானத்தில் முதற் தடவையாக நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் சி.விக்னராஜா, சிறப்பு விருந்தினராக யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ச.சிவனேஸ்வரன், கௌரவ விருந்தினராக சங்கீதா ஏஜென்சி முகாமைத்துவ பணிப்பாளர் றூபசங்கர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## வீதியின் இருபக்கமும் கற்குவியல் பயணிப்போர் பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை குளத்தருகே அமைந்துள்ள பிரதான வீதியின் இருபக்கமும் கொட்டப்பட்ட கற்குவியலால் வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை காணப்படுவதாக அப் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பாசையூர் அந்தோனியார் ஆலயம் கொடியேறி நவநாட் பூஜைகள் தினமும் இடம்பெற்று வருவதனால் ஆலயத்திற்கு செல்லும் பல நூற்றுக் கணக்கானோர் இப் பிரதான வீதியை பயன்படுத்துகிறார்கள். இந் நிலையில் வீதியோரம் குவிக்கப்பட்டுள்ள கற்களால் வாகனங்கள் பயணிக்க முடியாத நிலையும் சில வேளைகளில் விபத்துக்களும் இடம்பெறுகின்றன.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் இதனை கவனத்தில் எடுத்து இதற்கான தீர்வைப் பெற்றுத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-105)




## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்- கில்னர் ஒழுங்கை ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 24 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-3)

## 21 ஆவது பதவியேற்பு வைபவம்

கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் 21 ஆவது பதவியேற்பு வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு கலட்டி சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட ஆளுநர் லயன். தேவா பீற்றர், அவரது துணைவி லயன்.யசிந்தா, கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் லயன் ஆர். விக்னேஸ்வரன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கே. நந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)



தெற்கில் இயற்கை அனர்த்தத்தால் உயிரிழந்தவர்களுக்கு இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி புதன் கிழமை மாலை கழக மைதானத்தில் நடைபெற்றது. இயற்கை அனர்த்தத்தால் உயிரிழந்த மூவின மக்களின் ஆத்ம சாந்திக்காக ஈகச்சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இதில் கழகத் தலைவர், செயலாளர், பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

## 'மகுடம்' சிறப்பிதழ் அறிமுகம்

யாழ். இலக்கிய நண்பர்கள் நடத்தும் மகுடம் 5 ஆவது ஆண்டு மலர் பேராசிரியர் மௌனகுரு இரட்டைச் சிறப்பிதழ் அறிமுக நிகழ்வு இன்று 10 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு 296 பிரதான வீதி, யாழ்ப்பாணம் கலைத்தூது கலையகத்தில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறும். (இ-8)

## குணமாக்கல் வழிபாடு

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மறை மாவட்ட அருட்பணி போல் றொபின்சன் அடிகளாரால் குணமாக்கல் வழிபாடு நடைபெறும். எதிர்வரும் 13 ஆம் திகதி தேர்ப்பவனி பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (இ-5-107)

## 'தமிழ் அமுதம்-9'

தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் தமிழ் அமுதம் -09 நாளை 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானை தமிழ் கோட்ட கம்பன் கல்லூரி வளாகத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக வலம்புரிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் நடுவராகக் கடமையாற்றும் மகாபாரதம் இன்றளவும் ஏற்றமுற்று நிலைக்க பெரிதும் காரணமாய் அமைவது கதைச் சிறப்பே! பாத்திரப் படைப்பே! அறமேன்மையே! கவியமைப்பே! எனும் விவாத அரங்கு இடம்பெறும். (இ-8)



உலக உணவுத் திட்டத்தின் கீழ் காசுக்கான வேலைத்திட்ட ஆரம்ப நிகழ்வு கரணவாய் மேற்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யா தலையிட்டது உண்மையே

## ட்ரம்பால் பதவி நீக்கம் செய்யப்பட்ட எப்.பி.ஐ. முன்னாள் இயக்குநர் பரபரப்பு பேட்டி

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யா தலையிட்டது உண்மையே எனவும், இது தொடர்பான விசாரணையை ஜனாதிபதி ட்ரம்ப் தடுக்க வில்லை எனவும் எப்.பி.ஐ முன்னாள் இயக்குநர் ஜேம்ஸ் கோமி பரபரப்பு பேட்டி அளித்துள்ளார்.

அமெரிக்க புலனாய்வு துறையான 'எப்.பி.ஐ.'யின் இயக்குநராக இருந்தவர் ஜேம்ஸ் கோமி. இவரை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அதிரடியாக பதவி நீக்கம் செய்தார். ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டனின் பிரசார மின்னஞ்சல்களை ரஷ்ய உதவியுடன் ட்ரம்ப் திரு டியதாக குற்றச்சாட்டுள்ளது. அது குறித்த விசாரணையில் இவரது செயற்பாடு திருப்தி அளிக்க வில்லை என நீதித்துறை அறிக்கை அனுப்பியிருந்தது.

அதன்அடிப்படையில்கோமி பதவி நீக்கம் செய்யப்பட்டதாக டொனால்ட்ட்ரம்ப் தெரிவித்திருந்தார். ஆனால் மின்னஞ்சல் விவகாரத்தில் ட்ரம்புக்கு ரஷ்யா உதவி செய்த விவகாரத்தை இவர் வெளியிட்டு விடுவார் என பயந்து பதவி நீக்கம் செய்யப்பட்டார் என ஜனநாயக கட்சியினர் குற்றஞ்சாட்டினர்.

இந்நிலையில், எப்.பி.ஐ. முன்னாள் இயக்குநர் ஜேம்ஸ் கோமியிடம் அதிமுக்கியமான விவகாரங்கள் குறித்து நாடாளுமன்ற நிலைக்குழு விசாரணை நடத்தவுள்ளது. இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யா தலையிட்டது உண்மை என ஜேம்ஸ் கோமி ஊடகங்களுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார். மேலும் இது தொடர்பாக அமெரிக்க நாடாளுமன்ற செனட் அவையில் வாக்குமூலம் ,அளிக்க தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் தன்னுடைய தோல்விக்கு காரணம் எப்.பி.ஐ. இயக்குநர் ஜேம்ஸ் கோமிதான்என்றுஹிலாரிகிளின்டன் குற்றஞ்சாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-3)


மகாதேவ ஆச்சிரமம்
MAHADEVA ASHRAMAM
Regd.No : SVP 104/44 of 29.10.1976
Tel : 024 324 3443
ஜெயந்தி நகர், கிளிநொச்சி
மகாதேவாய நம
ஆண்டுப் பொதுக் கூட்டம்

காலம் :- 11.06.2017 ஞாயிற்றுக்கிழமை
மாலை 4 மணி
இடம் :- ஆச்சிரம பிரார்த்தனை மண்டபம்

நிகழ்ச்சி நிரல்

- தேவாரம்
- தலைமையுரை :- ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவசுவாமிகள்
- செயலாளர் அறிக்கை
- நிர்வாக சபைத் தெரிவு
- பண்ணிசை மண்டபம் பற்றிய விடயம்
- நன்றியுரை

சகல அங்கத்தவர்களையும் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

அன்பே சிவம்

இறைபணியில்
ஞானசிரோன்மணி
ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்
குருபீடாதிபதி.
(9165)


# கட்டாரிலுள்ள இலங்கையர்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி அறிவிப்பு

கட்டாரிலுள்ள இலங்கையர்கள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

கட்டாரில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு மத்தியில், சிக்கியுள்ள இலங்கை யர்களின் நிலை தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை தயாரிக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் 13 ஆம் திகதி குறித்த அறிக்கையை அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ரவிகருணாநாயக்க மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரல ஆகியோருக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

கட்டாரில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் இலங்கையர்கள் பணியாற்றி வருகின்ற நிலையில், அவர்கள் தொடர்பில் அரசாங்கம் அதீத கரிசனை கொண்டுள்ளது.

பயங்கரவாத அமைப்புகளுக்கு கட்டார் அரசாங்கம் உதவி செய்வதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில், மத்திய கிழக்கை சேர்ந்த ஐந்து நாடுகள் கட்டாருடனான இராஜதந்திர உறவுகளைதுண்டித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினிசெவ் 12 ல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:O/Lபிரான்ஸ் NOT PR<br>தொ.இ: B/7407 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரைசூரிசெவ் 7 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7421 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7408 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 37<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்:BFA<br>தொ.இ: G/7434 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>கி.பா: 31செவ் 12 ல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BA/ சொந்ததொழில்<br>தொ.இ: B/7409 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம்செவ் 8 ல்<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: G/7441 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 62<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/7410 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 45செவ் 7 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc/ பொறியியளாளர்<br>தொ.இ: G/7442 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# இரட்டைப் படுகொலை சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

ஏறாவூரில் இடம்பெற்ற இரட்டைப் படுகொலைச் சம்பவம் தொடர்பான 6 சந்தேக நபர்களுக்கும் விளக்க மறியல் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தின் மேலதிக நீத்வானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான எம். ஐ.எம்.றிஸ்வி முன்னிலையில், ஏறாவூர் சுற்றுலா நீதவான் மன்றில் நேற்று அவர்களை ஆஜர்படுத்திய போதே, நீதவான் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்கமறியலை நீடித்துள்ளார்.

ஏறாவூர், முகாந்திரம் வீதிக்கு அருகில் அமைந்துள்ள வீட்டில் வசித்துவந்த தாயான நூர் முஹம்மது ஹுஸைராவும் (வயது- 56) அவரது மகளான முஹம்மது யூசுப் ஜெஸீரா பானுவும் (வயது-32) கொலை செய்யப்பட்ட நிலையில் கடந்த வருடம் செப்டெம்பர் 11 ஆம் திகதி அவர்களின் வீட்டில் சடலங்கள் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


# சேவை நலன் பாராட்டு

## திருமதி. தவநாயகி கனகரத்தினம்

B.A (Dip.in Ed) SLTS 1



சேவை விபரம்

யா/மண்டைதீவு மகா வித்தியாலயம் - 1989.05.15-1999.05.11
யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம் - 1999.05.12-2017.06.09

எமது பாடசாலையில் கடந்த 18 வருடங்கள் ஆசிரியராக, பிரதி அதிபராக சிறந்த சேவையாற்றி 10.06.2017 அன்று தனது 60 ஆவது அகவையில் ஓய்வு பெறும் பிரதி அதிபர்

திருமதி
தவநாயகி கனகரத்தினம்

தனது ஓய்வுக் காலத்தில் குடும்பத்தாருடன் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் நீடுழி வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்

(9173)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா குருமன்காடு ஸ்ரீ காளியம்மன் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது . காலை 7.30 மணியளவில் வசந்தமண்டப பூஜை நடைபெற்று அதனை தொடர்ந்து காளியம்மன் உள்வீதி வலம் வந்து 8.30 மணியளவில் தேரில் எழுந்தருளி அருள்பாலித்தார். தேர்த்திருவிழாவில் அடியார்கள் அங்கப்பிரதட்சனை மற்றும் கர்ப்பூரச் சட்டி என்பவற்றை ஏந்தியும் தங்களது நேர்த்திக் கடன்களை செலுத்தினர். (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

### ஐந்து கமநல சேவை நிலையங்களின் கீழ்

# 32 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் 15 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்

## கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு



(மல்லாவி )

மீள்குடியேற்ற அமைச்சின் 32 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட 5 கமநல சேவைகள் நிலையங்களின் கீழ் 15 வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் நோக்கில் அரசாங்கத்தினால் மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக 100 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் 39 வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கமைய, முதலில் 32 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் 5 கமநல சேவை நிலையங்களின் கீழ் 15 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன் படி, கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள கந்தன்குளம் புனரமைப்புக்கு 3 மில்லியன் ரூபாவும், ஊரியான் குளம் புனரமைப்புக்கு 3 மில்லியன் ரூபாவும், வெட்டுக்காட்டுக் குளம் புனரமைப்புக்கு 2 மில்லியன் ரூபாவும், மக்குவாசால் குளம் புனரமைப்புக்கு 2 மில்லியன் ரூபாவும், உதயநகர் குளம் புனரமைப்புக்கு 2 மில்லியன் ரூபாவும், அம்மன் கோவில் குளம் புனரமைப்புக்கு 2 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 11 மில்லியன் ரூபாவும் செலவிடப்படவுள்ளது.

இதேவேளை, உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள செருக்கன் குளம் புனரமைப்புக்கு 3 மில்லியன் ரூபாவும், இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள மம்மில் குளம் புனரமைப்புக்கு 3மில்லியன் ரூபாவும், இராமநாதபுரம் குளம் புனரமைப்புக்கு 3 மில்லியன் ரூபாவும் செலவிடப்படவுள்ளது.

அக்கராயன்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள, மணியன்குளம் புனரமைப்புக்கு 3 மில்லியன் ரூபாவும், ஆனைவெட்டுக் குளம் புனரமைப்புக்கு 2 மில்லியன் ரூபாவும், புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள, வேலன்குளம் புனரமைப்புக்கு 2 மில்லியன் ரூபாவும், புன்னை நீராவி குளம் புனரமைப்புக்கு 3 மில்லியன் ரூபாவும், பேதுருப்பிள்ளை குளம் புனரமைப்புக்கு 2 மில்லியன் ரூபாவும், பிள்ளையார் குளம் புனரமைப்புக்கு 3 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 15 வேலைத் திட்டங்களுக்கும் 32 மில்லியன் ரூபா நிதி செலவிடப்படவுள்ளதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




### ஆலயங்களில் கொள்ளையிட்டதாக சந்தேகப்படும் நால்வருக்கு 21 ஆம் திகதி வரை விளக்கமறியல்

கிளிநொச்சி ஆலயங்களில் கொள்ளையிட்டதாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட பெண்கள் உட்பட நால்வரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

கிளிநொச்சியிலுள்ள ஆலயங்களில் கொள்ளையில் ஈடுபட்டதாக மூன்று பெண்கள் உட்பட நால்வர் சந்தேகத்தின் அடிப்படையில் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

புத்தளத்திலிருந்து சென்றவர்களே கிளிநொச்சி ஆலயங்களில் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் அவர்களிடம் விசாரணை மேற்கொண்டு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து 07.06.2017 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

இதனைத்தொடர்ந்து குறித்த வழக்கு நேற்று முன்தினம் மறுபடியும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவர்களை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (2)

### வவு.13 பொலிஸ் பிரிவிலுள்ள பொலிஸ் குழுக்கள் கௌரவிப்பு



150 ஆவது வருட பொலிஸ் தினத்தை முன்னிட்டு சிறந்த சமுதாய பொலிஸ் குழுக்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர். வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். என். சிசிர குமாரவின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்டத்திலுள்ள 13 பொலிஸ் பிரிவிலுள்ள சிறந்த சமுதாய பொலிஸ் குழுக்கள், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவினால் முதன் முறையாக வவுனியாவிற்கு விஜயம்மேற்கொண்ட வேளை கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா மாணிக்கப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர உரையாற்றுகையில்,

வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பொது மக்களுடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தி வேலைகளை முன்னெடுத்து செல்வதை போல் இந்தநிகழ்வு எடுத்துக்காட்டியுள்ளது. இன மதபேதமின்றி அவர் தனது சேவையை முன்னெடுத்துச் செல்வதும் இதற்கொரு சிறந்த உதாரணமாகும். இது போல பொலிஸாருடன் பொது மக்களும் இணைந்து செயற்படுவதன் மூலம் அதிககுற்றச் செயல்களை தடுத்து நிறுத்தவும் முடியுமென தெரிவித்தார். (2-5)

# இரணைதீவு மக்களின் வாழ்வாதார வளங்கள் நாளாந்தம் சூறையாடல்

## முன்னாள் எம்.பி.சந்திரகுமார் தெரிவிப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி இரணைத்தீவு மக்கள் தங்களின் பூர்வீக நிலத்தில் வாழ வேண்டும் என்று கோரி மே மாதம் முதலாம் திகதி கவனயீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்து தொடர்ச்சியாக போராடி வருகின்றனர்.

இவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தீவில் உள்ள மக்களின் வாழ்வாதார வளங்கள் திருடப்பட்டு வருகின்றது என சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.




தொடர்ச்சியாக கவனயீர்ப்பில் ஈடுபட்டு வரும் மக்களை நேரில் சென்று சந்தித்து கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரணைதீவு மக்களின் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு அரசியல் எல்லைகளை கடந்து அனைத்து அரசியல்வாதிகளும் முன்வரவேண்டும். ஏறக்குறைய 300 வருடங்கள் பழைமை வாய்ந்த ஊராகவும் ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் வாழ்வாதாரம் வழங்கக் கூடிய தொழில் முறைகள் மிக நீண்ட காலமாக இரணைதீவில் காணப்பட்டு வந்துள்ளன.

அத்தோடு அங்குள்ள மக்களின் கால்நடைகள் தற்போது திருடப்பட்டு வெளியே கொண்டு செல்லப்படுகின்றன. மக்களின் காணிகளில் பறிக்கப்படுகின்ற தேங்காய்கள், வீட்டு உபகரணங்கள் என்பன தீவில் இருந்து வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன என அம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே எமது மக்கள் தங்களுடைய சொந்த நிலத்தில் நிம்மதியாக வாழ்வதற்குரிய சூழல்நிலைகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

மக்களின் பூர்வீக நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்,

அதற்காக மக்கள் மேற்கொள்ளும் நியாயமான போராட்டங்களில் எப்பொழுதும் நாம் பங்காளியாகவே இருப்போம்.

தாங்கள் தங்களின் சொந்த நிலத்திலேயே நல்லடக்கம் செய்யப்படவேண்டும் என இரணைதீவு மக்களில் உள்ள முதியவர்கள் தெரிவிக்கின்றனர்.

மிக நீண்ட காலமாக இரணைதீவில் வாழ்ந்த மக்களில் சிலர் தங்களின் நிலத்தை கத்தோலிக்க குருமார்களிடம் கையளித்த சான்றிதழ்களை கூட தற்போது வைத்திருக்கின்றனர்.

எனவே இரணைதீவு மக்களின் நியாயமான போராட்டத்திற்கு உரிய தீர்வை அரசு விரைவாக வழங்க வேண்டும். இந்த நியாயமான போராட்டத்திற்கு தீர்வு கிடைக்கும்வரை பின்வாங்கப்போவதில்லை என்றும் அம் மக்கள் தெரிவித்தனர். (2-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உலகவங்கி மற்றும் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் வெளிவிவகார மற்றும் வர்த்தக திணைக்கள நிதியுதவியுடன் வடக்கு – கிழக்கு உள்ளூராட்சி சேவைகள் மேம்படுத்தல் திட்டம் மற்றும் சபை நிதியத்தின் கீழ் 19.18 மில்லியன் ரூபா செலவில் மீளமைக்கப்பட்ட கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தண்ணீரூற்று பொதுச் சந்தை கட்டடம் நேற்று முற்பகல் 11 மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டதைப் படத்தில் காணலாம். (படங்கள் :-வற்றாப்பளை, பனிக்கன்குளம் செய்தியாளர்கள்)



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொது நூலகத்துக்கான புதிய கட்டடம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனினால் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், க.சிவநேசன், ஆ.புவனேஷ்வரன், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள் :- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# 31 மோட்டார் குண்டுகள் கிணற்றிலிருந்து மீட்பு

## நெடுங்கேணியில் சம்பவம்



(மல்லாவி)

நெடுங்கேணியில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியில் இருந்த கிணற்றை துப்புரவு செய்யும் வேளை 31 மோட்டார் குண்டுகள் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் வேளை இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

நெடுங்கேணி நாவலர் வீதியிலுள்ள தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியில் இருந்த கிணறு துப்புரவு செய்யப்பட்டது.

இதன்போது மோட்டார் குண்டுகள் வெளிவருவதை துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்த நபர்கள் அவதானித்தனர்.

இதனையடுத்து காணி உரிமையாளரினால் நெடுங்கேணி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸாரினால் கிணற்றில் இருந்து 60 மில்லி மீற்றர் மோட்டார் குண்டுகள் -26. 60 மில்லி மீற்றர் பறாலைற் - 5 ஆகியவை எடுக்கப்பட்டன.

அதனை அகற்றும் பணியில் நெடுங்கேணி பொலிஸார் ஈடுபட்டனர். (2-15)

# களவாடப்பட்ட பசு மாட்டை இறைச்சியாக்கிய நபர் கைது



முல்லைத்தீவு முள்ளியவளை கிச்சிராபுரம் பகுதியில் பசு மாடு ஒன்றை சட்டவிரோதமான முறையில் பிடித்து இறைச்சியாக்கிக் கொண்டிருந்த நபர் ஒருவர் முள்ளியவளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

முள்ளியவளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தொலைபேசித் தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், பசு மாட்டை வெட்டிக் கொண்டிருந்த வீட்டைச் சுற்றிவளைத்த போது இறைச்சியாக்கிக் கொண்டிருந்த பிரஸ்தாப நபர் கைது செய்யப்பட்டார்.

பசுமாடு களவாடப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டதுடன் விசாரணைகளையும் முன்னெடுத்தனர்.

இதேவேளை அண்மைக் காலமாக குறித்த பிரதேசத்தில் பசுமாடுகள் பிடிக்கப்பட்டு சட்டவிரோதமாக வெட்டி இறைச்சியாக்கப்படுவதும் நடைபெற்று வருகின்ற போதிலும் இந் நடவடிக்கையைத் தடுப்பதற்கு ஆதார பூர்வமான சம்பவங்கள், சாட்சிகள் என்பன இல்லாத நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் மேற்படி குற்றச் செயல்களில் ஈடுபட்டிருக்கலாம் எனத் தெரியவருகின்றது. இதே வேளை குறித்த வீட்டினுள் இருந்து பிரதேசசபையினால் மாடுவெட்டுவதற்காக வழங்கப்படுகின்ற ஆவணம் போன்ற போலியான ஆவணங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

இது தொடர்பில் முள்ளியவளை பொலிஸார்மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-310)




# ஆற்றில் தவறி விழுந்த சிறுவன் உயிரிழந்தான்

மன்னார் வெள்ளாங்குளம் பகுதியில் சக நண்பர்களுடன் ஆறு ஒன்றைக் கடக்க முற்பட்ட வேளை சிறுவன் ஆற்றினுள் தவறி வீழ்ந்துள்ளான்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இதில் தேவன்பிட்டி வெள்ளாங்குளத்தைச் சேர்ந்த அருள்ஞானம் அருள்விஜிந்தன் (வயது- 7) என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான்.

ஆற்றில் விழுந்த சிறுவன் ஊர் மக்களால் மீட்கப்பட்டு முழங்காவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு நோயாளர் காவு வண்டியில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது உயிரிழந்த நிலையிலேயே அனுமதிக்கப்பட்டான்.

சிறுவனது சடலம் மரண விசாரணை அதிகாரியின் பிரேத பரிசோதனையின் பின்னர் மன்னார் பொலிஸாரின் விசாரணைகளுடன் நேற்று கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (2-312)



யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கடந்த வாரம் கதிர்காமத்துக்காக பாதயாத்திரையை ஆரம்பித்த பக்தர்கள் நாளை மறுதினம் திங்களன்று நடைபெறவுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவத்தில் கலந்து கொள்ளும் நோக்கோடு நேற்றுக் காலை முல்லைத்தீவு நகரை சென்றடைந்தனர். அங்கிருந்து முள்ளிவாய்க்கால் பகுதிக்கு சென்ற போது...

(படம்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# அலுவலர் விடுதிக் கட்டடம் வவுனியாவில் திறந்து வைப்பு



வவுனியா வடக்கு கல்வித்திணைக்களத்தில் நேற்று அலுவலர் விடுதி கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. புளியங்குளத்தில் அமைந்துள்ள வவுனியா வடக்கு கல்வித் திணைக்களத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா கட்டடத்தை திறந்து வைத்தார்.

அறிவினை மையமாக கொண்டு பாடசாலைக்கல்வியினைப் புனரமைத்தல் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதி உதவியுடன் வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நீண்ட நாள்தேவையாக இருந்த ஊழியர்கள் விடுதிக் கட்டடம் வடக்கு மாகாண கல்வி அமைச்சால் அமைக்கப்பட்டிட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோராதலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களாக ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராசா, செந்தில்நாதன் மயூரன், வடமாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன்,. வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் எதிர்கால கல்வி நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தலைமையில் இடம்பெற்றது. (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—121

## தேனீக்களுக்கு மாற்றீடாக ரோபோ தேனீக்களா?



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

தேனீக்களுக்கு மாற்றீடாக ரோபோ தேனீக்களா?

வாருங்கள் மனிதர்களே!

இது இராணித் தேனீயின் அறைகூவல்!. எம்மைச் சீண்டிப் பார்த்து அழகு பார்க்கின்றீர்களா? நன்றி மறந்த ஜென்மங்களா நீங்கள் அனைவரும்?. கால்கட்டுப் போடுவதும், காலாறுவதும், காலைப்பிடிப்பதும், காலை வாருவதும், காலால் உதைப்பதும் உங்களுக்கு பரீட்சயமாக இருக்கலாம். ஆனால் எம்மினத்தில் அப்படியொரு நிகழ்வே இருக்காது. நாம் எம்பாட்டுக்கு எமது குலத்துடன் எமக்குரிய சட்ட திட்டங்களுடன் அனைவரும் குதுாகலித்திருப்பது உங்களுக்கு பிடிக்கவில்லையா? நீங்கள் வாழும் இந்தச் சூழலை காப்பாற்றுவதற்காக நாம் எவ்வாறெல்லாம் பாடுபடுகின்றோம் என்பது கூடவா உங்களுக்குப் புரியவில்லை? எவ்வளவோ அல்லல்பட்டு காடு மேடு என திரிந்து ஒவ்வொரு பூக்களிலிலுமிருந்து சிறிது சிறிதாக மிகவும் முக்கியமானவை.

உங்களுக்கும் ஏனைய உயிர்களுக்கும் நன்மைசெய்யும் எமது குடியை, குலத்தை அழிக்க நினைத்தால் மனிதகுலமே அழிந்துவிடும் என உங்களது அறிவியல் விஞ்ஞானி ஸ்ரீபன் கொர்க் சொல்லியிருப்பதும் அபாய ஒலி எழுப்பியிருப்பதும் காதில் இன்னும் விழவில்லையா? இதைப்பற்றி அறிய, அதனைப்பற்றி கலந்துரையாட எங்கே உங்களுக்கு நேரமிருக்கின்றது? ஓடியோடிக் கொண்டிருக்கின்றீர்கள்! எதைப்பற்றியும் அக்கறையில்லை. அவரவர் தமக்கேற்றாற் போல் அனைத்தையும் மாற்றியமைத்துக் கொண்டு இறுதியில் கழுத்துவரை பிரச்சினை முற்றியபின் பரிகாரம் தேட நினைக்கின்றீர்கள். இயற்கையை மதியுங்கள். அதற்கும் இடங்கொடுங்கள்.

சொல்ல வந்த விடயத்திற்கு வருகின்றேன். எம்மைப்போல ரோபோக்கள் கண்டுபிடித்திருக்கின்றீர்களாமே! அவற்றைக் கொண்டு எமது முக்கிய தொழிகள் ஈடுபடுவதில்லை. ஆனால் ட்றோன்கள் என்னும் இந்த பெயரை இயந்திரமொன்றுக்கு சூட்டப்பட்டு அதனை தற்போது திருமண நிகழ்வுகள் மற்றும் களியாட்டங்கள் இன்னும் ஏனைய நிகழ்வுகளை வீடியோ எடுப்பதற்கெனதாமாக றிமோட்கொன்றோல் மூலமாக இயங்கும் கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு தேவையான சக்தி பற்றறிகள் மூலமாக வழங்கப்பட்டாலும் தற்போது சூரியமின் கலங்களைப் பூட்டி அதில் சேமிக்கப்படும் சக்திகளை பயன்படுத்தி இந்த வகை ட்றோன்கள் இயக்கப்படுவதாக அறிய முடிகின்றது.

இவ்வாறாக உங்களுடைய ஆடம்பர தேவைகளுடன் இதனை நிறுத்திக் கொள்வது நல்லது. எம்மை பிரதிபலிக்க நினைத்து இவ்வகை இயந்திரங்களை உருவாக்க தொடங்கியிருக்கின்றீர்கள். ஆதலினால் இதன்மூலம் எமக்கான முக்கியத்துவத்தை மலினப்படுத்த முயற்சித்திருக்கின்றீர்கள் உதவும் எனக் கூறப்படுகின்றது.

அத்துடன் அவை ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளாதவாறு உணர்கருவிகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. எந்தவகை தொழில்நுட்பத்துடன் நீங்கள் இயங்கினாலும் இயற்கையை ஒருங்கிணைக்கும் பொறுப்புக்குள் எமக்கும் பாரிய பங்களிப்பு உண்டு என்பதனை நீங்கள் மறந்து விடக்கூடாது. இயற்கையிலுள்ள சூழல்தொகுதிக்குள் நடைபெறும் மாற்றங்களுக்கு அங்கிருக்கும் அனைத்து அங்கிகளும் காலநிலையும் காரணங்களாகும்.

இந்நிலையில் இவ்வாறு புதிய வகை ட்றோன்களை அறிமுகஞ் செய்வதுடன் எம்மை ஓரங்கட்டினால் பல பாரிய விளைவுகளுக்குள் நீங்கள் சிக்கி சின்னாபின்னப் பட வேண்டிநேரிடும் என்பதனை இந்த இடத்தில் எச்சரிக்கின்றோம்.


நாம் என்றுமே மனிதர்களுக்கு நண்பர்களாகவும் உங்களுக்கான தேன்,மெழுகு மற்றும் அயன் மகரந்த சேர்க்கையை செய்வதனால் நீங்கள் விசிறும் பீடைநாசினிகளால் எமது வேலையாள் தேனீக்கள் பல அழிக்கப்பட்டு விட்டன.

இருப்பினும் நாம் தேவையறிந்து வேலையாள் தேனீக்களை மேலதிகமாக உருவாக்கி அந்தந்த வேலைகளை கனகச்சிதமாக செய்து கொண்டிருப்பதை நீங்களும் அறிவீர்கள்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 137

எமது இளஞ்சந்ததிக்கான உணவாக திரட்டியெடுத்து இனிப்பு பண்டமான தேனாக நாம் கட்டிய கூட்டுக்குள் சேமித்ததை எம்மை வதைத்தெடுத்து உண்டுகளித்து விட்டு இப்போது எமது குடியையே அழிக்க துணிந்து விட்டீர்களா? அழிவுக்கு வித்திடுகின்றீர்கள்! ஆபத்து! ஆபத்து!

என்னினத்தை அழிப்பதற்கு மனிதர்களே இவ்வாறும் திட்டமிடுகின்றீர்களா? ஆறறிவும் ஏழாம் அறிவும் இதற்குத்தான் பயன்படுத்துகின்றீர்களா? ஏதோ சுய புத்தியிருப்பதாகவும் அறிவு கூர்மையிருப்பதாகவும் கூறிக்கொண்டு விஞ்ஞான தொழில்நுட்பத்தை வளர்த்தும் கொண்டு ஆட்டைக்கடித்து மாட்டைக்கடித்து இறுதியில் எம்மையும் அழிக்கப் பார்க்கின்றீர்களா? கட்டுன்ரயை கவனமாக வாசியுங்கள். புரிந்ததை புரிந்த வகையில் மற்றையவர்களுக்கும் எடுத்துச் சொல்லுங்கள்! கவனமின்றி காலங்கடந்தால் பின்னர் எதனையும் சரிசெய்ய முடியாது. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்! தற்போது நிகழுகின்ற அழிவுகள் அனர்த்தங்கள் அனைத்திற்கும் நீங்கள் தான் காரணம் என்பதனை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள். வெள்ளம் வழிந்தோடும் கால்வாய்களை மூடிவிட்டு மாடி வீடுகள் கட்டிவாழ முற்படுகின்றீர்கள். மழை பெய்து ஓடிவரும் நீர் தொடர்ந்து ஓடமுடியாது வழிமறித்து அடுக்கு மாடிகளைக் கட்டிவிட்டு இப்போது வெள்ள அனர்த்தம் என்கின்றீர்கள். இய்ற்கையாக வழிந்தோடும் இடங்களை மீண்டும் திருப்பித் தாருங்கள். சூழலைப் பாதுகாப்பதற்கு இவ்வாறான நடவடிக்கைகளும்





லான மகரந்தச்சேர்க்கையை செய்வதற்காகவாம். ஆயிரமாயிரம் ரோபோக்களை பயன்படுத்தி செயற்கை முறையில் மகரந்தச் சேர்க்கை நடத்த முனைப்புடன் இருக்கின்றீர்களாம். இந்த கண்டுபிடிப்புக்களை பயன்படுத்தி நாம் செய்யும் அனைத்து வேலைகளையும் உங்களால் செய்துகாட்ட முடியாது. நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள். இயந்திரங்களைக் கொண்டு இயற்கையை உருவாக்கமுடியாது. இயற்கையென்பது அனைத்து உயிரினங்களினதும் சங்கமம்.

ஆங்கிலத்தில் ட்றோன்கள் எனப்படுபவை எமது தேனீ குடியில் உள்ள ஆண் தேனீக்களைக் குறிப்பிடும். இனப்பெருக்கம் தவிர்ந்த எந்தவொரு தொழிலும் அவர் என நாம் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

எமது பூச்சியினம் உள்ளிட்ட உயிரினங்களில்லாமல் அயன் மகரந்தச்சேர்க்கை நடைபெற சாத்தியமில்லை என்னும் எமது கருத்துக்கு எதிர்க்கருத்தாக ட்றோன்களின் உருவாக்கம் அமைந்திருக்கின்றது. இவ்வகை ட்றோன்களில் ஏற்கன்வே பெறப்பட்ட மகரந்த மணிகளை சேகரித்து அவற்றை பாதுகாத்து பயன்படுத்த முயற்சிக்கின்றீர்கள்.

இந்தவகை ட்றோன்களில் பூக்களில் காணப்படும் மகரந்த மணிகள் மற்றும் தேன் போன்றவற்றை இனங்காணும் துல்லியமான தூண்டிகள் பொருத்தப்பட்டிருப்பது இந்தவகை பூக்களை இனங்காண ஏறக்குறைய 40சதவீதமான தாவர பயிர்களுக்கு அவற்றில் விளைச்சலுக்கு காரணமாகவும் இருக்கின்றோம்.

எமக்கு தேவையானதை (தேன் சுரப்பை மற்றும் மகரந்த மணிகளை) எடுத்துக்கொண்டு நாம் மகரந்த சேர்க்கையையும் ஊதியமின்றி செய்து கொண்டிருக்கின்றோம். இதற்காக எமதுவேலையாள் தேனீக்களை முழுவதுமாக கள மிறக்கியிருக்கின்றோம். உங்களைப் போல சமூக அந்தஸ்து எமக்கும் இருப்பதனால் நாமும் சிறப்பாக எமது தொழிற்பாடுகளை இணைந்து செய்து கொண்டிருக்கின்றோம். எமது குடிகளின் அழிவுகளுக்கு நீங்கள் ஒருபோதும் காரணமாக இருக்கக்கூடாது.

நாம் இவ்வாறு உங்களுக்கு உதவிசெய்யும் போது எங்களை ஒட்டுமொத்தமாகவே அழிப்பதற்காகவோ அல்லது எமது உதவியை பெறாது அயன்மகரந்த சேர்க்கைகளை நடத்துவதற்கு நீங்கள் திட்டமிடுவதனை எங்களுக்கும் அறியக் கிடைத்திருக்கின்றது.

இதனை கருத்திற்கொண்டு நீங்கள் செய்யும் கண்டுபிடிப்புக்களை எமது குலம்போல ஏனைய இனங்களும் இணைந்து வாழ வழிசெய்வீர்கள் என நம்புகின்றோம்.

உலக சூழல்தினம் கடந்த 5ம் திகதியாகியமையால் அதுசார்ந்து இந்தக்கோரிக்கையையும் உங்கள் முன் வைக்கின்றோம். சூழலைப்பாதுகாப்பதுடன் அதிலுள்ள உயிரினங்கள் அனைத்தையும் பாதுகாக்கவும் வேண்டும். தேனீக்காளான எமக்கும் எமது வாழ்வியலுக்கான வசதிவாய்ப்புக்கள் கிடைத்தாலன்றி எம்மாலும் எதுவும் செய்யமுடியாது.

நாம் வாழும் சூழல்தொகுதி பல அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதுடன் பல இடங்களில் எமது குடியும் கலைக்கப்பட்டிருக்கின்றன. தேனை பெறுவதற்காக எமது வதைகள் நொருக்கப்பட்டு பிழிந்தெடுக்கப்படுகின்றன. அதனால் எமது இளஞ் சமுதாயமும் வதைபட்டுக் கொண்டிருப்பதை இனியும் செய்யாது எமது குலத்தை வாழவைப்பதற்காக முன்முயற்சிகளில் ஆர்வம் காட்டுவதுடன் பலருடன் இணைந்து எமது குலத்தை காப்பாற்றவும் முன்வரவேண்டும் என பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமல் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் இருபது ஆண்டுகள் சிறையிலிருக்க நேரிடும்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மீது சுமத்தப்பட்டுள்ள பணச்சலவை குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அவருக்கு இருபது வருட கால சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.



30 மில்லியன் ரூபாய் பணத்தை தவறான முறையில் பெற்று கொண்டமை தொடர்பில் நாமலுக்கு எதிராக 11 குற்றச்சாட்டுகள் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் நாமல் ராஜபக்ஷ சிறை செல்வது உறுதி என கூறப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் நாமலுக்கு எதிரான குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்பட்டது. அதற்கமைய முதல் முறையாக உயர்நீதிமன்றத்தில் ஆஜராகிய நாமல் ராஜபக்ஷ உட்பட மூவருக்கு கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்கவினால் கடந்த 6ஆம் திகதி குற்றப்பத்திரிகை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

6 சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டமா அதிபரினால் இந்த வழக்கு தொடர்பில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ-7)




# ஓட்டமாவடியில் ஷியா அமைப்பின் கலாசார நிலையம் மீது தாக்குதல்!



ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மீராவோடையில் அமைந்திருந்த ஷியா அமைப்பின் கல்வி, கலாசார நிலையம் மீது நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திப்புட்டு முனுவ தெரிவித்தார்.

ஓட்டமாவடி மீராவோடை ஆலிம் வீதியில் அமைந்திருந்த ஷியா அமைப்பின் கல்வி, கலாசார நிலையம் இஸ்லாமிய அகீதாவிற்கு முரண்பாடான முறையில் கொள்கையினைப் பரப்பி வருகின்ற நிலைமையை கண்டித்து இனம்தெரியாதோரால் உடைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கலாசார நிலையத்திற்குள் புகுந்த இனந்தெரியாதோர் அங்கிருந்தவர்களை தாக்கியதுடன், மூன்று மோட்டார் சைக்கிள், கணனி, தொலைபேசி, சி.சி.ரி.வி. கமரா, ஒலிபெருக்கி சாதனங்கள், தளபாடங்கள் உட்பட பல பொருட்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

கலாசார நிலைய உறுப்பினர்கள் மூவர் தாக்கப்பட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் இத்தாக்குதலை நூற்றுக்கு மேற்பட்டோர் நடத்தியதாகவும் அகில இலங்கை அஹ்லுல் பைத் ஜமாத்தின் தலைவர் மௌலவி எல்.ரி.எம்.ஹலீம் தெரிவித்தார். குறித்த சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெலிக்கடை சிறைக்கு புத்தகங்கள் வேண்டும்

வெலிக்கடைச் சிறைச்சாலையின் நூலகத்துக்கு, புத்தகங்கள் தேவைப்படுவதாகத் தெரிவித்துள்ள சிறைச்சாலையின் அத்தியட்சகர் சந்தன ஏக்கநாயக்க, அந்தப் புத்தகங்களைத் தந்துதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் அனுப்பிவைத்துள்ள கோரிக்கைக் கடிதத்தில், 1844ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்தச்சிறைச்சாலை, குற்றம் நிரூபிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு, புகலிடம், பராமரிப்பு, திருந்துவதற்கான வாய்ப்பு ஆகியவற்றை வழங்குகிறது எனத் தெரிவித்துள்ளார்.(இ-7)

# இயற்கைக் காடுகளை மையப்படுத்தி சீனாவுடன் மற்றுமொரு ஒப்பந்தம்

வன வள பாதுகாப்பு மற்றும் பரிமாற்றம் மேற்கொள்ளும் வகையில் சீனாவுடன் புதிய ஒப்பந்தத்தை கைச்சாத்திட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இரு நாடுகளும் தமக்குரிய அரிய வகை வளங்களை பரிமாறிக் கொள்ளவும் ஆய்வுகள் மற்றும் பயிற்சிகளுக்கு பயன்படுத்தவும் முடியும் எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (இ-7)

# 7லட்சத்து 26ஆயிரம் வழக்குகள் நிலுவையிலுள்ளன - நீதியமைச்சு

ஏழு இலட்சத்து 26 ஆயிரம் வழக்குகள் விசாரணைகள் பூர்த்தியாகாது நிலுவையில் இருப்பதாக நீதி அமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த 2016 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் குறித்த அளவு வழக்குகள் நிலுவையில் இருப்பதாக தெரிவித்துள்ளது.

நீதி அமைச்சின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 3,556 வழக்குகள் உச்ச நீதிமன்றில் நிலுவையில் உள்ளதாகவும் 4,837 வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்து. இந்த வழக்குளில் ஆறு இலட்சத்து 99 ஆயிரத்து 784 வழக்குகள் கடந்த ஆண்டுகளின் வழக்குள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சட்டவிரோத துப்பாக்கியுடன் கைதான பொலிஸ் கான்ஸ்டபிள் தடுப்பில்

தனது வீட்டில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்ததுடன் ரி-56 ரக துப்பாக்கி மற்றும் சிறிய ரக கைத்துப்பாக்கியையும் மறைத்து வைத்திருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை, இம்மாதம் 14ஆம் திகதி வரையில் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு ஆனமடு நீதவான் திருமதி ஜயனி எஸ். விஜேதுங்க, ஆனமடு பொலிஸாருக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டார். கற்பிட்டி, நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரையே இவ்வாறு தடுத்து வைத்து விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.


குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளின் ஆனமடு தென்னந்துரியாவ பிரதேசத்தில் அமைந்துள்ள வீட்டிலிருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை காலை ரி-56 ரக துப்பாக்கி, சிறிய ரக கைத்துப்பாக்கி என்பவற்றுடன், கசிப்புப் போத்தல்களையும் ஆனமடு பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து, அங்கு சென்ற ஆனமடு பொலிஸார், அவ்வீட்டை சோதனையிட்ட போது கசிப்பு போத்தல்கள் மீட்கப்பட்ட நிலையில், வீட்டு அறையின் அலுமாரி ஒன்றின் கீழ், பொலித்தீன் பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகளையும் மீட்டதோடு, குறித்த பொலிஸ் உத்தியோகத்தரையும் கைதுசெய்திருந்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை, ஆனமடு நீதவான் முன்னிலையில் ஆனமடு பொலிஸார் நேற்று முன்தினம் ஆஜர்படுத்திய போதே அவரை இம்மாதம் 14 ஆம் திகதி வரையில் தடுத்து வைத்து விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆனமடு பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# நாவலப்பிட்டியிலுள்ள தேயிலை தொழிற்சாலையில் தீ விபத்து



நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டென்சைட் தோட்ட தேயிலை தொழிற்சாலையில் ஏற்பட்ட தீயினால் தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவிலே இந்த தீ விபத்து சம்பவித்துள்ளது.

தீயை அணைக்க நாவலப்பிட்டி பொலிஸாரும் பொது மக்களும் முயற்சித்த போது தீயினால் தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை சரியாக கண்டறியப்படவில்லை என்பதுடன், தீ விபத்தில் யாருக்கும் காயங்களோ உயிர்ச்சேதங்களோ ஏற்படவில்லை என நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகப்பகுதி மக்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்படல் வேண்டும்

## பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை

தீவகத்தில் மக்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு அங்குள்ள பொலிஸ் நிலையங்களையும் அதில் கடமையாற்றும் பொலிஸாரின் எண்ணிக்கையையும் அதிகரிக்குமாறு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவிடம் தீவக சிவில் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. தீவகத்தின் பாதுகாப்பை ஆராயும் கூட்டமொன்று நேற்று முன்தினம் வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம்எடுக்கப்பட்டுபொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. தீவகப் பகுதிகளில் கொலைகள், களவுகள் மற்றும் குற்றச் செயல்கள் அதிகரித்து காணப்படுகின்றன. குறிப்பாக பாடசாலை மாணவி ஒருவரின் கொலை மற்றும் கர்ப் பிணி பெண்ணொருவரின் கொலை, துஷ்பிரயோக சம்பவங்கள் எனப் பல சம்பவங்கள் நடைபெற்றிருந்தன. இந்த குற்ற சம்பவங்கள் தொடர்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கையில் உள்ளனர். சில சம்பவங்களில் குற்றவாளிகள் இதுவரை கைது செய்யப்படவுமில்லை.

இவை தவிர மாட்டிறைச்சி கடத்தல்கள், பனை மர கடத்தல்கள் என்பனவும் அதிகரித்து காணப்படுகின்றன. இவ்வாறான குற்றச் செயல்கள் தீவக பகுதிகளில் தாராளமாக இடம்பெறுகின்ற நிலையில், குற்றவாளிகளும் இலகுவாக தப்பித்து விடுகின்றனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பில் நாங்கள் கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டியுள்ளது. இந்தக் குற்ற செயல்கள் தொடர்பில் பொலிஸாரால் உடன் நடவடிக்கை எடுக்க முடியாத நிலையுமுள்ளது.

அதற்குக் காரணம் ஊர்காவற்றுறையில் உள்ள ஒரு பொலிஸ் நிலையமே தீவகம் எனும் பெரும் நிலப் பரப்பை கண்காணிக்கின்றது. இதனால் எங்கு குற்றம் நடைபெறுகின்றது? யார் குற்றவாளிகள் என்பது தொடர்பில் உடனடி நடவடிக்கையை பொலிஸாரால் எடு க்க முடியாதுள்ளது. எனவே இங்குள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கையையும் கடமையாற்றும் பொலிஸாரது எண்ணிக்கையையும்அதிகரிக்க வேண்டியுள்ளது. இதுதவிர பொலி ஸாருக்கு தற்போது இருக்கும் வளங்களையும் அதிகரித்துகொடுக்க வேண்டியுள்ளது.

எனவே நயினாதீவு, காரைநகர், புங்குடுதீவு ஆகிய பகுதிகளுக்கு தனியான பொலிஸ் நிலையங்களை அமைக்குமாறும், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸாரினது எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் எனவும் சிவில் சமூக பிரதிநிதிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மேலும் தற்போது ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு போதிய வாகன வசதி இன்மையால் குற்றம் நடைபெற்ற பகுதிக்கு விரைந்து செல்ல முடியாத நிலையும் காணப்படுகின்றது.

எனவே அது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களுக்கு பொலிஸ் போஸ்ற் அமைக்க வேண்டும் எனவும் யோசனை முன்வைக்கப்பட்டது. இந்த கோரிக்கைகளையும் தீர்மானங்களையும் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைப்பது எனவும் இந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரெலெசின் லாஸ், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்த ரம்பிள்ளை, மருத்துவர்கள், அரச அதிகாரிகள் என பலரும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

# தினகரனின் 32 எம்.எல்.ஏக்களால் எடப்பாடி அரசுக்கு ஆபத்து வராது





(சென்னை)

டி.டி.வி. தினகரனுக்கு ஆதரவாக தற்போது 32 எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர். அவர்கள் மூலம் ஆட்சியை கவிழ்க்கும் செயலில் அவர் நிச்சயமாக ஒருபோதும் ஈடுபட மாட்டார் என்று ஆதரவாளர் ஒருவர் கூறினார்.

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அரசுக்கு 123 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவாக உள்ளனர்.

இந்த நிலையில் இலஞ்ச குற்றச்சாட்டில் கைதாகி, திஹார் சிறையில் சென்று, பிணை பெற்று திரும்பி வந்துள்ள அ.தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரனுக்கு 32 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவாளர்களாக மாறியுள்ளனர்.

கட்சியில் இருந்து ஒதுங்கியிருப்பதாக கூறிய தினகரன் மீண்டும் அ.தி.மு.க. விவகாரங்களில் தலையிட தொடங்கி இருப்பதை எடப்பாடி பழனிச்சாமி ஆதரவாளர்கள் விரும்பவில்லை. இதனால் அ.தி.மு.க. அம்மா அணியில் தினகரனுக்கு ஆதரவாக ஒரு சாராரும், எதிர்ப்பாக மற்றொரு சாராரும் உள்ளனர்.

இவர்களுக்கு இடையே மோதல் முற்றும் பட்சத்தில் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியை டி.டி.வி. தினகரன் கவிழ்த்து விடுவார் என்று பரபரப்பு தகவல்கள் வெளியாகின. தினகரனால் ஏற்பட்டுள்ள இந்த திடீர் அச்சுறுத்தலைத் தொடர்ந்து எடப்பாடி பழனிச்சாமி பணிந்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் அ.தி.மு.க. ஆட்சியை கவிழ்க்கும் முயற்சிகளில் டி.டி.வி. தினகரன் ஈடுபட மாட்டார் என்று தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக அவருக்கு மிகவும் நெருக்கமான ஆதரவாளர் ஒருவர் கூறியதாவது,

டி.டி.வி. தினகரனுக்கு ஆதரவாக தற்போது 32 எம்.எல்.ஏ.க்கள் உள்ளனர். அவர்கள் மூலம் ஆட்சியை கவிழ்க்கும் செயலில் அவர் நிச்சயமாக ஒருபோதும் ஈடுபட மாட்டார். அ.தி.மு.க. ஆட்சியை கவிழ்த்தால், அது தி.முக. வுக்குத்தான் சாதகமாக போய் முடியும் என்பதை அவர் நன்றாக உணர்ந்துள்ளார்.

டி.டி.வி. தினகரன் இந்த விடயத்தில் மிகவும் தெளிவாகவுள்ளார். எனவே எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சிக்கு ஆபத்து வராது.

கட்சி விவகாரத்தில் இருந்து ஒதுங்கியிருக்கப் போவதாக தினகரன் முன்பு கூறியிருந்தார். தற்போது அவர் சிறையில் இருந்து திரும்பி வந்துள்ள நிலையில், அமைச்சர்களில் பெரும்பாலானவர்கள் யார் கட்டுப்பாட்டிலும் இல்லாமல் செயற்பட விரும்புவது தெரியவந்துள்ளது.

இதற்கிடையே ஓ.பன்னீர்செல்வம் அணியை இணைக்க எந்தப் பேச்சும் நடக்கவில்லை. எனவே அவர் முன்பு போல ஆட்சி, கட்சி விவகாரங்களில் இருந்து சற்று ஒதுங்கி இருக்கவே விரும்புகிறார்.

தினகரனை பொறுத்த வரை அவர் ஆட்சியை மேற்பார்வை செய்யவே விரும்புகிறார். கட்சியை வழி நடத்த முடிவு செய்துள்ளார். இதை அவர் எங்களிடம் பல தடவை தெளிவுபடுத்தி விட்டார்.

எடப்பாடி ஆட்சியை கவிழ்க்க மாட்டேன் என்றும் அவர் தெளிவாக தெரிவித்துள்ளார். அமைச்சர்கள் சுதந்திரமாக செயற்பட விரும்புவதால் அவர் இந்த முடிவுக்கு வந்துள்ளார்.


சமீபத்தில் அவர் பெங்களூர் சென்று சசிகலாவை சந்தித்த போது 2 மாதம் மிகவும் பொறுமையாக இருக்கும்படி அறிவுறுத்தப் பட்டார். மேலும் அ.தி.மு.க. அணிகள் இணைவதையும் அவர் விரும்புகிறார்.

2016ஆம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில் அ.தி.மு.க.வுக்கும் தி.மு.க.வுக்கும் வாக்குகள் வித்தியாசம் வெறும் ஒரு சதவீதம்தான் என்பது அவருக்கு தெரியும். இந்த நிலையில் ஆட்சி கவிழ்ந்தால் அது தி.மு.க.வுக்கு இலாபமாகி விடும்.

இதை நன்கு அறிந்துள்ளதால் எடப்பாடி ஆட்சியை தினகரன் ஒரு போதும் கவிழ்க்க மாட்டார். இவ்வாறு தினகரன் ஆதரவாளர் கூறினார். (இ-3)

### பொதுநலவாய அமைப்பின் பொதுச்செயலாளர்

## பெட்ரீசியா ஸ்கொட்லன்டுடன் பிரதமர் ரணில் விசேட சந்திப்பு



(கொழும்பு)

பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் பெட்ரீசியா ஸ்கொட்லன்டை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கையின் நிரந்தர பிரதிநிதியின் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம் பெற்றதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பொதுநலவாய அமைப்பிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் மற்றும் பரஸ்பரம் தொடர்பில் முக்கியத்துவமுள்ள ஏனைய விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பில் பொதுநலவாய அமைப்பின் பிரதிப் பொதுச் செயலாளர் டியோடெட் மகாராஜ் மற்றும் பொதுநலவாய அமைப்பின் செயலக அலுவலகத்தின் கடல் மற்றும் இயற்கை வளங்கள் பிரிவின் பிரதானி ரொஸ்மாரி கெடோகன் ஆகியோரும் பங்கேற்றிருந்ததாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்போது பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் பெட்ரீசியா ஸ்கொட்லன்டை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். (இ-7)

## அமைச்சர் அமரதுங்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

போபிடிய பகுதியில்வைத்து ஊடகவியலாளர் ஒருவரை அமைச்சர் ஜோன் அமரதுங்க தகாத வார்த்தை களால் திட்டியதனை கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க கண்டித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அவர், இவ்வாறான செயற்பாடுகள் நல்லாட்சியை வெளிப்படையாக மீறும் செயல் எனக் கூறியுள்ளதோடு, சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகள் வத்தளை, கெரவலபிடிய, முத்துராஜவல ஆகிய பகுதிகளில் கொட்டப்படுவதனால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் வகையில் நேற்று முன்தினம் கந்தானை ஐக்கிய தேசியக் கட்சி காரியாலயத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சரிடம் குறித்த ஊடகவியலாளர் இதற்கு, முன்னரும் வத்தளை பிரதேசத்தில் குப்பைகள் கொட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் போது நீங்கள் வந்து பார்க்கவில்லை அத்துடன்அது தொடர்பில் எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை எனவும் பிரதேச மக்கள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர் என வினவினார்.

இதற்கு உரியவாறு பதிலளிக்காத அமைச்சர் குறித்த ஊடகவியலாளரை தகாத வார்த்தைகளால் பேசியதுடன், தாக்கவும் முற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனை தொடர்ந்து பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் பேலியகொட பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடொன்றையும் பதிவு செய்துள்ளார். (இ-7)

# அந்நிய செலாவணி மோசடி வழக்கு தினகரன் மீது குற்றச்சாட்டு பதிவு



(சென்னை)

அந்நியச் செலாவணி மோசடி வழக்கில் டி.டி.வி. தினகரன் மீது எழும்பூர் பொருளாதார குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

டி.டி.வி. தினகரனின் வங்கிக் கணக்கில் கடந்த 1996ஆம் ஆண்டு, வெளிநாடுகளில் இருந்து பெருமளவிலான பணம் வைப்பு செய்யப்பட்டதாக புகார் எழுந்தது. இதையடுத்து, தினகரன் மீது அமுலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்தது. இந்த வழக்கின்விசாரணை சென்னை எழும்பூர் பொருளாதார குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இவ்வழக்கு கடந்த மாதம் விசாரணைக்கு வந்த போது, டி.டி.வி. தினகரன் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இரட்டை இலை சின்னத்தை பெற இலஞ்சம் கொடுத்ததாக கைது செய்யப்பட்டு திஹார் சிறையில் அடைக்கப்பட்டிருந்ததால் தினகரன் ஆஜராகவில்லை என அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து ஜூன் 8 ஆம் திகதி தினகரனை ஆஜர் படுத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில் இவ்வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. சிறையில் இருந்து பிணையில் வெளியே வந்துள்ள தினகரன், விசாரணைக்கு ஆஜரானார். அப்போது, தினகரன் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. பின்னர் வழக்கு விசாரணை ஜூன் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் பெரும் பரபரப்பு

## ஜனாதிபதி ட்ரம்புக்கு எதிராக எப்.பி.ஐயின் முன்னாள் இயக்குநர் ஜேம்ஸ் கோமி சாட்சியம்



(கொழும்பு)

**ரஷ்ய தொடர்பு விவகாரத்தில் ஜனாதிபதி ட்ரம்ப் அழுத்தம் தந்தார் என்று அமெரிக்க உளவுத்துறையின். (எப்.பி.ஐ) முன்னாள் இயக்குநர் ஜேம்ஸ் கோமி சாட்சியம் அளித்திருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

அமெரிக்காவில் கடந்த ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததாக எழுந்துள்ள குற்றச்சாட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

குடியரசுக் கட்சி வேட்பாளராக போட்டியிட்ட ட்ரம்ப் வெற்றி பெறவும், ஜனநாயக கட்சி வேட்பாளராக களம் கண்ட ஹிலாரி கிளின்டன் தோல்வியைத் தழுவவும் ரஷ்யா தலையிட்டது என்று கூறப்படுகிறது.

இதுபற்றி அமெரிக்க பாராளுமன்றம் ஆய்வு செய்து வருகிறது. மேலும், இது தொடர்பாக அமெரிக்க உளவு அமைப்பான எப்.பி.ஐ. விசாரணை நடத்தி வருகிறது.

இந்த விசாரணையை நடத்தி வந்த எப்.பி.ஐ.யின் இயக்குநர் ஜேம்ஸ் கோமியை ஜனாதிபதி ட்ரம்ப் அதிரடியாக பதவி நீக்கம் செய்தார்.

ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் பிரசாரத்துக்கும், ரஷ்யாவுக்கும் இடையே தொடர்பு இருந்தது என்பது தொடர்பான விவகாரத்தில் எப்.பி.ஐ. விசாரணை நடத்துவதுதான் ஜேம்ஸ் கோமி பதவி நீக்கத்துக்கு காரணம் என்று எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி குற்றம் சாட்டியது.

இந்த நிலையில் தனது பதவி நீக்கம் தொடர்பான அமெரிக்க பாராளுமன்ற செனட் சபையின் விசாரணையின்போது, ஜேம்ஸ் கோமி பரபரப்பு வாக்குமூலம் (சாட்சியம்) அளித்துள்ளார்.


அமெரிக்காவை அதிர வைத்துள்ள அந்த வாக்குமூலத்தில் அவர், "எனக்கு விசுவாசம் தேவை. நான் விசுவாசத்தை எதிர்பார்க்கிறேன் என்று ட்ரம்ப் என்னிடம் கூறினார்" என குறிப்பிட்டுள்ளார்.

ட்ரம்புக்கு தான் அப்போது அளித்த பதிலில், நீங்கள் என்னிடம் எப்போதும் நேர்மையை எதிர்பார்க்கலாம் என்று சொன்னேன் என குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு அவர், நான் அதைத்தான் எதிர்பார்க்கிறேன். நேர்மையுடன்கூடிய விசுவாசம் வேண்டும் என்று சொன்னார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அதில், முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக்கேல் பிளின் மீதான ரஷ்ய தொடர்பு குறித்த விசாரணையை கைவிடுமாறு ட்ரம்ப் அழுத்தம் தந்தார். ட்ரம்பை விசாரணைக்கு உட்படுத்தவில்லை என்று பகிரங்கமாக கூறுமாறும் அழுத்தம் தந்தார் என்றும் கூறியுள்ளார்.

ட்ரம்புடனான தனது தனிப்பட்ட சந்திப்புகள் குறித்தும் தனது வாக்குமூலத்தில் ஜேம்ஸ் கோமி குறிப்பிட்டுள்ளார்.



ஜேம்ஸ்கோமி அளித்துள்ள வாக்குமூலம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், ஜேம்ஸ் கோமிக்கு ட்ரம்ப் அழுத்தம் தந்தது, நீதியை தடுக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுக்கு வழிவகுத்துள்ளது. (இ-3)

## அந்தமான் கடலில் விழுந்து நொறுங்கிய

# விமான விபத்தில் உயிரிழந்த 10 பேரின் உடல்கள் மீட்பு

(யங்கூன்)

அந்தமான்கடலில்விழுந்து நொறுங்கிய மியன்மார் விமான விபத்தில் பலியானவர்களில் குழந்தை உள்ளிட்ட 10 பேரது உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மியன்மார் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மியன்மார் நாட்டின் இராணுவ விமானம் 'வை-8', மெயிக் நகரத்தில் இருந்து யங்கூனுக்கு புறப்பட்டு சென்றது. 29 நிமிடங்கள் கழித்து, 18 ஆயிரம் அடி உயரத்தில் அந்த விமானம் பறந்து கொண்டிருந்தபோது திடீரென மாயமானது. மாயமான விமானம், அந்தமான் கடலில் விழுந்து நொறுங்கியது தெரியவந்தது.

இதில், அந்த விமானத்தில் பயணம் செய்த 122 பேரும் பலியாகி விட்டதாக அஞ்சப்படுகிறது. அவர்களில் 108 பேர் இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஆவர். சிப்பந்திகள் 14 பேர்.

இந்த விபத்துக்கான காரணம் என்ன என்பது இன்னும் தெளிவாக தெரியவில்லை. அதேநேரத்தில் விமானம்



விபத்துக்குள்ளான நேரத்தில் மோசமான வானிலை இல்லை என்று தகவல்கள் கூறுகின்றன. விபத்துக்குள்ளான விமானத்தின் பாகங்களையும், பலியானவர்களையும் தேடும் பணியில் 9 போர் கப்பல்கள், 5 இராணுவ விமானங்கள், 2 ஹெலிகொப்டர்கள் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் காலை ஒரு குழந்தை உள்ளிட்ட 10 பேரது உடல்கள் அந்தமான் கடல் பகுதியில் மிதந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மியன்ர் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இதே போன்று விமானத்தின் ஒரு சக்கரம், கவச உடைகள், பயணிகளின் உடைமைகள் மிதந்ததும் தெரியவந்துள்ளது. ஆனால் விமானத்தின் முக்கிய உடல் பாகம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. தொடர்ந்து தேடுதல் வேட்டை முழுவீச்சில் நடந்து வருகிறது.

விபத்துக்குள்ளான விமானம், கடந்த ஆண்டு மார்ச் மாதம் சீனாவிடம் இருந்து வாங்கப்பட்டது எனவும், அது இதுவரை 809 மணி நேரம் பறந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-3)






## விமானிகளின்றி பறக்கும் பயணிகள் விமானம்

### ஆய்வில் உள்ளது - போயிங் நிறுவனம்



(பாரீஸ்)

விமானிகளின்றி வானில் பறக்கும் பயணிகள் விமானங்களுக்கான தொழில்நுட்பம் ஆய்வில் இருப்பதாக உலகின் மிகப்பெரிய விமான தயாரிப்பு நிறுவனமான போயிங் தெரிவித்துள்ளது.

ஓட்டுநரின்றி இயங்கும் கார், பேருந்து போன்றவை தற்போது பல்வேறு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டு வருகின்றது. பரிசோதனையின் ஒரு பகுதியாக பல இடங்களில் இவை இயக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதேபோல் விமானிகளின்றி பறக்கும் பயணிகள் விமானங்களுக்கான தொழில்நுட்பம் ஆய்வில் இருப்பதாக, போயிங் நிறுவனத்தின் துணை தலைவர் மைக்சின்நெட் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் தலைநகர் பாரீசில் விமானக் கண்காட்சி நடைபெற்று வருகிறது. இதில் கலந்து கொண்ட சின்நெட் இந்த தகவலை தெரிவித்துள்ளார். மேலும், "அந்த தொழில்நுட்பத்தின் அடிப்படை கட்டமைப்பு ஏற்கனவே உள்ளது. ஆனால், சுயமாக பறக்கின்ற இத்தகைய விமானங்கள் கடினமான பாதுகாப்பு தரக்கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட வேண்டும். அவசரமாக தரையிறங்குவதை இத்தகைய விமானங்கள் நிறைவேற்றுமா? என்பது தெளிவாகவில்லை" என்று அவர் கூறியுள்ளார்.

ஆளில்லாமல் இயங்கும் சிறிய ரக விமானங்கள் தற்போது பல்வேறு நாடுகளின் இராணுவத்தில் பாது காப்பு மற்றும் உளவுப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-3)

## நவாஸிடம் நலம் விசாரித்த மோடி

(அஸ்தானா)

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டுக்காக கஜகஸ்தான் சென்றுள்ள பிரதமர் மோடி, அங்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பிடம் நலம் விசாரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு கஜகஸ்தான் தலைநகர் அஸ்தனாவில் நேற்று நடை பெற்றது. இந்த ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் கஜகஸ்தான், ரஷ்யா, கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட 6 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

இந்த அமைப்பில் பார்வையாளராக இருந்த இந்தியாவும் பாகிஸ்தானும் உறுப்பினராக சேர தீவிர முயற்சி எடுத்து வந்தன. இதையடுத்து இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளையும் உறுப்பினர்களாக சேர்த்து கொள்ள ஷாங்காய் அமைப்பு முடிவு செய்துள்ளது.

இந்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடி, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆகியோர் அஸ்தானா நகருக்கு சென்றுள்ளனர். இந்நிலையில், இரவு நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் மோடி, நவாஸ் ஷெரீப் உள்ளிட்ட அனைத்து தலைவர்களும் பங்கேற்றனர். அப்போது, மோடி நவாஸ் இருவரும் பரஸ்பரம் வரவேற்றனர்.

மேலும், நவாஸ் ஷெரீப் மற்றும் அவருடைய தாயாருடைய உடல்நலம் குறித்து மோடி நலம் விசாரித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவிற்கு விற்கப்படமாட்டாது

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு



(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு விற்பனை செய்யப் போவதில்லை என்று துறைமுக அபிவிருத்தி கப்பல்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அர்ஜுன ரணதுங்க துறைமுக அபிவிருத்தி அமைச்சராக இருந்த காலத்தில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 ஆண்டுகளுக்கு சீனநிறுவனம் ஒன்றுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்றிருந்தது.

அதற்கான அமைச்சரவைப்பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் புதிதாக துறைமுக அபிவிருத்திக்குப் பொறுப்பான அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் மகிந்த சமரசிங்க, முன்னைய அமைச்சர் அர்ஜுனவின் தீர்மானத்தை கிடப்பில் போடும் முடிவில் இருக்கின்றார்.

அதற்குப் பதிலாக சீன நிறுவனம் ஒன்றுடன் இணைந்து கூட்டு வர்த்தக முயற்சியாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பில் அவர் ஆராயத் தலைப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக சீன நிறுவனம் ஒன்றுடன் இரண்டு தடவைகள் கலந்துரையாடியிருப்பதாகவும், எந்தக் கட்டத்திலும் நாட்டுக்கு இழப்பு ஏற்படும் வகையில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை விற்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# உள்ளூராட்சி,மாகாண சபைகள் திருத்த சட்டமூலம் கிடைத்துள்ளது

## லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் தமக்கு கிடைத்துள்ளதாக அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த



அவர், இந்த சட்ட மூலம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த சட்டமூலத்தில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப் படவுள்ளதாகவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சகல தேசிய பாடசாலை அதிபர்களுக்கும் கூட்டம்

(கொழும்பு)

நாட்டில் உள்ள சகல தேசிய பாடசாலை அதிபர்களுக்குமான கூட்டம், எதிர்வரும் 19ஆம் திகதி காலை 9 மணிக்கு, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில், கல்வி அமைச்சின் 4ஆம் மாடியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக, தேசிய பாடசாலைகளுக்கு பொறுப்பான கல்விப் பணிப்பாளர் டபிள்யூ.எம்.ஜயந்த விக்கிரமநாயக்க அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்துக்கு அதிபர்கள் கட்டாயம் கல[...] கொள்ள வேண்டும் .எனவும் பிரதிநிதிகளை அனுப்புவதை தவிர்க்க வேண்டும் எனவும், அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தையும் கொண்டுவரும்படியும், கடிதத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-7)

# அதிவேக நெடுஞ்சாலையை பயன்படுத்துவோர் கவனத்திற்கு!

(கட்டுடை)

அன்றாடக் கடமையல்லாத விசேட கடமையின் பொருட்டு அலுவலர் ஒருவர் பிரதம செயலாளரின் அல்லது அமைச்சுச் செயலாளரின் அல்லது திணைக்களத் தலைவரின் அனுமதியுடன் அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்திருப்பின் பயன்படுத்திய வாகனத்திற்காகச் செலுத்திய நுழைவுச்சீட்டுக் கட்டணத்தை அல்லது சொகுசு பேருந்தில் பயணிக்கும் சந்தர்ப்பத்தில் அதற்காகச் செலுத்தப்பட்ட நுழைவுச்சீட்டுக் கட்டணத்தை மாகாண நிதியிலிருந்து மீளப்பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பில் அலுவலர் அதிவேக நெடுஞ்சாலையைப் பயன்படுத்துவதற்கான எழுத்துமூல கோரிக்கையை உரிய அனுமதி வழங்கும் அதிகாரியிடம் சமர்ப்பித்து முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அத்தோடு சாதாரண பாதைகளைப் பயன்படுத்தும் போது ஏற்படும் செலவுகளை விட அதிவேக நெடுஞ்சாலையைப் பயன்படுத்தும் போது மிகையான செலவு எதுவும் ஏற்படவில்லையென அனுமதி வழங்கும் அதிகாரி தனிப்பட்ட வகையில் உறுதிப்படுத்தல் வேண்டும்.

மேற்படி விடயம் தொடர்பாக 02/2017 ஆம் இலக்கமும் 17.02.2017 ஆம் திகதியும் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்று நிருபத்தின்படி இச்சுற்று நிருபத்தின் ஏற்பாடுகள் 01.01.2017 ஆம் திகதிமுதல் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் இது தொடர்பில் மேலதிக நிதியொதுக்கீடு எதுவும் வழங்கப்பட மாட்டாது எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.(5-8-102)

# தேசிய அறநெறிக் கல்வி மாநாடு

(கொழும்பு)

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தேசிய இந்து சமய அறநெறிக் கல்வி விழிப்புணர்வு வாரத்தினை முன்னிட்டு இலங்கையில் இந்து சமய அறநெறிக் கல்வியை மேம்படுத்தி விரிவாக்குவதன் அவசியம் தொடர்பாக ஏற்பாடு செய்துள்ள தேசிய அறநெறிக் கல்வி மாநாடு-2017 இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம் பெறும். சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தலைமையில் இந் நிகழ்வு இடம் பெறும். (இ-3)

# அமைச்சரவை ஊடகவியலாளர் சந்திப்பை நேரடியாக ஒளிபரப்பு செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

அடுத்த வாரம் முதல் அமைச்சரவை ஊடகவியலாளர் சந்திப்பை ஒரு மணித்தியாலத்துக்கு வரையறுத்து, தேசிய தொலைக்காட்சியின் ஊடாக நேரடியாக ஒளிபரப்புவதற்கு தீர்மானித்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேரடி ஒளிபரப்பு செய்யப்படுவதனால் அமைச்சரவை ஊடகவியலாளர் சந்திப்பை முற்பகல் 11.30 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 12.30 மணிக்கு முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பிலியந்தலை துப்பாக்கிச்சூடு இருவருக்கு விளக்கமறியல்

பிலியந்தலையில், கடந்த மே மாதம் 09ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவத்துக்கு, உடந்தையாக இருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில், இருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர்களில் ஒருவர், தர்கா நகரத்தையும் மற்றையவர் அஹுங்கல்ல பிரதேசத்தையும் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும், கெஸ்பேவ நீதிமன்ற நீதவான் முன்னிலையில், நேற்று முன்தினம் ஆஜர்படுத்திய போது, அவர்கள் இருவரையும் எதிர்வரும் 16ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த துப்பாக்கிப் பிரயோக சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இது வரையிலும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (இ-7)



யாழ்.கொக்குவில் மேற்கு மணியர்பதி அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டல கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்ற போது........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்பரப்புக்குள் ஆயுதங்களுக்கு இடமில்லை

(கொழும்பு)

எந்த நாட்டினது தாக்குதல் ஆயுதங்களும் இலங்கையின் கடல் எல்லைக்குள் அனுமதிக்கப்படாது என்று வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.



இந்தியப் பயணத்தின் முடிவில் டில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த போதே, அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தரித்துச் செல்வதற்கு சீன நீர்மூழ்கிக்கு அனுமதி மறுக்கப்பட்டமை தொடர்பாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் ரவி.

கப்பல் பாதைகள் என்ற வகைக்குள், கடற்படை மற்றும் தாக்குதல் ஆயுதங்களை உள்ளடக்க முடியாது.

இலங்கை கடற்பரப்புக்குள் தாக்குதல் ஆயுதங்கள் வரவேற்கப்படாது. நாம் எந்தவொரு நாட்டையும் குறிவைக்கவில்லை என்று தெரிவித்தார். (இ-7)

# இனங்காணப்படாத சிறுநீரக தொற்றாநோய் 11 மாவட்டங்களுக்கு தீவிர அச்சுறுத்தல்

(கொழும்பு)

இனங்காணப்படாத சிறுநீரக நோய் நாட்டில் 11 மாவட்டங்களில் தீவிர அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்த அவுஸ்திரேலிய ஒத்துழைப்பை அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ளது. இதனடிப்படையில் அவுஸ்திரேலிய ஆய்வுக் குழு இலங்கை வரவுள்ளது.

இனங்காணப்படாத சிறுநீரகநோய் இலங்கையில் காணப்படும் முக்கிய தொற்றா நோய்களுள் ஒன்றாகமாறியுள்ளது. 11 மாவட்டங்களிலும் 60 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இந்த நோய் பரவியுள்ளது.

எனவே தற்போது அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள இனங்காணப்படாத சிறுநீரக நோய் தொடர்பில் ஆராய்ச்சி செயற்பாடுகளை ஸ்திரப்படுத்துவது அத்தியாவசியமானதாகும்.

இதற்கு அமைவாக அவுஸ்திரேலிய அணு விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனம் இந்நோயின் மூலகாரணத்தை கண்டறிவதை நோக்காகக் கொண்ட ஆராய்ச்சிகளில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவுவதற்கு முன்வந்துள்ளது.

இதனடிப்படையில் அவுஸ்திரேலிய ஆய்வு மற்றும் தொழில்நுட்ப குழுவினர் இலங்கைக்கு வருகை தந்து குறித்த மாவட்டங்களில் ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அவுஸ்திரேலிய விஜயத்தின் போது அவுஸ்திரேலிய அணு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்திற்குமிடையே இனங்காணப்படாத சிறுநீரக தொற்றா நோய் பரவுவியல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரணிலிடம் நலம் விசாரித்த மகிந்த

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் தொலைபேசி உரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



இந்த சந்தர்ப்பத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நலம் குறித்து மகிந்த விசாரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வளைகுடாவில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. இதன்போது கட்டாரிலுள்ள இலங்கையர்களுக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்படின் அவர்களை உடனடியாக இலங்கைக்கு அழைக்க நடவடிக்கை எடுக்கு மாறு முன்னாள் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவிற்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜப்பானுக்கும் விஜயம் செய்துள்ள நிலையில் இந்த தொலைபேசி உரையாடல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# கட்டாருக்கு எதிரான நெருக்கடி நிலைமை இலங்கையில் நிச்சயம் தாக்கம் செலுத்தும்

## சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் தெரிவிப்பு



(கொழும்பு)

கட்டார் அரசுக்கு எதிராக எழுந்துள்ளநெருக்கடிநிலைமை இலங்கையில் நிச்சயமாக தாக்கம் செலுத்தும் என சுற்றுலாத் துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுற்றுலாத் துறைக்கு அது தாக்கம் செலுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளரார்.

கட்டார்நாட்டுக்கான விமான சேவையினால் இலங்கைக்கு பாரியளவு நிதி கிடைக்கப் பெற்றது. இலங்கைக்கு ஏற்படவுள்ள தாக்கத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அந்த நாட்டில் எழுந்துள்ள இந்த நெருக்கடி நிலைமை இன்னும் அதிகரிக்குமாயின் அந்நாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர்கள் திரும்பி விட வேண்டி ஏற்படும். இதனால், இலங்கையின் அந்நியச் செலாவணி வீழ்ச்சியைக் காட்டும்.

ஒரு இலட்சத்து 40 ஆயிரம் இலங்கையர்கள் கட்டாரில் உள்ளனர். கடந்த 2 வருடங்களில் சவுதிக்கு அடுத்தபடியாக அதிகமான இலங்கையர்கள் தொழிலுக்காக கட்டாருக்கே சென்றுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## கூண்டோடு பகைத்துக் கொள்கிறீர்களா?

பண்ருட்டிக்குத்தானே போகுறீர்கள்? இந்தப் புத்தகக் கட்டை ஹொஸ்டலில் படிக்கும் உங்கள் அக்காள் மகனிடம் சேர்ப்பித்து விட முடியுமா? எனக் கேட்டேன்.

ஊகும்! அவனை நான் போய்ப் பார்க்க மாட்டேன் என்றார். அந்த நபர் ஏங்க அவனோட சண்டையா? என்றேன். இல்லையில்லை. அவனோட அம்மாவோட–அதான்–எங்க அக்காவோட சண்டை என்றார். அதுக்கு அவன் என்னங்க பாவம் பண்ணினான் என்றேன். அதெல்லாம் எனக்குத் தெரியாது. அவங்க குடும்ப சங்காத்தமே எனக்கு வேண்டாம் என்றார் அவர்.

இத்தகைய நபர்களின் சுபாவங்களை மாற்றுவதில் எனக்கு எப்போதுமே மிகுந்த நம்பிக்கையும் ஈடுபாடும் உண்டு. அவருடன் பேசி சில ஐயங்களைத் தெளிவு செய்து கொண்டேன் உடனே பிரசார மூட்டையை அவிழ்த்துவிட்டேன். நீங்கள் செய்வது சரியல்ல என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். கருத்து வேறுபாடு உங்களுடைய அக்காவுடன்தான். அவன் அவர்களுடைய மகனாகப் பிறந்ததை ஒரு பாவச் செயலாக நீங்கள் கருதுவது நியாயமில்லை. இந்த ஒரு காரணத்திற்காக நீங்கள் தாய் மாமன் என்கிற வகையில் காட்ட வேண்டிய பாசத்தை இரக்கமற்ற இரும்புத்திரை கொண்டு மறைப்பது அவனுக்கு இழைக்கப்படும் பெரிய அநீதி. நீங்கள் குறிப்பிடுகிற உங்கள் அக்காவுக்கு உள்ள திமிர் அவனுக்கும் இருந்து உங்களை அவன் மதிக்காவிட்டாலோ உங்கள் அக்கா பாணியிலேயே நடந்து கொண்டு அவமானப் படுத்தினாலோ நானும் உங்கள் கட்சியில் சேர்ந்து கொள்வேன். அவனோ நல்ல பையன் என்று வேறு சொல்கிறீர்கள். உன் மாமா ஏண்டா உன்னைப் பார்க்க வர்றான்? இனிமே உன்னைப் பார்க்க வந்தா தெரியும் சேதி என்று உங்கள் அக்கா அவனைக் கண்டிக்கிறார்களா? என்று பாருங்கள் அப்படிக் கண்டிக்காவிட்டால் நடந்த தவறுகளுக்காக வருந்தி உங்களுடன் உறவைப் புதுப்பித்துக் கொள்ள விரும்புகிறார்கள் என்று பொருள். ஆக இவனையே பாலமாக்கி சொந்தத்தையும் சகஜமாக்கிக் கொண்டுவிடலாம்.

அக்காவுடனான வருத்தச் சம்பவத்தில் உங்கள் மீது தவறு என நீங்கள் நம்ப ஆரம்பித்தால் குற்ற உணர்வோடு அணுகி நிலைமையைச் சரி செய்து கொள்ளுங்கள். தவறு அவர்கள் மீது என மனப்பூர்வமாக நம்பினால் பெருந்தன்மையுடன் பிரச்சினையை அணுகிச் சரிசெய்து கொள்ளுங்கள். இந்த அளவுகுப் போக விரும்பாவிட்டாலும் பையனோடு மட்டுமாவது நிறுத்திக்கொள்ளுங்கள். அவ்விளைஞனுக்கு அன்பு மறுக்கப்படுவது கொஞ்சமும் நியாயமில்லை.

கொஞ்சநேரம் சிந்தித்தவர், நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் என் அக்கா பற்றி உங்களுக்குத் தெரியாது. நான் திரும்பவும் ஒட்டப் பார்கிறேன் என்றும் சில குடும்ப இரகசியங்களைக் கிளப்பப் பார்க்கிறேன் என்றும் குடும்ப ஒற்றுமையைக்கலைக்கிறேன் என்றும் ஆரம்பிப்பார் என்றார்.

இது உங்கள் வெறுப்பில் விளைந்த அனுமானம். அப்படியே ஆரம்பித்தாலும் ஆரம்பிக்கட்டுமே! அவை உண்மையில்லை என்று நிரூபியுங்கள். இதை நீங்கள் ஆரம்பிக்கப் போகும் புனிதப் போரின் இரண்டாவது கட்டமாக வைத்துக்கொள்ளுங்கள். இதைக்சுவடச் செய்யாவிட்டால் எப்படி என்றேன்.

அவர் மனம் மட்டுமல்ல புத்தகக் கட்டும் (கை) மாறியது.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை

*(தொடர்ச்சி...)*

VIII. மாகாணப் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முன்னாள் ஜனாதிபதி வருகைக்காக ஆறு தேசியப் பாடசாலைகளை அலங்கரிப்பதற்கு பெருந்தொகைப் பணத்தை செலவழித்தமை.

IX. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. முருகவேளின் சேவைக்காலம் முடிவுற உள்ள நிலையில் வேறு பொருத்தமான பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற் கான நடவடிக்கையும் இதுவரை எடுக்காமல் ஒப்பந்த அடிப்ப டையில் அவரது சேவையை தொடருவதற்கு முயற்சிக்கின்றமை.

இக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் வடமாகாணசபை உறுப்பினர்கள் கௌரவ பசுபதி அரியரட்ணம், கௌரவ கந்தையா சர்வேஸ்வரன், திரு.சிவபாதம் நந்தகுமார் ஆகியோர் சாட்சியமளித்து இருந்தனர். அத்துடன் கல்வி அமைச்சின் செயலாளர் திரு.இராசா இரவீந்திரன் குறித்த கௌரவ கல்வி அமைச்சர் ஆகியோரது சாட்சியங்களும் விசாரணைக்குழுமுன் பதிவு செய்யப்பட்டது.

**3.1 வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சிவபாதம் நந்தகுமார் என்பவர் 58 வயது 3 மாதங்கள் கடந்துள்ள நிலையில் அவருக்கு 16.01.2017இல் தவறான இடமாற்றம் ஒன்றை வழங்கி இருந்தமை மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்தமை.**

வட மாகாண சபை உறுப்பினர் கௌரவ சந்திரலிங்கம் சுகிர்தனால் முன்வைக்கப்பட்ட இக் குற்றச்சாட்டு தொடர்பில் வட மாகாணசபை கல்வி அமைச்சில் உதவிச் செயலாளராக பதவி வகிக்கும் திரு. சிவபாதம் நந்தகுமார் தமது சாட்சியத்தின் போது 2005ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை வடமராட்சி கல்வி வலயத்தின் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளராக தான் கடமையாற்றியதாகவும் 2011ஆம் ஆண்டு வலயக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டதாகவும் 2016ஆம் ஆண்டு அந்த பதவியில் கடமையாற்றியதாகவும் 17 வருடங்கள் ஒரே வலயத்தில் கடமையாற்றியதாக தன் மீது குற்றம் காணப்பட்டு 16.01.2017இல் தனக்கு 58 வயது 3 மாதங்கள் முடிவடைந்த நலையில் வட மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் பதவிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் ஓய்வு பெறுவதற்கு 2 வருடங்கள் உள்ள நிலையில் தன்னை இடமாற்றம் செய்து SLEAS தரம் II இல் உள்ள தனக்கு SLAS தரம் III இற்குரிய பதவி வழங்கப்பட்டதாக கூறியிருந்தார். ஓய்வு பெறும் நிலையில் இருந்த தன்னை இடம் மாற்றம்செய்தது தவறு என இவர் தமது சாட்சியத்தின் போது தெரிவித்தார். (மாகாண நிர்வாக சுற்றறிக்கை இல: NP/02/2009(7) -25/03/2009)

இவரது சாட்சியம் இவருக்குப் பின் சாட்சியமளித்த கௌரவ கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரது சாட்சியங்களில் இருந்து கல்வி அமைச்சில் நடைபெற்ற நியமனங்கள், பதவி வழங்கல், இடமாற்றம் தொடர்பில் பல முக்கிய விடயங்களை எம்மால் அவதானிக்க முடிகிறது. சட்டத்தின் பிரகாரம் கௌரவ ஆளுநருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை அவர் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு பிரதம செயலாளர், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் குறித்த பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே கையளிக்க முடியும். இவ்வாறு கையளிக்கப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் கையளிக்கப்பட முடியாது.

நியமனம் பதவிநிலை வழங்கல், இடமாற்றம் என்பவற்றில் அரசியல் தலையீடு இல்லாது இருக்க வேண்டும் என்ற அரசின் பொதுக் கொள்கைக்கு ஏற்பவே அதனடிப்படையில் பொதுச் சேவை ஆணைக்குழு தேசிய ரீதியில் செயற்படுகின்றது. மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு மாகாண மட்டத்தில் செயற்படுகின்றது. மேலும் ஆளுநரின் அதிகாரங்கள் எத்தகைய குழு அல்லது உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்படலாம் என்பது சட்டத்தில் திட்டவட்டமாக கூறப்படுகின்றது. இவையனைத்தும் அரசாங்க ஊழியரின் நியமனம் பதவி நிலை வழங்கல், இடமாற்றம் என்பன தொடர்பில் அரசியல் செல்வாக்கு பிரயோகிக்கப்படுவதை தடுக்கும் நோக்கில் செய்யப்பட்ட அரசியல் யாப்புரீதியான பாதுகாப்பு நடவடிக்கைகளாக அமைகின்றன. நிலைமை இவ்வாறு இருக்க எம் முன்னிலையில் பதியப்பட்ட சாட்சியங்கள் வட மாகாண அமைச்சர் வாரியம் இவ்விடயங்களில் தலையிட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. திரு. சிவபாதம் நந்தகுமாரின் விடயத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கும் அமைச்சின் செயலாளருக்கும் அப்பாற்பட்டு மாகாணசபையின் தலையீட்டால் அமைச்சர் வாரியத்தில் எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்த கௌரவ அமைச்சரது சாட்சியம், கல்வி அமைச்சு செயலாளரின் சாட்சியம் ஆகியவற்றில் இருந்து தெளிவாகின்றது. மேலும் எவ்வகையிலும் ஒரு அரசாங்க ஊழியருக்கு கொடுக்கப்பட முடியாத வாக்குறுதி வடமாகாண சபை அமைச்சர் வாரியத்தின் அறிவுடன் திரு சி.நந்தகுமாரிற்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது யாருக்கு பதவி வழங்குவதற்காக திரு.சி.நந்தகுமர் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் பதவியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டாரோ அவ் உத்தியோகத்தர் 6 மாதத்தில் ஓய்வுபெறுவார் என்றும் அவ்வேளையில் முறைப்பாட்டாளரான திரு சி.நந்தகுமாரை அப்பதவியில் மீண்டும் அமர்த்துவது என்ற வாக்குறுதி முறைப்பாட்டாளரான கல்வி அமைச்சினால் கொடுக்கப்பட்டுள்ளது. கௌரவ அமைச்சர், அமைச்சு செயலாளர் ஆகியோரது சாட்சியத்தின் படி அமைச்சர் வாரியத்தின் அறிவுடன் தான் இவ்வாக்குறுதி கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகின்றது.



இச் சந்தர்ப்பத்தில் கல்வி அமைச்சின் செயலாளரின் கூற்றுகள் சிலவற்றை மேற்கோள்காட்ட வேண்டியுள்ளது.

'இதை பொதுச் சேவைகள் ஆணைக்குழு மேற்கொண்டால் எவ்வளவோ பிரச்சினை தீர்க்கப்படும்' '...அதே போன்று எமது மாகாணத்திலும் பொதுச்சேவை ஆணைக்குழு தனது அதிகாரத்தை கையிலெடுத்து சேவையாற்ற வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்'

மேற்கூறிய அவதானிப்புகளுடன் விசாரணைக்குழு குறித்த முறைப்பாடு தொடர்பில் தனது கவனத்தை திருப்புகின் றது.

இவ் விசாரணைக்குழுமுன் சாட்சியமளித்த கௌரவ அமைச்சர் இம் முறைப்பாடு தொடர்பில் விலகிச் செல்லும் வகையில் பொறுப்பற்ற முறையில் சாட்சியமளித்ததை காணக்கூடியதாக இருந்தது.

குறித்த இடமாற்றம் தொடர்பில் கீழ்க் கண்ட பதில்களை கௌரவ கல்வி அமைச்சர் வழங்கியிருந்தார். குறித்த இடமாற்றம் அமைச்சர் வாரியத்தின் அனுமதியுடன் செய்யப்பட்டதாகவும் வடக்கு மாகாண உறுப்பினரின் கோரிக்கையின் மேல் செய்யப்பட்டதாகவும் முறைப் பாட்டாளர் வலயத்தை சரியான முறையில் நடத்திக் கொண்டிருந்தார். ஆனால் புஸ்பலிங்கம் விடாப்பிடியாக தனக்கு இப்பதவி தரப்பட வேண்டும் எனக் கோரிக்கை வழங்கப்பட்டதாகவும் முறைப்பாட்டாளரின் நியமனத்தில் நிகழ்ந்த அரசியல் பல காரணங்களை குறித்த இடமாற்றம் தொடர்பில் அமைச்சர் கூறியிருந்தார். கல்வி அமைச்சில் நடைபெறும் விடயங்களுக்கு தாம் பொறுப்பாளி இல்லை என கௌரவ கல்வி அமைச்சர் கூறியதும் மேலே குறிப்பிட்டவாறு பல குறித்த மாற்றம் தொடர்பில் பல விளக்கங்கள் கொடுக்க முன்வந்தமையும் கௌரவ கல்வி அமைச்சரின் இவ் விடமாற்றம் விடயத்தில் விலகிச் செல்லும் மனப்பான்மையை எடுத்துக்காட்டுகின்றது. மேலும் முறைப்பாட்டுக்காரரின் வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம் அரசியல் செல்வாக்குக்குட்பட்டதாக இருந்ததாக கூறி முறைப்பாட்டாளருக்கு 16.01.2017இல் வழங்கப்பட்ட இடமாற்றத்தை நியாயப்படுத்த அமைச்சர் முயற்சித்துள்ளார். முறைப்பாட்டுக்காரர் எம் முன் சாட்சியமளித்த வேளையில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளராக தாம் நியமனம் செய்யப்பட்ட வேளையில் தனது தராதரத்தில் சேவை மூப்பிருந்த போதிலும் புஸ்பலிங்கம் என்பவர் இருந்ததாகவும் தமக்கு இந்நியமனம் வழங்கப்பட்ட தன் மூலம் குறித்த புஸ்பலிங்கம் சேவை மூப்பு இருந்த போதிலும் அதே வலயத்தில் தமக்கு கீழ் சேவையாற்றிய நிலை ஏற்பட்டதையும் ஏற்றுக்கொண்டார். ஆசிரியராக தாம் சேவையாற்றிய வேளையில் கஷ்டமான பகுதிகளில் சேவை செய்ததையும் தனது திறமையையும் தமது சாட்சியத்தின் போது எடுத்துக்கூறி தனது வலயக்கல்விப் பணிப்பாளர் நியமனத்தை நியாயப்படுத்த அவர் முயற்சித்தார் . எனினும் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியில் முறைப்பாட்டாளர் கஷ்டப் பிரதேசத்தில் சேவை செய்யவில்லை என்பதையும் ஏற்றுக் கொண்டார்.

எம்முன் பதியப்பட்ட சாட்சியத்தின் மூலம் முறைப்பாட்டாளருக்கு 2011இல் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளராக வழங்கப்பட்ட நியமனம் அரசியல் செல்வாக்கின் நிமித்தம் வழங்கப்பட்ட முற்றிலும் தவறான நியமனம் என்ற முடிவுக்கு விசாரணைக்குழு வருகின்றது.

ஆயினும் 2013ஆம் ஆண்டு கல்வி அமைச்சராக பதவியேற்ற குறித்த கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ த.குருகுலராசா அவர்கள் ஏன் 2017தை மாதம் வரையில் இந்த மாற்றத்தை செய்யத்தயங்கினார் என்ற கேள்வி எழுகின்றது. இதேபோன்று தவறான வழியில் பதவிகளை பெற்ற தனது நண்பர்கள் இருவரை பாதுகாக்க அவர்களது சேவை ஓய்வுக்காலம் வரும்வரை கௌரவ அமைச்சர் நடவடிக்கை எடுக்காது இருந்தார் என எம் முன் கூறப்பட்ட சாட்சியத்தை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாகின்றது.

16.01.2017இல் முறைப்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் தவறானது இல்லை என கௌரவ அமைச்சர் தனது சாட்சியத்தின் போது கூறியுள்ளார்.

முறைப்பாட்டாளர் தவறான வழியில் வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனத்தை பெற்றிருந்த போதிலும் கௌரவ கல்வி அமைச்சர் தான் பதவியேற்று 4வருடங்களின் பின் அவர் ஓய்வு பெறும் காலத்தை அண்மித்து இருக்கும் போது அவருக்கு இடமாற்றம் வழங்கியமை தவறு என்ற முடிவுக்கு விசாரணைக்குழு வருகின்றது. மேலும் SLEAS தரம்II இல் இருந்த முறைப்பாட்டாளருக்கு SLEAS தரம்III தரத்தில் உள்ள பதவியை வழங்கி சேவை வழங்கியதும் தவறு என்ற முடிவிற்கு விசாரணைக்குழு வருகின்றது.

புதிய வடமாகாணசபை ஓர் புதிய அரசியல் நாகரீகத்தை உருவாக்கும் என்ற மக்களின் எதிர்பார்ப்பு மழுங்கடிக்கப்பட்ட நிலையை இங்கு காணமுடிகின்றது.

அமைச்சின் நியமனங்கள், இட ஒதுக்கீடு, இடமாற்றம் என்பன சட்டப்படி அமைச்சின் செயலாளருடைய நிர்வாக கடமை, கொள்கை ரீதியான முடிவுகளை எடுப்பதே அமைச்சர்களினதும் அமைச்சர் வாரியத்தினதும் கடமையாகும். நியமனம், இட ஒதுக்கீடு, இடமாற்றம் போன்ற விடயங்களில் தலையிடாதிருக்க வேண்டிய கௌரவ அமைச்சர் இவ் விடயங்களில் அமைச்சர் வாரியத்தின் முடிவு எனக் கூறுவது மிகவும் தவறான நிலைப்பாடாகும். எம் முன் சாட்சியமளித்த கல்வி அமைச்சின் செயலாளரும் இவ்விடயங்களில் தாம் அமைச்சர் வாரியத்தின் முடிவுகளை செயற்படுத்துவதாக கூறியுள்ளதை இங்கு சுட்டிக்காட்ட விசாரணைக்குழு விரும்புகின்றது. இந்நிலை மாற வேண்டும். அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்ட நிர்வாக ரீதியான கடமைகளில் அமைச்சர் வாரியம் அல்லது கௌரவ அமைச்சர் தலையிடுவது தவறானதாகும்.

**3.2 யா/யூனியன் கல்லூரி அதிபரின் நியமனத்தில் யூனியன் கல்லூரி பழைய மாணவராக இருந்த திரு.வரதன் மாஸ்டர் என்பவரை ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் செல்வாக்கு மூலம் கொஞ்சகாலம் படித்த காரணத்திற்காக அவரை அப்பாடசாலையின் அதிபராக நியமிக்க மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்தமை**

**3.3 குறித்த வரதன் என்பவர் கற்கை விடுமுறையில் இருக்கும் போது அவரை அதிபராக நியமித்தன் மூலம் அதிகார துஷ்பிரயோகம் புரிந்தமை.**

கௌரவ கந்தையா சர்வேஸ்வரன் வடமாகாணசபை உறுப்பினரால் முன்வைக்கப்பட்ட இக்குற்றச்சாட்டுக்கள் குறித்து கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சாட்சியமளித்த வேளையில் 2016ஆம் ஆண்டு யூனியன் கல்லூரி அதிபர் ஓய்வு பெற்று விட்டார். அந்த வெற்றிடத்திற்கு பதவி விண்ணப்பம் கோரப்பட்டு விண்ணப்பித்த நால்வருக்கும் நேர்முகப்பரீட்சை மாகாண கல்வி பணிப்பாளரின் தலைமையில் நடத்தப்பட்டு அதில் அவர்களால் விதந்துரைக்கப்பட்டவர்களது பட்டியலை கௌரவ கல்வி அமைச்சருக்கு சிபாரிசு செய்து அனுப்பி அனுமதி பெற்று நியமனம் செய்யப்பட்டது என்றும் இந்த நியமனத்தின் நியமன அதிகாரி அமைச்சர் இல்லை என்றும் மாகாணசபை உருவாக்கப்பட்ட பின்னர் (Statute Pass) பண்ணப்பட்டு இருக்கின்றது என்றும் அதில் கௌரவ அமைச்சருக்கான சில அதிகாரங்களை குறிப்பிட்டு இருக்கின்றபடி நியமனம் அமைச்சின் அனுமதியோடு செய்யப்பட்டது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

அரசியல் யாப்பின் பிரகாரம் மாகாண சபையின் பதவிகளுக்கான உத்தியோகத்தர் நியமன அதிகாரம் கௌரவம் ஆளுநருடையது. அதை அவர் யாருக்கு தனது அதிகாரத்தை கையளிக்கலாம் என்பதும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. அவ்வாறு கையளிக்கப்பட்ட அதிகாரி மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு அல்லது கௌரவ ஆளுநர் மட்டுமே இந்நியமன அதிகாரத்தை செயற்படுத்த முடியும். இது தொடர்பில் வடமாகாணசபை ஏதாவது நியதி சட்டம் இயற்றி நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பின் அது எம் முன் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு நடைபெறவில்லை.

இந்நியமனம் குறித்து சாட்சியமளித்த வடமாகாண கௌரவ கல்வி அமைச்சர் தமது சாட்சியத்தில் திரு.வரதன் அவர்களுக்குத்தான் நேர்முகப்பரீட்சையில் அதிக புள்ளிகள் கிடைத்து அதன்படி அவருக்கு வழங்கினோம் என்றும் அமைச்சர் வாரியத்திற்கு அனுப்பி முடிவெடுத்து செய்கின்றோம் என முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் கூறியுள்ளார்.

எது எப்படி இருப்பினும் அமைச்சு செயலாளரின் சாட்சியமும் கௌரவ அமைச்சரின் சாட்சியமும் இந்நியமனம் அமைச்சரினது பணிப்புரையின்படியே செய்யப்பட்டது என்பதை நிரூபிக்கின்றன.

விசாரணைக்குழு முன் சாட்சியமளித்த முன்னாள் வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளரும் வடமாகாண சபை உறுப்பினருமான கௌரவ பசுபதி அரியரட்ணம் தமது சாட்சியத்தின் போது யூனியன் கல்லூரி 1AB தரத்தில் உள்ள பாடசாலை என்றும் இங்கு தரம் 1அதிபர்வகுப்பில் உள்ளவர் அல்லது SLEAS அலுவலர் அதிபராக வரமுடியும் என்றும் 2016ஆம் ஆண்டு இப்பாடசாலைக்கு அதிபர் ஆக நியமிக்கப்பட்டவர் இத் தராதரத்தில் இல்லை என்றும் அவர் தரம் 2ஐச் சேர்ந்த அதிபர் என்றும் கற்கை விடுமுறையில் நின்ற வேளை இவருக்கு இந்நியமனம் வழங்கப்பட்டதெனவும் கல்வித்துறையில் தமது 40வருடகால அனுபவத்தில் கற்கை விடுமுறையில் நின்ற ஒருவருக்கு நியமனம் வழங்கிய சம்பவம் ஒரு போதும் நடைபெறவில்லை என்றும் அவ்வாறு கற்கை விடுமுறையில் நின்ற ஒருவருக்கு அதிபர் பதவி வழங்கியமை தவறு என்றும் வரதனின் நியமனத்தை இடைநிறுத்துமாறு கௌரவ முதலமைச்சரே வட மாகாண சபையில் தீர்மானித்தும் கௌரவ அமைச்சர் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அமைச்சின் செயலாளர் இந்நியமனத்தை செய்யும் அதிகாரி என்றும் அமைச்சர் இத் தவறான நியமனம் குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் சாட்சியமளித்தார். மேலும் அவர் தமது சாட்சியத்தில் அமைச்சு செயலாளர் தமது சாட்சியத்தில் தரம்1 அதிபர்களின் பற்றாக்குறை பற்றி கூறியது மறைக்கப்பட்ட உண்மை எனவும் தட்டுவன்கொட்டி அம்பிகை வித்தியாலயத்தில் 1-5 வரையிலான வகுப்புகளே

→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை

நடை பெறுவதாகவும் அதன் அதிபர் தெய்வேந்திரராஜா என்பவர் தரம் 1 அதிபராகவும் இருக்கிறார் என்றும் மாற்றம் கோரிய வேளையிலும் அது அவருக்கு கொடுக்கப்படவில்லை என்றும் சாட்சியமளித்தார்.

கௌரவ கல்வி அமைச்சர் தமது சாட்சியத்தில் யூனியன் கல்லூரி தொடர்பில் முதலமைச்சர் தீர்மானம் எடுத்ததை ஏற்றுக் கொண்டுள்ளார். தட்டுவன் கொட்டிப்பாடசாலை அதிபர் தெய்வேந்திரராஜா தொடர்பில் தெரிவிக்கும் பொழுது அவர் விபத்தில் சிக்கியதால் அவரால் சரிவரத் தனது கடமைகளைச் செய்ய முடியவில்லை என சாட்சியமளித்தார். அவர் அவ்வாறு விபத்தில் சிக்கித் தனது கடமைகளை சரிவர செய்ய முடியாத நிலையில் இருக்கிறார் என்பது எம் முன்னிலையில் உரிய சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை. மேலும் கௌரவ அமைச்சர் தமது சாட்சியத்தில் 1AB பாடசாலைக்கு உரிய ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பாடசாலைக்கு போகவில்லை. கோட்டக் கல்வி அலுவலகங்களில் Attach பண்ணி இருக்கிறோம் எனக் கூறியுள்ளார். இச் சாட்சியம் கௌரவ பசுபதி அரிய ரட்ணத்தின் சாட்சியத்தை உறுதிப்படுத்து கின்றது.

மேலும் வடமாகாண கௌரவ கல்வி அமைச்சர் தமது சாட்சியத்தின் போது கற்கை விடுமுறையில் நிற்கும் ஒருவர் அக் காலத்தில் வேறு பயிற்சி பெறக் கூடாது என்று மட்டுமே பிரமாணம் உள்ளது என்றும் பதவி உயர்வுகளுக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கக்கூடாது என்று எதுவும் இல்லை. இதனால் பதவி வழங்கியதாக கூறியிருந்தார். கௌரவக் கல்வி அமைச்சரின் இந் நிலைப்பாட்டை இவ் விசாரணைக் குழு ஏற்க மறுக்கின்றது. ஏனெனில் விடுமுறையில் நிற்கும் ஒருவருக்கு பதவி வழங்கப்படுவது ஓர் தகுந்த நெறிமுறை இல்லை.

மேலும் கௌரவ பசுபதி அரியரட்ணம் தமது சாட்சியத்தில் வட மாகாண கல்வி அமைச்சர் கிளிநொச்சியில் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய வேளையில் வரதனை அவரது வீட்டுக்கு மிக அருகில் உள்ள முருகானந்தா பாடசாலை க்கு அதிபராக நியமித்தார் என்றும் அவர்கள் மிக நெருங்கிய குடும்ப நண்பர்கள் என்றும் சாட்சியமளித்திருந்தார். இந்த சாட்சியம் கௌரவ அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட போதும் அவர் அதை மறுத்து எதுவும் கூறவில்லை.

இச் சாட்சியங்களின் அடிப்படையில் தில்லையம்பலம் வரதன் என்பவர் தரம் 2 அதிபர் என்பதும் இவர் தரம் 2 அதிபராக இருந்த வேளையில் 1AB பாடசாலையான யூனியன் கல்லூரிக்கு அதிபராக வட மாகாண கல்வி அமை ச்சரது பணிப்புரைக்கமைய நியமிக்கப்பட்டார் என்பதும் அவ்வாறு நியமிக்கப்பட்ட வேளையில் அவர் கற்கை விடுமுறையில் நின்றார் என்பதும் நிரூபணமாகின்றது. ஆயினும் பாராளு மன்ற உறுப்பினரின் செல்வாக்கு குறித்து எதுவித சாட்சிய மும் எம் முன்வைக்கப்படவில்லை. அத்துடன் அமைச்சின் செய லாளர் இந் நியமனத்தை சுதந்திரமாக செய்ய வேண்டிய அதிகாரியாக இருந்த போதிலும் கௌரவ அமைச்சரே அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத்ததாக தெரியவந் ள்ளது.

எனவே 2 ம் குற்றச்சாட்டில் பாராளுமன்ற அங்கத்தவரின் செல்வாக்கு என்பது நீக்கப்படுவதற்கமைவாக வட மாகாண கௌரவ கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சருக்கு எதிராக மேற்படி குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு இவ் விசாரணைக்குழு வருகின்றது.

**3.4 குறித்த அதிபரின் நியமனத்தை உடன் நிறுத்துமாறு மாகாண சபையின் கௌரவ முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாகாண சபை அமர்வில் தீர்மானம் நிறை வேற்றப்பட்ட போதும் அதனை செயற்படுத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்காது இருக்க செயலாளரை தடுத்தமை.**

மேற்படி குற்றச்சாட்டு குறித்து வட மாகாண கௌரவ கல்வி அமைச்சர் தமது சாட்சியத்தின் போது மாகாணசபையின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தமக்கு ஞாபகமில்லை எனக் கூறிய வேளையிலும் வேறொரு கேள்விக்கு பதில் அளிக்கும் வேளையில் வட மாகாண கௌரவ கல்வி அமைச்சர் அத்தீர் மானம் யூனியன் கல்லூரி தொடர்பானது எனக் கூறியுள்ளார். எனவே இப்பதிலிருந்து இத் தீர்மானம் குறித்து கௌரவ அமைச்சர் அறிந்திருந்தார் என்ற முடிவுக்கு விசாரணைக்குழு வருகின்றது.

எனினும் பதவி இடைநிறுத்தம் என்பது அமைச்சு செயலாளரின் அதிகாரத்திற்குட்பட்ட விடயம். இதில் மாகாண சபையோ கௌரவ முதலமைச்சரோ முடிவு எடுக்கவோ அல்லது அம் முடிவினை செயற்படுத்துமாறு அமைச்சு செயலாளரை கேட்கவோ சட்டத்தில் இடமில்லை. இதன் காரணமாக இக் குற்றச்சாட்டிற்கு வடமாகாண கௌரவ கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் பொறுப்பு இல்லை என்ற முடிவுக்கு விசாரணைக்குழு வருகின்றது.

**3.5 அ. 2015ஆம் ஆண்டளவில் கிளிநொச்சி பாரதிபுரம் அதிபர் அப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவி ஒருவரிடம் தகாத முறையில் நடக்க முற்பட்டமை தொடர்பாக வடமாகாண சபை உறுப்பினர் கௌரவ அன ந்தி சசிதரன், கௌரவ கல்வி அமைச்சருக்கு முறைப்பாடு செய்திருந்த போதும் அவ் அதிகாரிகளுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமை.**

வடமாகாண சபை உறுப்பினர் கௌரவ அனந்தி சசிதரனால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டான 2015 ஆம் ஆண்டளவில் பாரதிபுரம் பாடசாலை அதிபர் அப் பாடசாலை மாணவி ஒருவரிடம் தகாத முறையில் நடக்க முற்பட்டமை தொடர்பில் எதுவித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்காமை,




இச் சம்பவம் குறித்து வட மாகாண சபை உறுப்பினர் கௌரவ அனந்தி சசிதரன், வடமாகாண கௌரவ கல்வி அமைச்சருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இக் குற்றச்சாட்டு தொடர்பில் கௌரவ கல்வி அமைச்சர் தனது சாட்சியத்தில் இச் சம்பவத்தை தொடர்ந்து குறித்த அதிபர் 1AB பாடசாலையில் இருந்து சிறிய பாடசாலைக்கு மாற்றப்பட்டார் என்றும் வலயக் கல்விப் பணிப்பாளரினால் இச் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் குறித்த அதிபரின் பெயர் கணேசன் என்றும் கூறியிருந்தார். இவ் விடயம் குறித்து ஏன் பொலிஸாருக்கு முறைப்பாடு கொடுக்கப்படவில்லை என கேட்கப்பட்டபோது கௌரவ அமைச்சர் அதற்கு "நீங்கள் அதனை செயலாளரிடம் தான் கேட்க வேண்டும் எனக்கு அதுபற்றி தெரியாது" எனப் பொறுப்பற்ற வகையில் கூறியுள்ளார். இவ் விடயத்தில் கௌரவ அமைச்சர் நடவடிக்கை எடுக்கத் தவறியமை பற்றி அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்ட வேளையில் "நீங்கள் தான் குறிப்பிடுகின்றீர்கள் சம்பந்தப்பட்ட மாணவியிடம் இருந்து எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை" எனக் கூறியுள்ளார்.

சம்பந்தப்பட்ட மாணவியிடம் இருந்து முறைப்பாடு கிடைக்கவில்லை என்ற நிலைப்பாட்டை கௌரவ அமைச்சர் எடுத்த வேளையிலும் குறித்த அதிபருக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டு அவர் 1AB பாடசாலையில் இருந்து தரம் இறக்கப்பட்டுள்ளார் என்ற அமைச்சரின் கூற்று இச் சம்பவத்தை நிரூபிக்கின்றது.

இவ்வாறு அவ் அதிபருக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டது, அவர் தரம் இறக்கப்பட்டார் என்பவற்றிற்கு எதுவித ஆதாரமும் எம் முன் வைக்கப்படவில்லை. எனினும் கௌரவ அமைச்சரின் பதிலில் இருந்து குறித்த சம்பவம் உண்மை என்பதும் இது குறித்து அமைச்சர் அறிந்திருந்தார் என்பது நிரூபணமாகின்றது.

மேலும் கௌரவ அமைச்சரிடம் குறித்த அதிபருடன் என்ன தொடர்பு எனக் கேட்கப்பட்ட வேளையில் தாம் கல்விப் பணிப்பாளராக இருந்த வேளையில் இவ்வதிபர் சேவைக்கால ஆலோசகராக இருந்தார் என்றும் அவ்வதிபர் தன்னுடைய நண்பனில்லை என்றும் கூறியிருந்தார். எனினும் இச்சம்பவத்தை நன்கு அறிந்திருந்தும் குறித்த அதிபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளரை அல்லது செயலாளரை கேட்க அமைச்சர் தவறியுள்ளார்.

கல்வித் துறையையே தலை குனிய வைக்கும் இச் செயல் இங்கு கௌரவ கல்வி அமைச்சர் உட்பட கல்வி அதிகாரிகளால் மூடி மறைக்கப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். இது ஓர் தவறான செயலாகும். குறித்த அதிபர் மாணவியின் மீது புரிந்த பாலியல் வன்முறை நடவடிக்கையானது ஓர் குற்றவியல் நடவடிக்கையாக அமைகின்றது.

இச் சம்பவத்தை மூடி மறைப்பதில் கௌரவ அமைச்சருக்கு பங்கு இருந்துள்ளது என்பது நிரூபணமாகின்றது. எனவே இது ஓர் அதிகார துஷ்பிரயோகம் என்ற முடிவுக்கு இவ் விசாரணைக்குழு வருகின்றது.

**3.5. ஆ. குறித்த அதிபர் பாடசாலை மாணவியுடன் தகாத முறையில் நடந்து கொள்ள முயன்ற விடயத்தை பாடசாலை வகுப்பாசிரியர் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. முருகவேளுக்கு கடிதம் மூலம் முறைப்பாடு செய்தார். அதற்காக அவ் ஆசிரியர் பழிவாங்கப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. முருகவேளால் இடமாற்றம் செய்யப்பட்டமை.**

இவ் விடயம் குறித்து எதுவித நேரடி சாட்சியமும் எம்முன் வைக்கப்படவில்லை. எனினும் கௌரவ கல்வியமைச்சரிடம் இது குறித்து கேட்கப்பட்ட வேளையில் குறித்த ஆசிரியர் இடமாற்றம் தமது விருப்பப்படி பெற்றுச் சென்றதாகவும் இம்முறைப்பாடு தமக்கு வரவில்லை என்றும் வந்திருந்தால் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும் கூறியிருந்தார். சம்பந்தப்பட்ட ஆசிரியையின் சாட்சியம் எம் முன் நெறிப்படுத்தப்படாமையில் இக் குற்றச்சாட்டை விசாரணைக்குழு நிராகரிக்கின்றது. அதேவேளையில் இக்குற்றச்சாட்டு தொடர்பில் முறையான விசாரணை ஒன்றை நடத்துமாறு கல்வியதிகாரிகளை பணிக்குமாறு கௌரவ முதலமைச்சரை இவ் விசாரணைக்குழு கேட்டுக் கொள்கின்றது.

**3.5 இ. குறித்த ஆசிரியரின் கடித மூலமான முறைப்பாட்டை விசாரிக்க சென்ற வலயக் கல்விப் பணிப்பாளர் அவ் ஆசிரியரை ஏனைய ஆசிரியர்கள் முன்னிலையில் கொச்சைப்படுத்தியமை தொடர்பாக கௌரவ அனந்தி சசிதரன், கௌரவ கல்வி அமைச் சரின் கவனத்திற்கு கொண்டு வந்தும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்காமை.**

இது தொடர்பில் எம்முன் செய்யப்பட்ட முறைப்பாட்டில் குறித்த கல்விப் பணிப்பாளர் விசாரணைக்கு என்று சென்ற வேளையில் குறித்த முறைப்பாட்டை செய்த வகுப்பாசிரியையிடமிருந்து தமக்கு ஒரு காதல் கடிதம் வந்துள்ளதென பகிரங்கமாக கூறினார் என்பதாகும்.

இதிலிருந்து கௌரவ கல்வி அமைச்சரிடம் விசாரணைக் குழு விசாரித்த வேளையில் தமக்கு எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்றும் இல்லை என்றும் கௌரவ அனந்தி சசிதரன் சொன்னது தமக்கு தெரியாது எனவும் கூறியிருந்தார்.

இங்கு சம்பந்தப்பட்ட ஆசிரியையின் சாட்சியம் எம்முன் நெறிப்படுத்தப்படாமையினால் இக் குற்றச்சாட்டை இவ் விசாரணைக்குழு நிராகரிக்கின்றது.

அதேவேளையில் ஆசிரியையினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பாரிய தன்மை காரணமாக வலயக் கல்விப் பணிப்பாளரின் இந் நடத்தை குறித்து ஓர் முறையான விசாரணை நடத்துமாறு கல்வி அதிகாரிகளை பணிக்குமாறு கௌரவ முதலமைச்சரை இவ் விசாரணைக்குழு கேட்டுக் கொள்கின்றது.

மேலும் கிளிநொச்சி பாரதிபுரம் பாடசாலையில் 2015 ஆம் ஆண்டளவில் "மாணவி ஒருவருடன் அப்போதைய அதிபர் தகாத முறையில் நடக்க முற்பட்டமை தொடர்பிலும் இவ் விடயத்தை வலயக்கல்விப் பணிப்பாளருக்கு தெரியப்படுத்திய ஆசிரியை இடமாற்றம் செய்யப்பட்டமை குறித்தும் ஆசிரியை இம் முறைப்பாட்டை செய்தமையால் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகிய முருகவேளினால் ஏளனம் செய்யப்பட்டமை தொடர்பிலும் குற்றவியல் நடவடிக்கை சட்டத்திற்கு அமைய விசாரணை நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டும் எனவும் இவ் விசாரணைக்குழு கேட்டுக் கொள்கின்றது.

**3.6 கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயத்திலும், கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் பாடசாலையிலும் தனக்கேற்றவர்களை அதிபராக நியமனம் செய்ய கல்வி அமைச்சின் செயலாளருக்கு அழுத்தம் கொடுத் தமை**

இவ்விடயம் குறித்துகௌரவ கல்வி அமைச்சர் தமது சாட்சியத்தில் கல்வி அமைச்சில் விண்ணப்பம் கோரி நேர்முக தேர்வு நடத்தித் தான் நியமனம் செய்தார்கள் என்றும் தாம் அதற்கு எது வித் அழுத்தமும் கொடுக்கவில்லை என்றும் கூறியிருந்தார். வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தமது சாட்சியத்தில் 2015 ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 80 அதிபர்களுக்கு தரம் 1 பதவியுயர்வு மத்திய கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டது. அதில் வெற்றிடமாக இருந்த பாடசாலைகளுக்கு விண்ணப்பம் கோரி நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டதாகவும் அப்போது கிளி/ புனித திரேசா பெண்கள் பாடசாலையிலிருந்த அதிபர் வேறு பாடசாலைக்கு தெரிவு செய்யப்பட்டதால் கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரிக்கு அதிபர் வெற்றிடம் ஏற்பட்டது. அதற்கு வலிகாமம் கல்வி வலயத்தில் சங்கானை பிரதேசத்திற்கு கோட்டக் கல்வி அதிகாரியாக இருந்த வகுப்பு 1 அதிபரை அந்த பாட சாலைக்கு நியமிக்குமாறு கல்வி அமைச்சர் கூறியிருந்தார் என்றும் இந் நியமனம் கல்வி அமைச்சரின் சிபார்சிலேயே செய்யப்பட்டது என்றும் கூறியிருந்தார்.

இச் சாட்சியம் கிளி/ புனித திரேசா பெண்கள் பாடசாலை தொடர்பில் கௌரவ அமைச்சர் மீது கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டை நிரூபிக்கின்றது. அங்கு கௌரவ கல்வி அமைச்சரின் அழுத்தம் காரணமாகவே அந்த நியமனம் நடைபெற்றது என்ற முடிவுக்கு இவ் விசாரணைக்குழு் வருகின்றது. கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயம் தொடர்பில் எதுவித சாட்சியமும் எம்முன் வைக்கப்படாத நிலையில் கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயம் தொடர்பான குற்றச்சாட்டு நிராகரிக்கப்படுகின்றது.

**3.7 வட மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் ஆசிரியர் மாநாடு என்ற பெயரில் பெருமளவில் நிதி செலவழித்து வீண்விரயம் செய்தமை**

இக் குற்றச்சாட்டு தொடர்பில் சாட்சியமளித்த வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.இ. இரவீந்திரன் தமது சாட்சியத்தில் ஆசிரியர் மாநாடு 12 வலயங்களில் நடத்தப்பட்டது என்றும் 2015 ஆம் ஆண்டு PSDG நிதியில் 80 மில்லியன் ஒதுக்கி ஆசிரியர் மகாநாட்டையும் அதிபர் மகாநாட்டையும் கட்டாயம் நடத்தும் படி கூறப்பட்டதாகவும் தாங்கள் 80 மில்லியன் ஒதுக்கி ஆசிரியர் மகாநாட்டையும் அதிபர் மகாநாட்டையும் கட்டாயம் நடத்தும் படி கூறப்பட்டதாகவும் தாங்கள் 80 மில்லியனையும் இதற்கு பயன்படுத்த முடியாது எனக் கூறி 40 மில்லியனை இத் தேவைக்கும் மிகுதி 40 மில்லியனை ஆசிரியர்களுக்கான தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு வழங்கியதாகவும் அதன் படி 40 மில்லியனில் 24 மில்லியனில் 2 மில்லியன் படி 12 வலயத்திற்கும் மிகுதி 16 மில்லியனை அதிபர் மாநாட்டிற்கும் ஒதுக்கி வழங்கியதாகவும் ஒவ்வொரு வலயமும் தமக்கு வழங்கிய நிதிக் கேற்றவாறு ஒதுக்கி செலவு செய்தார்கள் என்றும் கூறியிருந்தார்.மேலும் அவர் தமது சாட்சியத்தில் தாங்கள் ஒவ்வொரு வலயத்திற்கும் நிதியை கொடுத்து அவர்களே விழாவிற்கான திட்டங்களை மேற்கொண்டு செய்தார்கள் என்றும் அவர்களது நோக்கம் எல்லா ஆசிரியர்களும் ஒன்று கூடி தங்களது திறமைகளை வெளிப்படுத்துவது என்றும் அவர்களுக்கான பாடவிதானங்களுடன் தொடர்பான சுற்றறிக்கைகளுடன் ஆய்வுகள், ஆக்கங்கள் பற்றிய நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் கூறியிருந்தார்.

இவரது சாட்சியத்தில் இருந்து ஆசிரியர் மாநாட்டுக்கென வழங்கப்பட்ட 80 மில்லியன் 40 மில்லியனாக வடமாகாண கல்வி அமைச்சினால் குறைக்கப்பட்டது என்பது தெரிய வருகின்றது. மேலும் ஆசிரியர் மாநாட்டுக்கென இந் நிதி வழங்கப்பட்ட போதிலும் ஒவ்வொரு வலயத்திற்கும் நிதியை வழங்கிய பின் அவர்களே விழாவிற்கான திட்டங்களை மேற்கொண்டு செய்தார்கள் என்றும் கூறியிருந்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தக்கோரி போராட்டம்

## கூட்டு எதிர்க்கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை துரித கதியில் நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக கூட்டு எதிர்க் கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். அரசாங்கம் தொடர்ந்தும் தேர்தலை ஒத்தி வைத்து வருகின்றது. அரசாங்கத்தை தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தும் விரிவான போராட்டங்கள் நடத்தப்படும். இது தொடர்பில் கூட்டு எதிர்க் கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்மானம் எடுக்கப்படும்.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக, இந்தப் போராட்டம் தற்காலிக அடிப்படையில் ஒத்தி வைக்கப் பட்டது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டு சுமார் இரண்டு ஆண்டுகள் கடந்துள்ளன. தேர்தல்களை ஒத்தி வைப்பது மக்களின் ஜனநாயக உரிமைகளை பறிக்கும் செயலாகும். வெளிநாட்டு தூதுவர்களை சந்தித்து இது குறித்து தெளிவுபடுத்தும் நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (இ-7)

## துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு



கரவெட்டி ஸ்ரீநாரதா வித்தியாலயத்தில் கல்வி கற்றுவரும் வினிதா என்ற மாணவி 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.ளசாதாரணப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றதற்காக மனுவேல் வேதநாயகன் என்பவரால் துவிச்சக்கர வண்டி ஒன்று அண்மையில் அன்பளிப்பாக வழங்கப் பட்டது. (இ-60)

# கபீர் ஹாசிம் - லக்ஷ்மன் பிரச்சினை தொடர்கிறது

அரச முயற்சியாண்மை அமைச்சர் கபீர் ஹாசிம் திடீரென கடந்த 7 ஆம் திகதி வெளிநாட்டு விஜய மொன்றில் ஈடுபட்டுள்ளதனால், இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாபர் அபேவர்தனவுக்கு தனது புதிய அமைச்சுப் பதவியை பொறுப்பேற்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சின் இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள லக்ஷ்மன் யாபா அபேவர்தனவிற்கு அலுவலக வசதிகள் மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் அமைச்சர் கபீர் ஹாசிம் வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதனால், அமைச்சர் யாபா அலுவலகமொன்றை பெற்றுக் கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சு அலுவலகம் வழங்கப்படும் வரையில் இராஜாங்க அமைச்சர் யாபா சொந்த ஊரான மாத்தறையில் தங்கியிருப்பதாக தீர்மானித்துள்ளார்.

இவரது அலுவலகப் பிரச்சினைக்கு கடந்த திங்கட்கிழமை தீர்வொன்றைப் பெற்றுத் தருவதாக அவ்வமைச்சின் செயலாளர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரத்ன தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும்

## ஐ.தே.கவிடம் ஹெல உறுமய கோரிக்கை

பாராளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்ன தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜாதிக ஹெல உறுமய கட்சி, ஐக்கிய தேசியக் கட்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதுரலிய ரத்ன தேரருக்கும் ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கும் இடையில் அண்மைக் காலமாக கடும் முரண்பாடுகள் ஏற்பட்டு வருகின்ற நிலையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் உறுப்பினராக செயற்பட்டு வந்த ரத்ன தேரர் கட்சியின் ஒழுக்க விதிகளை மீறியுள்ளதாக கட்சியின் தலைவர் ஹெடில்லே விமலசார தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ரத்ன தேரர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக கடமையாற்றி வருகின்றார். எனவே, ரத்ன தேரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிமிடம் ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. உத்தியோக பூர்வ அடிப்படையில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1098

Search for people, places and things | Nagendram | Home

### டனித்தா




### சுது





### ராகவன்




### நிலாந்தி




### மதீபன்




### கௌதமி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு- ஒரு பார்வை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

கேரளாவில் 2001 ஆம் ஆண்டு குடித்தொகை கணிப்புப் படி 598618 தமிழர்கள் இருந்துள்ளனர். இதுபோல் 2011 ஆம் ஆண்டு குடித்தொகைக் கணக்குப் படி தமிழ் நாட்டின் மொத்த குடித்தொகையில்மலையாளிகள்0.89% மாக இருந்துள்ளனர். கேரளாவில் தமிழர்கள் பீர்மேடு, தேவி குளம், பாலக்காடு தாலுக்கா மற்றும் திருவனந்தபுரம் பகுதிகளில் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்றனர். ஆனால் மலையாளிகள் தமிழ் நாட்டில் தொழில் நிமித்தம் இடம் பெயர்ந்து வந்து சென்னை, கோயம்புத்தூர், ஊட்டி போன்ற இடங்களில் கூடுதலாக இருக்கின்றனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் மலையாளிகள் பூர்வீகமாக அங்கு வாழ்பவர்கள். தமிழ் நாட்டில் ஓணம் பண்டிகையின் போது கோயம்புத்தூர், சென்னை, க்ன்னியாகுமரி, ஊட்டி மாவட்டங்களில் மலையாளிகளுக்கு அரச விடுமுறை கொடுப்பர்.




தமிழ்நாட்டுக்கும் கேரளாவுக்கும் முல்லை பெரியார் நீர்த்தேக்கம் குறித்து கடுமையான கருத்து முரண்பாடு காணப்படுகின்றது. முல்லைப் பெரியார் நீர்த்தேக்கம் பிரித்தானியர் காலத்தில் கட்டப்பட் டது. இது தற்பொழுது கேரள மாநில எல்லைக்குள் இருக்கிறது. ஆனால் இதன் பராமரிப்பு மற்றும் நிர்வாக முகாமைத்துவம் தமிழ் நாட்டுக்கு கீழ் இருக்கின்றது.

கேரளமுல்லைப்பெரியார்அணை பலமிழந்து இருக்கின்றதென்றும், இதற்கு மாற்றாக புது அணை கட்ட வேண்டுமென்ற வாதத்தை முன்வைத்துக்கொண்டுள்ளது. ஆனால் தமிழ்நாடு முல்லை. பெரியார் அணை நல்லநிலையில்இருக்கின்றதென்றும்,கேரளாவில் உள்நோக்கம் கொண்டு தமிழ் நாடு இன்றும் பயன்படுத்தும் நீரை இல்லாது செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை முன்னெடுத்துக் கொண்டு இருக்கின்றது. அணையில் 150 அடி உயரம் வரையில் நீர் தேங்கக் கூடியதாக இருந்தும் அணை பலமில்லாமல் இருக்கின்றதென்று கேரளா கூறிவந்தாலும் அதன் அழுத்தத்தால் 136 அடி வரை நீர்த் தேக்கப்பட்டது. பின்னர் மத்திய அரசு பொறியியல் ஆணைக் குழுவினர் பெரியார் அணையை பரிசோதித்து அவர்கள் இந்த அணை நல்ல நிலையில் இருப்பதாகச்சிபார்சு செய்த பின்னர் கேரளாவின் புது அணைக் கோரிக்கை தற்பொழுது சற்றுக் குறைந்துள்ளது. பெரியார் நீர்த் தேக்கத்தை நம்பியே தேனி, மதுரை, இராமநாதபுரம் விவசாயிகள் இருக்கின்றனர். தற்பொழுது பெரியார் நீர்த் தேக்கம் 142 அடி வரை நீரைத் தேக்க வசதியுண்டு.

பரம்பிக்குளம் – அளியார் திட்டம், கேரளா – தமிழ்நாட்டு இடையே 1950 கள்ில் ஏற்பட்ட உடன்பாட்டில் தமிழ் நாட்டால் நிறைவேற்றப்பட்டது. இத் திட்டத்தின் மூலம் மேற்கு ஓடும் ஆறுகள் மறிக்கப்பட்டு நீர்த் தேக்கங்கள் உருவாக்கப்பட்டு கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெரியளவு விவசாய நிலம் நீர்ப்பாசன வசதி பெற்றுள்ளது. தற்பொழுது கேரளா இத் திட்ட நிபந்தனைகள், உடன்பாடுகளை மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நிற்கின்றது.

கோயம்புத்தூர், புத்தூர் நகருக்கு நீர் ஆதாரமான சிறுவாணி ஆறு கேரளாவில் உற்பத்தியாகி தமிழ் நாட்டுக்குள் பிரவேசிக்கின்றது. சிறுவாணி ஆற்றின் மேல் பகுதியில்கேரளாவுக்குள் நீர்த்தேக்கம் அமைத்து சிறுவாணி ஆற்றில் நீர்த்தேக்கம் உருவாக்க முயற்சிக்கிறது. இதனால் தமிழ்நாட்டுக்கும் கேரள்ாவுக்கும் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

இதேபோல காவேரி ஆற்றின் பவானி கிளையாறு கேரளாவில் உற்பத்தியாகி தமிழ் நாட்டுக்குள் பிரவேசிக்கின்றது. தமிழ் நாட்டில் பவானி ஆற்றில் பவானிசாகர் என்ற பெரிய நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு குறிப்பாக ஈரோடு மாவட்ட விவசாயிகள் பெரு நன்மை பெற்றுள்ளனர். இந் நிலையில் பவானி ஆற்றின் மேற் பகுதியில் கேரளா எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் தமிழ் நாட்டு விவசாயிகள் நலனைப் பெரிதும் பாதிக்கும். கேரளா மிகவும் நீர் வளம் கொண்ட மாநிலம்,இந் நிலையில் கேரளா எடுக்கும் நடவடிக்கைகள் தமிழ் நாட்டை கோபத்துக்குள்ளாக்குகிறது.

கேரளாவில் மேற்கு மலைத் தொடரிலிருந்து பல அருவிகள் பெருமளவு நீரை அரபிக் கடலுக்குக் கொண்டு சேர்க்கின்றன. இந் நீர் கேரளாவில் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தப்படுவதில்லை. இவ் ஆறுகளில் ஓடும் நீரின் ஒரு பகுதியை தமிழ் நாட்டுக்குத் திருப்பினால் வரண்டு கிடக்கும் மதுரை, இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை மாவட்டங்கள், விவசாயத்தில் பெரும் முன்னேற்றங்கள்காணலாம். கேரளாவில்மேற்கே செல்லும் ஆறுகளின் நீரின் குறைந்த ஒரு பகுதியாவது தமிழ் நாட்டுக்கு திருப்புவதற்குக்கூட கேரளா உடன்படுவதில்லை.இது தமிழ்நாட்டு மக்களுக்கு கேரளாமீது வெறுப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்ட ரயில் பாதைகள் தென் திருவனந்தபுரம் ரயில்வே கோட்டத்துக்குள் இருக்கின்றது. ஆனால் திருவனந்தபுரம் கோட்டம் தமிழ்நாட்டு புகையிரதப் பாதை களையும் புகையிரத நிலையங்களையும் சரியாக பராமரிப்புச் செய்வதில்லை என்று தமிழகம் குற்றம்சாட்டு கின்றது. தமிழகத்திற்குள் அடங்கும் தென் தமிழ்நாட்டுப் புகையிரதப் பாதைகள் தமிழக புகையிரதக் கோட்டத்துடன் இணைக்க முற்பட்ட போதும் கேரளா இதற்கு உடன்படவில்லை. இதனால் தென் தமிழ் நாட்டு புகையிரதப் பாதைகள் சரியாக பராமரிக்கப்படாமல் இருப்பது மாத்திரமல்லாது தமிழ்நாடு வேலைகளையும் இழக்கின்றது.

கேரளாவுக்கும் தமிழ் நாட்டுக்கும் நதிநீர் பங்கீடு, சிறுபான்மையினர் பிரச்சினையால் இன்று நல்ல உறவு இல்லை. முன்னர் டில்லியிலும் மற்றும் முக்கிய பதவிகளில் மலையாளிகள் இருந்தனர். இவர்கள் தமிழ் நாட்டின் நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டனர் என தமிழர்கள் கருதுகின்றனர். இன்று தமிழர்கள் கல்வி கற்று நாட்டிலும் சர்வதேச ரீதியாக சிறப்பு நிலைக்கு வந்து கொண்டு இருப்பது மலையாளிகளுக்கு சற்று எரிச்சல் ஊட்டுவதாக இருக்கின்றது. தாங்கள் முன்னர் வகித்த நிலையை தமிழர்கள் எடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள் என்ற எண்ணம் கேரளக்காரனிடம் நிலவுகின்றது. தமிழ் நாட்டுக்கும் கேரளாவுக்கும் நல்ல உறவு இன்று காணப்படவில்லை.

இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும் 2500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கலை உறவு இருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டுக்கும் டில்லிக்கும் உள்ள உறவு 250ஆண்டுகளுக்கு உட்பட்டது. வரலாற்றுக்காலங்களிலும் பிரித்தானியர் ஆட்சிக்காலங்களிலும் இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும் நல்ல உறவு இருந்தது. பெரும் எண்ணிக்கையான இந்தியர்கள் இலங்கை பெருந்தோட்டங்களிலும் நகரப்புறங்களிலும் வேலை செய்தனர். தலைமன்னார் தனுஷ்கோடிக்கு இடையில்கப்பல்புகையிரதசேவை இடம் பெற்றிருந்தது. இரு பகுதி மக்களும் சுதந்திரமாக பிரயாணம் செய்தனர். இந்தியாவும் இலங்கையும் பிரித்தானியரிடம் சுதந்திரம் வேண்டி நின்றன.

இந்தியா 1947 இலும் இலங்கை 1948 இலும் சுதந்திரம் பெற்றன. 1948இல் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் மேற்கொண்ட நடவடிக்கைகள் தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையே முன்னர் நிலவிய சமூக உறவு குறைவடையத் தொடங்கின. 1949இல் இயற்றப்பட்ட இலங்கை பிரஜாவுரிமை சட்டத்திலும் இந்திய-பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச்சட்டத்திலும் இலங்கையில் வாழ்ந்த இந்திய. வம்சாவளித் தமிழர்கள் பெரும்பான்மையோர் பிரஜாவுரிமை இழந்தனர். 1947 இல் நடந்த இலங்கை பாராளுமன்றத் தேர்தலில் 7 இந்திய வம்சாவளித் தமிழர்கள் பாராளுமன்றம் சென்றார்கள். சரியான முறையில் இந்திய தமிழர்கள் வாக்களித்திருப்பார்கள் என்றால் இச்சமூகத்தில் இருந்து 10பேர் வரை பாராளுமன்றம் சென்று இருக்கலாம்.

இலங்கை வாழ் நாடற்ற இந்திய தமிழர் பிரச்சினை இலங்கை இந்திய பிரச்சினையாக இருந்த பொழுதும் உண்மையில் தமிழ்நாட்டுப் பிரச்சினையாகும். அன்று தமிழ் நாடு வறுமையான மாநிலமாகவும், உள்நாட்டு பிரச்சினைகள் நிறைவாக இருந்ததால் இலங்கை வாழ் இந்திய தமிழர் பிரச்சினையில் ஈடுபாடு காட்டமுடியாது போயிற்று.

1964 இல் இந்திய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரிக்கும் - இலங்கை பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கவுக்கும் இடையே இந்திய வம்சாவளித் தமிழர் குறித்து ஒரு உடன்பாடு எட்டப்பட்டது.1974 இல் இலங்கையில் இருக்கும் பிரஜாவுரிமை அற்ற இந்திய வம்சாவளியினர் 525,000 பேரையும் இவர்களின் இயற்கை அதிகரிப்யையும் இந்தியா ஏற்பதென்று, இலங்கையிலுள்ள மிகுதி இந்திய வம்சாவளியினரில் 300000 பேரையும் இவர்களது இயற்கை அதிகரிப்பை இலங்கை ஏற்பதாகவும் முடிவு எட்டப்பட்டது. மிகுதி 150,000 இந்திய வம்சாவளியினர் குறித்து பின்னர் முடிவு எடுக்க தீர்மானிக்கப்பட்டது. பின்னர் இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கும் இலங்கை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கவும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையின் படி இரு நாடுகளும் முறையே 75000 பேர்கள் ஏற்கத் தீர்மானித்தார்கள்.

1974 இல் கச்சதீவை இந்தியா – இலங்கைக்கு கொடுத்தது தமிழ் நாட்டுக்கு விருப்பம் இல்லை என்றும் தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள் கச்சதீவை மீட்க வேண்டுமென்றும். பேசிக் கொண்டு இருக்கிறார்கள். மேலும் பாக்குநீரிணை மன்னார் குடாவில் இன்று இலங்கைக்கும் தமிழ் மாநில மீனவர்களுக்கும் இடையே பெரும் பிரச்சினைகள் மேலும் மேலும் வளர்ந்து செல்கின்றன.

1983 இல் இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரம் அதன் பின்னர் ஏற்பட்ட போராட்டங்களும் தமிழ் நாட்டில் போராளிகளுக்கு இட வசதிகள் கொடுத்தது இலங்கை அரசாங்கத்துக்கு கடும் சினத்தை ஏற்படுத்தியது. இலங்கையில் தமிழ் மக்களின் துன்பங்கள் துயரங்கள் மற்றும் யுத்த கால அழிவுகள் போன்றவற்றுக்கு எதிராக தமிழ் நாடு குரல் கொடுத்தது. இலங்கைக்கு தமிழ் நாட்டின் மேல் கோபமும் வெறுப்பையும் ஏற்படுத்தியது. தமிழ் நாட்டில், சென்னையில் உள்ள இலங்கை துணைத்தூதரத்திற்கு எதிராக காலத்துக்கு காலம் கண்டன ஊர் வலங்கள், உருவப் பொம்மை எரிப்பு இடம் பெறுவதுண்டு.

தமிழ் மாநிலமும் - இலங்கையும் 2500 ஆண்டுகள் உறவு கொண்டு இருந்த பொழுது கடந்த 50 வருடங்கள் உறவுகள் சீராக இருக்கவில்லை. 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் இலங்கை பிரதமர்கள் எவரும் இலங்கையின் அருகாமையிலுள்ள தமிழ் மாநிலத்துக்கு உத்தியோக விடயம் ஒன்றை மேற்கொள்ளவில்லை . இது போல தமிழக முதலமைச்சர்கள் யாரும் இலங்கைக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்யவில்லை. தமிழ் நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் மிகக் கூடிய வர்த்தகம், மக்கள் போக்குவரத்து இடம் பெற்றாலும் அரசியல் தலைவர்கள் அரச தலைவர்களின் பயணங்கள்மிகக்குறைவாகும்.

இலங்கை அரசாங்கம், இந்தியாவுடன் நட்பை மேம்படுத்துகின்ற நிலையில், தமிழ் நாட்டை புறந்தள்ள கேரளா, ஆந்திரா மற்றும் பீகார் மாநிலங்களுடன் கூடிய உறவை மேற்கொள்ள முயற்சிக்கின்றது. இதன் ஒரு ராஜ்ஜிய தந்திரோபாயமே ஆந்திர முதல்வர் சந்திர பாபு நாயுடுவை இலங்கை அரசாங்கம் சுதந்திர விழாவுக்கு அதிதியாக அழைத்திருந்தது என கருதப்படுகின்றது.

இன்று தமிழ் நாடு சுற்றியுள்ள ஆந்திரா, கர்நாடக, கேரளா ஆகிய மாநிலங்களுடன் நல்ல உறவில் இல்லை. இது போல இதன் அயல் நாடாக இலங்கையுடன் குறிப்பாக பாக்கு நீரிணை, மன்னார் குடாப் பகுதியில் மீன் பிடிப்பிரச்சினைகள் நிலவுகின்றன. மேலும் இக் கடற் பிரதேசங்களில் சர்வதேசத் தொடர்புடன் போதைப்பொருட்கள் கடத்துவதாக தெரியவருகின்றது. இலங்கை இந்திய பொருளாதார முன்னேற்றத்துக்கு இலங்கைக்கும் இந்திய மாநிலமான தமிழ் நாட்டுக்கும் நல்ல உறவு இருக்க வேண்டும். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இராமர் அணைவழியாக தரைவழிப் பாதை அமைப்பது காங்கேசன்துறை முகத்திற்கும் தமிழ் நாட்டு துறைமுகங்களுக்கிடையே ஏற்றுமதி இறக்குமதி இடம்பெறவும் பலாலி விமான நிலையத்திற்கும் தென்னிந்திய நகர்களான சென்னை, திருச்சி, மதுரை போன்ற நாடுகளுக்குமிடையே விமான போக்குவரத்து ஏற்பட இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் நல்லுறவு ஏற்பட வேண்டும். தமிழக முதல்வரோ இலங்கை பிர தமரோ உத்தியோக விடயத்தை மேற்கொண்டு இரு பகுதியினருக்குமிடையே இன்று காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் ஆந்திரா, கர்நாடகம், கேரளாவிலும் இலங்கை நாட்டிலும் தமிழர்களின் இருப்புக்கும் மேம்பாட்டுக்கும் அயல்மாநிலங்களுடனும் இலங்கை நாட்டுடனும் தமிழ் நாடு நல்லுறவைப்பேண சமகால பிரச்சினைகளுக்கு அறிவு சார் மற்றும் இராஜ்ஜிய முறையில் தீர்வுகளை காண வேண்டும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புத்திசாலியிடம் தோற்ற தந்திரம்

ஒரு நாள் ஒரு காட்டுப் பகுதியில் கழுதை ஒன்று மேய்ந்து கொண்டிருந்தது. கழுதையை கவனித்த ஓநாய் ஒன்று அதை அடித்துத் தின்னும் நோக்கத்துடன் அதன் மீது பாய்ந்தது. தனக்கு வந்த ஆபத்தைக் கண்டு பயந்தது கழுதை. ஓநாயை எதிர்த்து சண்டை போடுவது கஷ்டம். அதனால் ஏதாவது ஒரு தந்திரம் செய்து தான் சமாளிக்க வேண்டும் என கழுதை தீர்மானித்தது. ஓநாயின் பாய்ச்சலின் போது சற்று விலகிக் கொண்டு, ""ஓநாயாரே, உம்முடைய வலிமையின் முன்னால் நான் எம்மாத்திரம்... நான் இன்று உமக்கு இரையாகப் போவது உறுதி. இதை யாராலும் தடுக்க. முடியாது நானும் உமக்கு இரையாகத் தயாராக இருக்கிறேன். அதற்கு முன்னால் நான் சொல்லக் கூடிய விடயத்தைத் தயவு செய்து கேட்க வேண்டும்."" என வேண்டிக் கொண்டது. "நீ என்ன சொல்ல விரும்பினாய். சொல்வதை சீக்கிரம் சொல்". என உறுமியது ஓநாய். ""ஓநாயாரே என் காலில் பெரிய முள் ஒன்று குத்தி விட்டது. முள்ளை எடுக்க நான் எவ்வளவோ முயற்சி செய்தும் முடியவில்லை. காலில் முள் உள்ள நிலையில் நீ என்னை அடித்துச் சாப்பிட்டால் அந்த முள் உன் தொண்டையில் மாட்டிக் கொள்ளும். அது உமக்குக் கடுமையான வேதனையைத் தருவதுடன் உன் உயிரையும் வாங்கி விடும். அதற்கு தயவு கூர்ந்து முதலில் என் காலில் இருக்கும் முள்ளை எடுத்துவிடு. அதற்குப் பிறகு நீ என்னை அடித்துத் தின்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை."" என கழுதை



கூறிற்று. ஏமாந்த ஓநாய் ஒத்துக் கொண்டது. கழுதை தனது பின்னங் கால்களைத் திருப்பிக் காண்பித்து, ஓநாய் கழுதையின் பின்னங்கால்களில் முள் இருக்கிறதா என தேடும் வேலையில், அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கழுதை பின்னங்கால்களால் ஓநாயைப் பலமாக உதைத்தது. கழுதையின் உதை தாங்காமல் ஓநாய் துடிதுடித்து சரிந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு கழுதை வேகமாக ஓடி தப்பித்துக் கொண்டது.

முற்றும்

## 06.2017 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1190 - மூன்றாவது சிலுவைப் போர்: புனித ரோமப் பேரரசன் முதலாம் பிரெடெரிக் ஜெருசலேம் நகரை நோக்கிய படையெடுப்பின் போது சாலி ஆற்றில் மூழ்கி இறந்தான்.
- 1786 - சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் பத்து நாட்களுக்கு முன்னர் நிகழ்ந்த நிலநடுக்கம் காரணமாகடாடு ஆறு அணைப்பு உடைந்ததில் 100,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1801 - சிவகங்கையின் சின்னமருது "ஆங்கிலேயர்களின் அதிகாரத்தை உதறித்தள்ளி சுதேசி மன்னர்களின் கீழ் ஜம்புத்தீவின் மக்கள் வாழவேண்டும்" என்ற தனது சுதந்திரப் பிரகடனத்தை திருச்சியில் வெளியிட்டார்.
- 1838 - ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் இன்வெரெல் என்ற இடத்தில் 28 ஆஸ்திரேலியப் பழங்குடிகள் ஆங்கிலேய குடியேறிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1846 - கலிபோர்னியாக் குடியரசு மெக்சிக் கோவிலிருந்து விடுதலையை அறிவித்தது.
- 1886 - நியூசிலாந்தில் டரவேரா மலை தீக்கக்கியதில் 153 பேர் கொல்லப்பட்டனர்.
- 1898 - அமெரிக்கக் கடற்படையினர் கியூபா தீவில் தரையிறங்கினர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியப் படையிடம் நோர்வே வீழ்ந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியப் படைகள் ஆங்கிலக் கால்வாயை அடைந்தனர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலிக்கு எதிராக கனடா போரை அறிவித்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: பிரான்சில் ஒரேடூர்-சர்-கிளேன் என்ற இடத்தில் 642 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: கிரேக்கத்தில் டிஸ்டோமோ என்ற இடத்தில் 218 பொது மக்கள் ஜேர்மனியர்களினால் கொல்லப்பட்டனர்.
- 1945 - ஆஸ்திரேலியப் படைகள் புருணையை விடுவிப்பதற்காக அங்கு தரையிறங்கினர்.
- 1956 - இலங்கையில் அம்பாறையில் 150 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1967 - இஸ்ரேலும் சிரியாவும் போர் நிறுத்த உடன்பாட்டிற்கு வந்ததில் ஆறு-நாள் போர் முடிவுக்கு வந்தது.
- 1984 - தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு சிறையை உடைத்து அரசியல் கைதியாக இருந்த நிர்மலா நித்தியானந்தனை விடுவித்தனர்.
- 1986 - யாழ்ப்பாணம், மண்டை தீவில் குருநகரைச் சேர்ந்த 31 மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1990 - இலங்கைக்கு எதிரான விடுதலைப் புலிகளின் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தது.
- 1996 - வடக்கு அயர்லாந்தில் சின் ஃபெயின் பங்குபற்றாத நிலையில் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமாயின.
- 1998 - முல்லைத்தீவு, சுதந்திரபுரப் பகுதியில் இடம்பெற்ற வான் தாக்குதலில் 25க்கும் மேற்பட்ட தமிழர் கொல்லப்பட்டனர்.
- 1999 - கொசோவோவில் இருந்து சேர்பியப் படையினர் விலக எடுத்துக்கொண்ட முடிவை அடுத்து நேட்டோ தனது தாக்குதல்களை நிறுத்தியது.
- 2003 - நாசாவின் ஸ்பிரிட் தளவுளவி செவ்வாய்க் கோளை நோக்கி ஏவப்பட்டது.
- 2006 - ஈழத்தமிழர் படுகொலைகள், 2006: மன்னார், வங்காலையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 தமிழர் படுகொலை செய்யப்பட்டனர்.

பிறப்புகள்

- 940 - அபுல் வபா, பாரசீகக் கணிதவியலாளர், வானியலாளர் (இ. 998)
- 1832 - நிக்கோலஸ் ஓட்டோ, செருமானியப் பொறியியலாளர் (இ. 1891)

இறப்புகள்

- 2004 - ரே சார்ல்ஸ், அமெரிக்க நடிகர், இசைக் கலைஞர் (பி. 1930)
- 2008 - சிங்கிஸ் அயித்மாத்தொவ், கிர்கித்தானிய எழுத்தாளர் (பி. 1928)

சிறப்பு நாள்

- போர்த்துக்கல் - தேசிய நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 160 | 200 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 80 | 120 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 600 | 360 | 400 | 400 | 500 |
| தக்காளி | 160 | 200 | 140 | 200 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 60 | 100 | 70 | 70 |
| கோவா | 150 | 250 | 150 | 160 | 140 | 160 |
| கரட் | 250 | 400 | 200 | 400 | 240 | 320 |
| பூசணி | 80 | 100 | 50 | 80 | 70 | 100 |
| புடோல் | 100 | 140 | 40 | 120 | 150 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 40 | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 400 | 300 | 300 | 250 | 280 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 90 | 120 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 250 | 150 | 160 | 180 | 240 |
| வெண்டிக்காய் | 100 | 150 | 80 | 120 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | 70 | 200 | 150 | 100 |
| பயற்றங்காய் | 160 | 180 | 100 | 120 | 140 | 160 |
| லீக்ஸ் | 100 | 160 | 120 | 160 | 120 | 160 |
| பீற்றூட் | 150 | 160 | 100 | 160 | 120 | 160 |
| கறிமிளகாய் | 250 | 400 | 140 | 300 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 60 | 120 | 200 | 120 |
| போஞ்சி | 200 | 400 | 180 | 240 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 130 | 160 | 160 | 200 |
| கீரை-1பிடி | 20 | 40 | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 50 | 50 | 40 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 70 | 50-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 250 | 400 | - | 280 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 350 | 120 | - | 240 | 250 | 200 |
| முள்ளங்கி | 80 | 120 | - | 120 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 10 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 80 | 150 | - | - | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் ஊன் பெருக்கற்றுத் தான் பிறிது ஊன்
உண்பார் எங்ஙனம் ஆளும் அருள்.
– திருக்குறள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாட்டிறைச்சி விற்பனையை தடுக்கப் போராட வேண்டும்

அன்னியராட்சியில் பசுவதை இடம்பெறுவதை எதிர்த்து இந்த நாட்டை விட்டு வெளியேறிய யோக்கியவான்கள் பற்றி அறியும் போதெல்லாம் நெஞ்சம் நெகிழும்.

அந்தளவுக்கு பசுவதைக்கு எதிராக நம்மவர்கள் குரல் கொடுத்தனர்.

ஆனால் இன்று யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகர சபை மாட்டிறைச்சிக் கடைகளை அமைத்து அதற்கு குத்தகைப் பணம் பெற்று மாட்டிறைச்சி விற்பதற்கு அனுமதி வழங்கி வருகிறது.

இந்த வழக்கம் நீண்டகாலமாக இடம்பெற்று வருவதாயினும் இனிமேலாவது யாழ்ப்பாணத்தில் மாட்டிறைச்சிக் கடைகளை இல்லாது செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

முன்பு தொடக்கம் பிழை நடந்து வருகின்றது என்பதற்காக அந்தப் பிழை தொடர வேண்டும் என்ற நியமங்கள் எதுவும் கிடையாது.

ஆகையால் மாட்டிறைச்சிக் கடைகளுக்கு மாட்டிறைச்சி விற்பனைக்குமான தடையை யாழ்ப்பாண மாநகர சபை முதலில் அமுலுக்குக் கொண்டு வர வேண்டும்.

இதற்கான கோரிக்கையை சைவ மக்கள் மட்டுமன்றி கத்தோலிக்க மக்களும் முன்வைக்க வேண்டும்.

எல்லா மதங்களும் கொல்லாமை பற்றி பேசுகின்றன. அதிலும் நம் தமிழர்களின் அடையாளச் சின்னம் நந்தி.

நந்திக் கொடி ஏற்றப்பட்டால் அது தமிழர்களின் வாழ்விடம் என்பது பொருளாகும். அதனால்தான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இலட்சணையில் நந்திக்கு முன்னுரிமை கொடுத்துள்ளது.

ஆக, தமிழர்களின் அடையாளமாக இருக்கக்சுவடிய எருதுவை, பசுவைக் கொன்று அந்த இறைச்சியை விற்பனை செய்தவதென்பது தமிழர் தாயகத்தில் இடம்பெறக்கூடாது.

பசுவதை மிகப்பெரும் பாவம். இந்தப் பாவத்திலிருந்து இனிமேலாவது நாம் விடுபட வேண்டும்.

நல்லூர்க் கந்தப் பெருமான் கோயில் கொண்ட யாழ்ப்பாணத்தில் மாட்டிறைச்சிக் கடை இயங்குவதென்பது தமிழ் மக்களுக்கு இழுக்கைத் தருவது.

மாட்டிறைச்சிக்குத் தடை செய்வது நியாயமானதல்ல என்றால், ஆமை, உடும்பு, மான், மரை இவற்றின் இறைச்சிக்கும் தடை செய்திருக்கக்கூடாதல்லவா?

ஆகையால் மாட்டிறைச்சி விற்பதற்கும் மாட்டிறைச்சிக் கடை இயங்குவதற்குமான தடையை யாழ்ப்பாண மாநகர சபை முதலில் ஆரம்பித்து வைக்க அதன் விரிவாக்கம் வடக்கு கிழக்கு என தமிழர் தாயகம் எங்கும் பரவட்டும்.

தமிழர் தாயகத்தில் மாட்டிறைச்சிக்குத் தடை வருமாக இருந்தால், பௌத்தர்கள் நிச்சயம் தங்கள் பிரதேசங்களிலும் மாட்டிறைச்சி விற்பனைக்கும் தடை விதிப்பர்.

எங்கே? பொது அமைப்புக்கள், சமய நிறுவனங்கள் தங்கள் கோசத்தை ஆரம்பிக்கட்டும்.

இதற்கு எங்கள் முஸ்லிம் சகோதரர்களும் நிச்சயம் ஒத்துழைப்பு வழங்குவர்.

### ஜனாதிபதியை சந்திப்பதற்கு

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் பெயர் விபரம் கோரல்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியுடன் சந்திப்பை ஏற்படுத்துவதற்காக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் பெயர் விபரங்களை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் கோரியுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனுக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கும் இடையில் ச்ந்திப்பொன்று நடைபெற்றது.

இதன்போதே சந்திப்பவர்களின் விபரங்கள் ஆளுநர் அலுவலகத்தால் கோரப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இறுதிப்போரில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது? மற்றும் கடத்தப்பட்டோருக்கு என்ன நடைபெற்றது? அவர்களை மீள கையளிக்குமாறு கோரி வடக்கில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மருதங்கேணி, வவுனியா ஆகிய இடங்களிலும், கிழக்கில் திருகோணமலையிலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த போராட்டத்தில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் அருகாமையில் நடைபெற்று வருகின்ற போராட்டம் கடந்த வாரம் நூறாவது நாளை எட்டிய நிலையில் வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், சிவில் அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து மாபெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் ஏ9 வீதியை வழிமறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஏ9 வீதியுடனான போக்குவரத்து ஐந்து மணி நேரம் தடைப்பட்டிருந்தது.

தம்மை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்திப்பதாக எழுத்து மூலம் உறுதிமொழி தந்தால் மாத்திரமே தாம் வீதி மறிப்பு போராட்டத்தை கைவிடுவோம் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆர்ப்பாட்டத்தில் தெரிவித்தனர். இதனை அடுத்து பிரதமரை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தருவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தால் கூறப்பட்டது.

எனினும் அதை ஏற்றுக் கொள்ளாத உறவுகள், ஜனாதிபதியை சந்திக்க ஏற்பாடு செய்து தந்தால் மாத்திரமே போராட்டத்தை கைவிடுவோம் என உறுதியுடன் போராடினார்கள்.

இதனை அடுத்து வடக்கு மாகாண ஆளுநரால் இருவார காலத்திற்குள் ஜனாதிபதியை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தருவதாக எழுத்து மூலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த உறவுகளுக்கு உறுதியளித்திருந்தார். இந்த உறுதிமொழியை அடுத்து வீதி மறிப்பு போராட்டம் கைவிடப்பட்டு வழமை போன்று கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் அருகாமையில் 100ஆவது நாள் கடந்தும் போராட்டம் தொடர்கின்றது.

இந்த நிலையிலேயே நேற்றைய தினம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆளுநரை சந்திப்பதற்காக வருகை தந்திருந்தனர்.

எனினும் ஆளுநர் கொழும்பு சென்றுள்ளமையால் ஆளுநரின் செயலாளரை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இந்த நிலையிலேயே ஜனாதிபதியை சந்திப்போர் பெயர் விபரங்களை ஆளுநர் அலுவலகம் கோரியுள்ளது.

அனைத்து பெயர் விபரங்களையும் உடனடியாக கையளிக்க முடியாத நிலையில் இன்றைய தினம் அனைவருடைய பெயர் விபரங்களையும் ஆளுநர் அலுவலகத்திடம் கையளிக்கப்படவுள்ளதாக அறிய முடிகின்றது. (செ-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை யாழ். பிரதேசத்தில கொடிகாமம் கச்சாய் வீதி, பொக்கணை, ஊரெழு, உரும்பிராய் கிழக்கு, போயிட்டி, கரந்தன், நாகர்கோவில், குடாரப்பு, மாமுனை, செம்பியன்பற்று, நெல்லியான் இராணுவ முகாம், மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், பொற்பதி, கோண்டாவில் வோட்டர் வேர்க்ஸ், கோண்டாவில் ஒரு பகுதி, இருபாலை நெசவு நிலைய பிரதேசம், இராச வீதி (கோப்பாய்), இராச வீதி லைடன் பாம் பிரதேசம், கிருஸ்ணன்கோவிலசந்தி பிரதேசம், கோண்டாவில் கலைவாணி வீதி, இராணுவ முகாம், கோப்பாய் கல்வியியற் கல்லூரி, யாழ்.பல்கலைக்கழக தங்குவிடுதி, இராஜேஸ்வரி திருமண மண்டபம், வெற்றிலைக்கேணிஇராணுவமுகாம் கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**கேட்டையில் பிறந்தவர்களுக்கு திருமணம்?**

திருமண பொருத்தத்தில் கேட்டை நட்சத்திர பெண் என்றால் ஒரு சிலர் தயக்கம் காட்டுவர். முதலில்பிறக்கும் பெண் கேட்டையில் பிறந்திருந்தால் அந்தப் பெண்ணுக்கு ஜேஷ்ட மாதத்தில் திருமணம் செய்யக் கூடாது.

**ஜேஷ்ட மாதம, ஜேஷ்ட புத்திரி என்பது ஏன்?**

எந்த மாதத்தில் பௌர்ணமி அன்று கேட்டை நட்சத்திரம் வருகிறதோ அதுவே ஜேஷ்ட மாதம் ஆகும். இதை சாந்திரமானம் என்று கூறுவர்.

(தொடரும்)

## சாஸ்திரங்கள்

✦ சனிக்கிழமைகளில் நீங்கள் மதிய உணவினைச் சாப்பிட முடியாதபடி திடீர் தடைகள் ஏற்பட்டால் சனியில் பிடியில் நீங்கள் சிக்கி இருப்பதாக அர்த்தமாகும். சனிக்கிழமைகளில் நீங்கள் சாப்பிடும் சாப்பாட்டில் அடிக்கடி தலைமயிரோ அல்லது சிறு கற்களோ தென்பட்டால் நீங்கள் சனியின் கெட்ட பார்வையில் இருப்பதாக அர்த்தம்.

-சனி பகவான் வரலாறு




எஞ்சி இருந்தது வைகுண்டம் மட்டுமே.

பிருகு முனிவர் வைகுண்டம் ஏகியபோது அரங்கன் ஆதிசேஷன் மீது படுத்து பொய் உறக்கம் பூண்டிருந்தான். திருமகள் கால்பற்றி நீவிக் கொண்டிருந்தாள்.

பிருகு முனிவர் சாரங்கனைச் சமீபித்தார். உன்மத்தம் பிடித்தவர் போல் ஒப்பிலியப்பனின் மார்பில் உதைத்தார்.

திருமகள் திகைத்துப் போனாள். அரங்கன் அலர் மலர்ந்தான்.

அருகில் நின்ற அந்தண முனிவரைக் கண்டான். அவன் வதனத்தில் புன்னகை ஒன்று பூத்தது. படுத்திருந்த அவன் எழுந்து பிருகு முனிவரை அடுத்து அமர்ந்தான் அவர் தம் கால்களைப் பற்றினான். (தொடரும்)

கடித்த நாய்க்கு அல்லது பூனைக்கு ரேபிஸ் தடுப்பு மருந்து பூரணமாக கொடுக்கப்பட்டிருப்பினும் அவ்விலங்கிற்கு ரேபிஸ் தொற்று இல்லை என உறுதிபடக் கூறமுடியாது.

**போக்குவரத்து நெருக்கடியான தெருக்களிலிருந்து அவற்றை விலத்தி வைத்திருப்போம்**

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ். மாநகரசபை.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ உலகம் வேண்டுவது ஒழுக்கமே. கொழுந்து விட்டெரியும் அன்பு தன்னலமற்ற அன்பு யாரிடம் இருக்குமோ, அவரையே உலகம் வேண்டி நிற்கின்றது. அத்தகைய அன்பே வாயிலிருந்து எழும் வார்த்தை ஒவ்வொன்றையும் மிகச் சிறந்த பயனுள்ளதாக்கும். எழுமின், விழிமின் வீரர்களே! உலகம் துயரத் தீயால் வேகின்றதே, நீங்கள் தூங்கலாமா?

❖ [illegible] மேலும் மேலும் நாடுவதையே என்னிடம் காண்கின்றேன். [illegible] உடுக்கிறார் என்பதையும் அறியவே எனக்கு விருப்பம். சேர் பிலிப் சிட்னி என்பவரின் பெருமையைக் காண விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III-2017 கே.சி.சி.சி. அணியின் 2ஆவது வெற்றி



சிறிலங்கா கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் தகுதிகாண் போட்டிகள் யாழ்.நகரில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அந்த வரிசையில் 31 ஆவது போட்டி அண்மையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கே.சி.சி.சி. அணி, ஸ்கந் தாஸ்ரார் அணியை 113 ஓட்டங்களால் வெற்றிபெற்று தனது 2 ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. அணி 32.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றது.

பானுஜன் - 12, சபாநந் - 12, பிரதீஸ் - 14, சாம்பவன் - 76 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் புருசோத்மன் - 04, துபிஸன், மிதுசாந் தலா 02 இலக்குகளையும், தரனிதரன், அஜின்தன் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார் அணி 24.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது. மிதுஸாந் - 27, நிரேஸன் - 18 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் பிரதீஸ் - 05, சத்யன் - 01, ஜெயரூபன் - 04, இலக்குகளை கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 2010ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 8 வருடங்களாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவுக்கு (RATING) கே.சி.சி.சி. அணி 9.14 புள்ளிகளையும், ஸ்கந் தாஸ்ரர் அணி 1.88 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. (க)

# சுதா, ஜெகன் சிறப்பாட்டம் அரையிறுதியில் றெயின்போ



LONDON FIRST FRESH FOOD LTD இன் அனுசரணையுடன் மறைந்த சைனிங்ஸ் உறுப்பினர் வைத்தியப்பா ஞாபகார்த்தமாக 3ஆவது வருடமாக சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 நபர்கள் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட சுழல் கிண்ண மென்பந்தாட்ட தொடரின் B பிரிவிற்கான ஆட்டத்தில் ரேவடி அணி, றெயின்போ அணிகள் மோதின.

முதலில் ஆடிய றெயின்போ அணி 116 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்தது. றெயின்போ சார்பாக பிரகலாதன் 32 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார். ரேவடி அணி சார்பாக பந்துவீச்சில் தமிழ் 2 விக்கெட்டுகளை பதிவு செய்தார்.

வெற்றி இலக்கை நோக்கி ஆடிய ரேவடி அணி 9 ஓவர்களில் 45 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

ரேவடி சார்பாக பிறேம்ராஜ் ஆட்டமிழக்காமல் 18 ஓட் டங்களைப் பெற்றார். றெயின்போ சார் பாக சுதா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக 2 விக்கெட்டுகளையும் 20 ஓட்டங்களையும் பெற்ற ஜெகன் தெரிவுசெய்யப்பட்டார். (க)

# வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் மின்னொளியிலான கரப்பந்தாட்டம்



நியு வளர்மதி விளையாட்டுக் கழகம் தனது 41ஆவது ஆண்டு நிறைவினையொட்டி நடத்தப்பட இருக்கின்ற அணிக்கு 4 பேர் கொண்ட மாபெரும் மின்னொளி கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது.

இச் சுற்றுப் போட்டியானது எதிர்வரும் சனிக்கிழமை 17.06.2017 பி.ப. 6.00 மணியளவில் பெரிய கல்லாறு - 01 பாலத்து அருகாமையில் அமைந்துள்ள நியு வளர்மதி கரப்பந்தாட்ட மைதானத்தில் போட்டிகள் அனைத்தும் நடைபெறவுள்ளன.

எனவே போட்டியில் கலந்து கொள்ளும் கழகங்கள் அனைத்தும் தவறாது நேரத்திற்கு சமுகம் கொடுத்து தனது வரவினை உறி திப்படுத்துமாறு கேட்டுக்கெள்ளப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு மையுரேசன் 077 612 7228, குகதாஸ் - 077 678 0563, மோனிசன் - 075 279 6038, கபில் - 075 064 0019 நியுவளர்மதி விளையாட்டுக் கழகம் பெரியகல்லாறு. (க)

# இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது கொம்மந்தறை இளைஞர்கள் வி.கழகம்



ஞானம்ஸ் வி.கழகத்தின் கிரிக்கெட் தொடரில் (08.06.2017) அன்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் மகேசன் வி.கழகத்துடன் மோதியது கொம்மந்தறை இளைஞர்கள் வி.கழகம்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொம்மந்தறை இளைஞர்கள் வி.கழகம் முதலில் களத் தடுப்பை தெரிவு செய்தது. துடுப்பெடுத்தாடிய மகேசன் வி.கழகம் 10பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 81 ஓட்டங்களை பெற்றது.

பதிலளித்த கொம்மந்தறை இளைஞர் கழகம் மணாளனுடைய ஆரம்ப அதிரடி ஆட்டத்தின் உதவியுடன் 7.4 பத்துப்பரிமாற்றத்தில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது கொம்மந்தறை இளைஞர்கள் வி.கழகம். (க)

# சமநிலை தவிர்ப்பு உதையில் பலாலி விண்மீன் வெற்றி





அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரின் முதல் போட்டியில் (07.06.2017) அன்று நடைபெற்ற போட்டியில் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் மோதியது.

பரபரப்பான போட்டியில் சமநிலை தவிர்ப்பின் மூலம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது பலாலி விண் மீன் விளையாட்டுக்கழகம். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# பல்கலைக்கிடையில் பளுதூக்கல் போட்டி

2017ஆம் ஆண்டிற்கான அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பளுதூக்கும் சுற்றுப்போட்டி முதன் முறையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் ஜூன் மாதம் 11ஆம் திகதி (ஞாயிற்றுக் கிழமை) யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புதிய வணிகத்துறை விரிவுரையரங்கில் நடத்தப்படவுள்ளது.

இச் சுற்றுப்போட்டியில் 14 பல் கலைக்கழகங்கள் பங்குபற்றுகின்றன.

இந் நிகழ்வுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். இந் நிகழ்வு 11ஆம் திகதி ஜூன் மாதம் 2017 அன்று காலை 8.00 மணி முதல் இடம்பெற்று பரிசளிப்பு வைபவம் மாலை 2.00 மணியளவில் இடம்பெறும். (க)

# அவுஸ்திரேலியாவில் அங்கீகாரம் பெற்ற யாழ்.வீராங்கனை தர்ஜினி



அவுஸ்திரேலியா வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் பயிற்றுநருக்கான அங்கீகாரத்தை யாழ்ப்பாணத்தை சேர்ந்த தர்ஜினி சிவலிங்கம் பெற்றுக்கொண்டுள்ளார்.

வலைப்பந்தாட்ட போட்டிகளில் சிறந்த வீராங்கனையாக செயற்பட்டு வரும் தர்ஜினி சிவலிங்கம், அவுஸ்திரேலியாவின் City West Falcons கழகத்திற்காக விளையாடி வருகின்றார்.

இந்நிலையில், VICTORIAN NETBALL LEAGUE போட்டிகள் இடம்பெற்று வரும் நிலையில், தற்போது வரையில் 7 சுற்றுகள் நிறைவடைந்துள்ளன.

இதில் இறுதியாக இடம்பெற்ற மூன்று போட்டிகளிலும், தர்ஜினி சிவலிங்கம் விளையாடிய கழகம் வெற்றி பெற்றுள்ள நிலையில், இந்த தொடரில் இதுவரையில் ஆறு போட்டிகளில் விளையாடியுள்ள தர்ஜினி சிவலிங்கம் 227 கோல் போட்டுள்ளார்.

இந்நிலையில், அவுஸ்திரேலியா வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் பயிற்றுநருக்கான அங்கீகாரத்தை தர்ஜினி சிவலிங்கம் பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடிபொருட்கள்...

வேளை சில வெடி பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

இதனையடுத்து துப்புரவுப் பணி நிறுத்தப்பட்டு வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து பொலிஸார் நீதிமன்ற உத்தரவினைப் பெற்று இன்று விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் அப்பகுதியில் தேடுதல் மற்றும் சோதனையினை மேற்கொள்ளவுள்ளனர்.

கண்டு பிடிக்கப்பட்ட வெடிபொருட்கள் பெரும்பாலானவை மிதிவெடிகள் எனவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-60)

## 'பிரமிட்'...

செய்துள்ளனர்.

வடமராட்சிப் பகுதியில் பெரும்பாலான இடங்களில் பிரமிட் எனப்படும் சட்டவிரோத நிதி நடவடிக்கைகள் அண்மைக்காலங்களில் நடைபெற்று வந்தன. அதில் முதற்கட்டமாக கட்டப்படும் பணத்திற்கு பொருட்கள் வழங்குவதாக தெரிவிக்கப்பட்டதாகவும் அவ்வாறு தமக்கு எவையும் வழங்கப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்டவர்கள் நெல்லியடிப் பொலிஸாரிடம் முறையிட்டிருந்தனர்.

இது தொடர்பில் விசாரணையினை முன்னெடுத்து வந்த நெல்லியடிப் பொலிஸார் கரவெட்டி மத்தியைச் சேர்ந்த 29 வயதுடைய நபர் ஒருவரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இச் சட்ட விரோத நிதி நடவடிக்கை மூலம் வடமராட்சிப் பகுதியில் பலர் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-60)

## திடீரென வீழ்ந்த...

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அச்சமடைந்துள்ளனர்.

கட்டைப்பறிச்சான் வடக்கிலுள்ள ஜங்கரன் பாடசாலையில் நேற்று காலை பாடசாலை கற்றல் நடவடிக்கை இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் இந்த வெடிபொருட்கள் விழுந்துள்ளதுடன் அதில் ஒன்று வெடித்துள்ளது.

இதையடுத்து பொலிஸார் மற்றும் முப்படையினருடன், குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரும் பாடசாலை வளாகத்தில் குழுமியிருந்ததாக பாடசாலையின் அதிபர் தகவல் தெரிவித்தார்.

திருகோணமலையில் வெடிபொருட்களை செயலிழக்கச் செய்யும் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் இதன்போதே குறித்த வெடி பொருள் சிதறுண்டு பாடசாலை வளாகத்தில் வீழ்ந்திருக்கலாம் என தெரிவித்த பொலிஸார் குறித்த வெடிபொருள் தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லையெனவும் அறிவித்துள்ளனர். (செ-11)

## உடனடி நிவாரணம்...

வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

மாகாணம் மற்றும் மாவட்டங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதன் ஊடாக அனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைத்துக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் தொடர்பில் ஜே.வி.பியினால் நாடாளுமன்றத்தில் நேற்றைய தினம் கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இந்த கோரிக்கையை விடுத்தார்.

இந்த விவாதத்தில் மேலும் உரையாற்றிய அவர், மத்திய அரசின் நிர்வாகப்பொறிமுறையானது கொழும்பை மையப்படுத்தி காணப்படுவதால் பிரதேச மட்டங்களில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளில் ஊழல்கள் தலைவிரித்தாடுகின்றன.

எனவே, இந்நிலைமை மாறி வினைத்திறனான நிர்வாக கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.

அரச முறைமையானது ஜனநாயக உரிமைகளை மதிப்பதாக இல்லை என்றும் மக்கள் தம்மை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளில் பங்கு கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் இரா.சம்பந்தன் இதன்போது வலியுறுத்தியிருந்தார். (செ-11)

## தேநீருக்கான...

ஒரு கிலோ சீனியின் இறக்குமதி வரி 10 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டமை தொடர்பில் வினவியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சீனியின் இறக்குமதி வரி பத்து ரூபாயினால் அதிகரிக்கப்பட்டமையை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. ஏனெனில் உலக வர்த்தக சந்தையில் சீனியின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. அவ்வாறான நிலையில் சீனிக்கு புதிய வரிகளை விதித்துள்ளமையினால் சீனி உள்ளடங்கும் உணவுப் பொருட்களின் விலையிலும் தாக்கம் செலுத்தும்.

உள்ளூர் சீனி உற்பத்தியாளர்களை பலப்படுத்துவதற்காக சீனிக்கான இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகின்ற போதிலும் அதில் யதார்த்தம் இல்லை.

எனவே புதிய விலை அதிகரிப்பின் பிரகாரம் 15 ரூபாயாக விலை நிர்ணயிக்கப் பட்டிருந்த தேநீர் இருபது ரூபாயாகவும் முப்பத்தைந்து ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருந்த பால் தேநீர் நாற்பது ரூபாயாகவும் விற்பனை செய்யப்படும் என்றார். (செ-11)

## சட்டவிரோத மணல்...

திர உரிமையாளர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதையடுத்து கைப்பற்றப்பட்ட மணல்களும் உழவு இயந்திர உரிமையாளர்களும் யாழ் பொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அரியாலைப்பகுதில் தொடர்ச்சியான முறையில் மணல் அகழப்பட்டு வருவதாக பொதுமக்களால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. எனினும் மணல் கொள்ளையர்கள் மிகவும் இலாபகமாக கடத்தல் நடவடிக்கைகளை தொடர்ந்து வந்தனர். இந்த நிலையிலேயே பல நாள் அவதானிப்புக்களையும் புலனாய்வு தகவல்களையும் வைத்து நேற்றைய தினம் அதிரடியாக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)

## 94வது நாளாகவும்...

உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகள், மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்,

இந் நிலையில், இந்த போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த ஒட்டுசுட்டான் கற்சிலைமடு கிராமத்தைச் சேர்ந்த பரராஜசிங்கம் - சரஸ்வதி என்ற வயோதிபத் தாயார் ஒருவர் தனது இரு மகன்மார்களையும் மற்றும் மரு மகனையும் (மகளின் கணவன்) தொலை த்து விட்டு கண்ணீர் சிந்தியபடி இந்த சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்ட த்தில் ஈடுபட்டுள்ளார்.

இவரை ஆறுதல் படுத்திய பின்னர் காணாமல்போனவர்கள் தொடர்பில் கேட்ட போது,

எனக்கு 04 பெண் பிள்ளைகளும், 02 ஆண் பிள்ளைகளுமாக 06 பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்த வேளை கடந்த 1990ஆம் ஆண்டு மூத்த மகன் காணாமல் போயுள்ளார்.

இவர் தொடர்பில் பல இடங்களிலும் தேடி அலைந்த நிலையில், மற்றைய மகன் பரராஜசிங்கம்-சிவபாலன் 2002ஆம் ஆண்டு வவுனியா நகரப் பகுதியில் பொருட்களை வாங்கி வருவதற்காக சென்றிருந்த நிலையில் அவரை வவுனியாவில் வைத்து இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

இக் கைது தொடர்பில், அவருடன் கூடச் சென்றவர்கள் சிவபாலனை இராணுவத்தினர் பிடித்துச் சென்றதாக வந்து கூறிய நிலையில் வவுனியாவிற்கு [illegible] பொலிஸ் நிலையத்திலும் [illegible] முகாம்களிலும் விசாரித்த போதும் தாங்கள இந்த பெயரில் யாரையும் பிடிக்கவில்லை என்று கையை விரித்து விட்டனர்.

இதனால் மனமுடைந்த கணவர் பிள்ளைகளை நினைத்து நினைத்து ஏங்கிய நிலையில் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் வன்னியில் இடம்பெற்ற கடைசிச் சண்டையின் போது, கற்சிலை மடுவில் இருந்து எனது மகள் குடும்பத்தினர் இடம் பெயர்ந்து தேவிபுரம் பகுதிக்கு செல்லும் வழியில் எனது மருமகனும் காணாமல்போயுள்ளார்.

இன்று மூன்று பேரையும் பறிகொடுத்து விட்டு இன்று தனி மரமாக இருந்து எனது வயோதிப நிலையில் இவர்களைத் தேடி அலைந்து வருகின்றேன்.

மனித உரிமைகள் ஆணைக்குழு உட்பட பல அமைப்புகளிடம் முறையிட்டுள்ள நிலையில் எவரும் எனது பிள்ளைகளை மீட்டுத் தரவில்லை.

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் 94. ஆவது நாளாகவும் தொடர்ந்து ஈடுபட்ட வரும் நிலையில் எனக்கு எனது பிள்ளைகள் பற்றிய தீர்வு கிடைக்க வேண்டும்.

அத்துடன், ஏனையவர்களின் தேடல்களுக்கும் முடிவு கிடைக்க வேண்டும். நான் இறப்பதற்கு முன்பு எனது பிள்ளைகளைப் பார்க்க வேண்டும்.

அவர்களுக்கு எனது கையால் சோறு குழைத்து கொடுக்க வேண்டும். இதுதான் தான் எனது கடைசி ஆசையாகும் என தனது மன ஆதங்கத்தை அந்த தாய் கண்ணீருடன் பகிர்ந்து கொண்டிருந்தார். (செ-15)

## காற்றின் வேகம்...

ளில் கடல் கொந்தளிப்புடன் காணப்படும் என வானிலை அறிக்கையை வெளியிட்டு அந்த நிலையம் இதனை குறிப்பிட்டுள்ளது.

மேலும் நாட்டை சுற்றியுள்ள மற்றைய கடற்பிரதேசங்களில் காற்றின் வேகம் மணிக்கு 50 கிலோ மீற்றர் வரை வீசக்கூடும் எனவும், இதன் காரணமாக குறித்த கடற்பிரதேசங்கள் ஓரளவு கொந்தளிப்புடன் காணப்படும்.

இது தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறு காலநிலை அவதான நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் வடக்கு மாகாணத்தை காட்டிலும நாட்டின் மற்றைய பகுதிகளில் விட்டு விட்டு வீசும் காற்று மணிக்கு சுமார் 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

## அனர்த்தம்...

எண்ணிக்கை 13 ஆயிரத்து 180 ஆல் குறைவடைந்துள்ளது.

இதன்படி தற்போது மூவாயிரத்து 619 குடும்பங்களை சேர்ந்தவர்கள் 149 பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மின்சக்தி பிரதியமைச்சர் அஜித் பீ பெரேரா நேற்று முன்தினம் குக்குலேகங்க மின்சார செயற்திட்டத்திற்காக நிர்மாணிக்கப்படும் மதிலை பார்வையிட்டுள்ளார்.

இதன்போது, உரையாற்றிய அவர் அனர்த்தங்களால் ஏற்பட்ட இன்னல்களுக்கு விரைவில் தீர்வு பெற்று கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## ஜெனிவாவில்...

சட்டவாளர்களின் சுதந்திரம் தொடர்பான ஐ.நா சிறப்பு அறிக்கையாளர், இலங்கைக்கு மேற்கொண்டிருந்த பயணம் தொடர்பாக சமர்ப்பிக்கும் அறிக்கை குறித்தே விவாதிக்கப் படவுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்களின் சுதந்திரம் தொடர்பான ஐ.நா சிறப்பு அறிக்கையாளராக இருந்த மோனிகா பின்ரோ கடந்த 2016 ஏப்ரல் 29ஆம் நாள் தொடக்கம் மே 7ஆம் நாள் வரை இலங்கையில் பயணம் மேற்கொண்டு ஆய்வுகளை செய்திருந்தார்.

இது தொடர்பான அறிக்கையை நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்களின் சுதந்திரம் தொடர்பான தற்போதைய ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் டியேகோ கார்சியா சயன் பேரவையில் சமர்ப்பிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## மிதிவெடிகள்...

உள்ள வீடு ஒன்றில் உள்ள கிணற்றை துப்புரவு செய்யும் போது 2 மிதிவெடிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ-9)

## ஆசிய அபி.வங்கி...

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று நேற்று நிதியமைச்சில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதற்கமைய, வெள்ள நிவாரண பணிகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 2 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்படவுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (செ-11)

## பயங்கரவாத...

கொழும்பிலுள்ள தேசிய வளப் பாதுகாப்பு நிலையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் தொழிலாளர் விவகார அமைச்சரும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக்கு ஆதரவளிப்பவருமான காமினி லொக்குகே கலந்துகொண்டு உரையாற்றினார்.

முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே, முஸ்லிம் மக்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கு நல்லாட்சி அரசாங்கமே பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரை பயன்படுத்தி வருவதாகவும் அவர் இதன்போது குற்றம் சாட்டினார்.

தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் பயப்படுகிறது. அதனை தடுப்பதற்கான சட்ட திட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டும். அதற்காகவே ஞானசார தேரரை பயன்படுத்துகின்றனர். அன்று ஞானசார தேரரைப் பயன்படுத்தியே மகிந்த ராஜபக்சவுக்கும், முஸ்லிம் மக்களுக்கும் இடையிலான உறவை முறிவடையச் செய்தனர்.

மீண்டும் அதனை செய்யவே முயற்சிக்கின்றனர். சிங்கள, தமிழ் உள்ளிட்ட அனைவரும் சகவாழ்வுடன் இருக்க வேண்டும் என்பதையே ஒன்றிணைந்த எதிர்க்கட்சி எதிர்பார்க்கிறது. அதற்காக அவர்கள் கேட்கின்ற அத்தனை கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதல்ல. இன்று வடபகுதியை எடுத்துக் கொள்ளுங்கள். பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திய சந்தேக நபருக்கு ஒருவாரத்தில் பிணை வழங்கப்பட்டது.

இங்கே பொலிஸாருக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டால் கை,கால் இன்றிதான் செல்ல நேரிடும். இன்லையேல் குண்டு தாக்க முயற்சித்ததாக கூறி சூடு நடத்தி கொல்வார்கள். பொலிஸ் ஜீவ் வண்டி மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோக விவகாரம் மிகப்பெரிய செய்தியாக பிரசுரமாகியது. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்தவரும், புனர்வாழ்வு பெற்ற போராளியே இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்தியதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

எனவே பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் குற்றம் இழைக்கும் முன்னாள் போராளிகளை நீதிமன்றத்தில் முன்நிறுத்த இயலாதா? ஆதாரங்களை மாற்றியதாக முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஒருவருடமாக சிறைவைக்கப்பட்டார். அவர் கொலை செய்யவில்லை. பொலிஸார் மீது துப்பாக்கிச்சூடு நடத்தவில்லை. ஆதாரங்களை மாற்ற உதவியதாக குற்றச்சாட்டு காணப்படுகிறது. கொலைக் குற்றச்சாட்டில் பிள்ளையான் ஒருவருடமாக சிறை வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய நபருக்கு ஒருவாரத்தில் பிணை வழங்கப்பட்டது. ஆகவே இந்த நாட்டில் இரண்டு சட்டங்களே உள்ளன என்றார் காமினி லொக்குகே. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூ.5 கோடி பெறும...

காங்கேசன்துறை கடற்படையினர் மீட்டுள்ளதாக வட பிராந்திய கடற்படை தளபதி றியல் அட்மிரல் ஜயந்த டி சில்வா தெரிவித்துள்ளார். மேற்படி ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டமை தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

காங்கேசன்துறை கடற்பரப்பில் கடற்படையினர் தமது வழமையான ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். இதன் போது கடலில் சந்தேகத்திற்கு இடமான முறையில் புத்தக பை போன்ற ஒன்று மிதந்து கொண்டிருப்பது கடற்படையினரால் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த பையினை மீட்டெடுத்த கடற்படையினர் அதனை சோதனை செய்த போதே அதனுள் ஹெரோயின் போதைப் பொருள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

மூன்று பைகளில் பொதியிடப்பட்ட நிலையில் இவ் ஹெரோயின் போதைப் பொருள் காணப்பட்டுள்ளது: இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளின் மொத்த நிறையானது 5.6கிலோ கிராமாக காணப்பட்டதாகவும் அவற்றின் பெறுமதி இலங்கை ரூபாயில் சுமார் 5 கோடி இருக்கலாம் எனவும் தெரிவித்த அட்மிரல் ஜயந்த டி சில்வா, கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளை காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (செ-4)

## இழுவை பெட்டி தட...

2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

அம்பகாமம் பகுதியில் உள்ள ஆற்றில் இருந்து ஆற்று மணலை ஏற்றி பயணித்த வேளை உழவு இயந்திரத்தின் இழுவைப் பெட்டி தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் உழவு இயந்திரத்தின் உரிமையாளர் இழுவைப் பெட்டிக்குள் சிக்குண்டு பரிதாபகரமாக உயிரிழக்க நேரிட்டுள்ளது.

இச்சம்பவத்தில் பலியானவர் படுகாயமடைந்த நிலையில் மயக்கமுற்று இருப்பதாக தெரிவித்து உழவு இயந்திரத்தின் சாரதியும், கிராம மக்களும் இணைந்து மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக கொண்டு வந்த நிலையில், மருத்துவர்கள் பரிசோதனை செய்தபோது அவர் ஏற்கெனவே உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் கிளிநொச்சி பன்னங்கண்டி இலக்கம் 03டீ என்னும் முகவரியைச் சேர்ந்த அரிச்சந்திரன் முரளிதரன் (வயது 42) என்ற குடும்பஸ்தரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்ததும் மாங்குளம் ஆதார வைத்திய சாலைக்குச் சென்ற மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், விபத்துக்குள்ளான உழவு இயந்திரத்தின் சாரதியை சந்தேகத்தின் பெயரில் கைது செய்துள்ளதுடன், விபத்துக்குள்ளான உழவு இயந்திரத்தை மீட்டு மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் சடலத்தை மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் இருந்து பொறுப்பேற்று முள்ளியவளை மாஞ்சோலையில் உள்ள முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளுக்காக ஒப்படைத்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (செ-15)

## நிர்மாணிப்பை நிறு...

திருமதி சிறிநிதி நந்தசேகரம், விகாராதிபதிக்கு அழைப்பாணை விடுத்துள்ளார். நாவற்குழி சிங்கள குடியேற்றத்தில் ஏற்கெனவே விகாரை ஒன்று அமைந்துள்ள நிலையில், அந்த விகாரைக்கு மேலதிகமாக பிரமாண்டமான முறையில் ஒரு கோடி ரூபாய் செலவில் தாதுகோபுரம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் அந்த விகாரையின் விகாராதிபதி அம்பிலிபிட்டிய சுமண தேரர் ஈடுபட்டிருந்தார்.

சாவகச்சேரி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் குறித்த கட்டுமான பணிகள் நடைபெற்ற போதிலும், பிரதேச சபையின் அனுமதியை பெறாமல் குறித்த் தாதுகோபுரம் கட்டப்பட்டுள்ளது.

இதனை அடுத்து குறித்த கட்டுமான பணிகளை நிறுத்துமாறு சாவகச்சேரி பிரதேச சபை குறித்த விகாராதிபதிக்கு அறிவித்திருந்தது. எனினும் தாதுகோபுர கட்டட நிர்மாணப் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்ற நிலையில், சாவகச்சேரி பிரதேச சபை செயலரினால் நேற்றைய தினம் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இதனை பரிசீலனைக்கு எடுத்து கொண்ட நீதவான் குறித்த விகாராதிபதியை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணையை அனுப்பியுள்ளார்.

இதேவேளை குறித்த விகாரை மற்றும் தாது கோபுர நிர்மாணப்பணிகள் சட்டத்திற்கு முரணான வகையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது என வடக்கு மாகாண சபையிலும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4-9-89)

## பிளாஸ்டிக் அரிசி;...

தார சேவை பணிப்பாளர் நாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிளாஸ்டிக் அரிசி நாட்டின் வர்த்தக நிலையங்களுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்கள் ஊடாக பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. என்றாலும் இது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு எந்த முறைப்பாடும் கிடைத்ததில்லை.

உலகில் பிளாஸ்டிக் அரிசி உற்பத்தி செய்யும் ஒரே நாடாக சீனா இருந்து வருகின்றது. என்றாலும் இறக்குமதி செய்யப்படும் அனைத்துவகையான அரிசியும் பரிசோதனைக்கு உட்பட்டதன் பின்னரே விடுவிக்கப்படுகின்றது. அத்துடன் நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக நிவாரணமாக நாட்டுக்கு கிடைக்கப்பெற்ற அரிசி வகையிலும் இவ்வாறான பிளாஸ்டிக் அரிசி இருந்ததாக இதுவரை எந்த முறைப்பாடும் செய்யப்படவில்லை.

எனவே சமூகவலைத்தளங்களில் தெரிவிக்கப்படுவதுபோன்று நாட்டில் எந்த வர்த்தக சந்தையிலேனும் அல்லது பொதுமக்களின் பாவனைக்கு இவ்வாறான பிளாஸ்டிக் அரிசி அல்லது பிளாஸ்டிக் முட்டை இருப்பதை கண்டால் அது தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு உடனடியாக முறைப்பாடு செய்யுமாறு பொது மக்களை கேட்டுக் கொள்கின்றேன் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)


விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
• அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK-550/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா

வீடு வாடகைக்கு தேவை
யாழ்.நகரை அண்மித்து, சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு:
076 416 4171

கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம்! அழையுங்கள்.
GUNA BEST PC 0779086737
லப்டொப் கணினிகள் திருத்தம் விற்றல் வாங்குதல்
LAPTOP COMPUTERS CCTV CAMERA
REPAIR SALE PURCHASE INSTALLATION
கணினி மதர்போட் சிசிரிவி திருத்தம் விற்றல் பொருத்துதல்
50/12 ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம். 522 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்

FURNITURES & TV'S
SPECIAL OFFER
அதிரடி விலைக் கழிவில் மின் உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள்
எங்குமே இல்லாத விலைக்கழிவில் எம்மிடம்
SOFA SET 32,900/= ONLY 3+1+1
15% OFF
Sony DVD Player 5250/=
Telesonic Air Cooler 16,480/=
LED TELEVISIONS
Samsung 32" -29500/=
Hisence 32" -24500/=
Hisence 24" -17900/=
Tcl 32" -21900/=
Panasonic 32" -28500/=
Sony 32" -31500/=
Sony 5.1 Home Theater ONEYEAR WARRANTY RS 22,500/=
STAND FAN RS.2900.00
SAMSUNG 48" SMART FULL HD RS.109,900/= THREE YEAR WARRANTY
SONY
43" SMART FULL HD RS.82,900 ONLY
48" SMART FULL HD RS.119,900 ONLY
HDMI 3 Years Warranty WiFi YouTube X-Reality
KINGS ELECTRONICS(PVT) LTD
12A, Point Petro Road, Jaffna (வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
021-4546699 mykings.lk kingsjaffna

O/L உடன் மாதம் 25,000/-க்கு மேல் சம்பாதிக்க
யாழ் முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு வெற்றிடங்கள்!
8 அணிகளாக மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பு வழங்கி வெற்றிநடை போடும்
வடக்கின் 1வது ஹொட்டேல் கல்லூரி
SIKARAM ACADEMY SCHOOL of HOSPITALITY
Diploma in Tourism & Hotel Management
3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்
www.sikaram.lk
077 3616 798
021 222 0011

Win Repair
A/C களும், சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும் உங்கள் வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு - 077 9648942

Personal Class-கணினி
13 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
Ms office 2016, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker, Adobe Illustrator CC, Adobe Indesign CC)
*சிறுவர்களிற்கான கற்கைநெறி
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
சிங்கள Typing இலவசம்
* கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.
TP:0779672038 ஆசிரியர்:KRC

கனடாவில் நிரந்தர குடியேறல்/வேலைவாய்ப்பு/கல்வி- கருத்தரங்கு
இனிமேலும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல வேண்டாமே!
EXPRESS ENTRY Student Visa
கருத்தரங்கு நாள் 11-06-2017 காலை 09 மணி
STUDENT VISA
0768226236 49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்
V2 Travels


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை ... யாழ்ப்பாணம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org